படை-01

# குரிசில்

## கிளி/கிளிநொச்சி மத்திய மகா வித்தியாலயம்

(தேசிய பாடசாலை)

மாணவதலைவர்கள் குழாம்–2020

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

படை-01



## கிளி/கிளிநொச்சி மத்திய மகா வித்தியாலயம்
## (தேசிய பாடசாலை)

## மாணவதலைவர்கள் குழாம்-2020

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தாய்க் குரிசில்

| | | |
|---|---|---|
| • காப்பாளர் | : | திரு.ச.பூலோகராஜா(கல்லூரி முதல்வர்) |
| • இணைக்காப்பாளர்கள் | : | திருமதி.தியாகேஸ்வரி கணேஸ்வரநாதன் |
| | | திரு.த.தர்மராஜா(பிரதி முதல்வர்கள்) |
| • பொறுப்பாசிரியர்கள் | : | திருமதி.லோ.திருக்குமார் |
| | | திரு.இ.ஜெயசுதர்சன் |
| • தலைவர் | : | செல்வன். கணேசன் கீதசஞ்சாரன் |
| • உபதலைவர் | : | செல்வி.சிவகுமார் சங்கவி |
| • இதழாசிரியர் | : | செல்வி.அருளம்பலம் அருளாம்பிகை |
| • துணைக்குழு | : | திருமதி.வி.செல்வநாதன் |
| | | செல்வன். ப.சுகுணதாஸ் |
| | | செல்வன்.க.ஆரணியன் |
| | | செல்வன்.த.கஜேந்திரன் |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குரிசிலின் உள்ளே..............................


1] அரசாங்க அதிபரின் வாழ்த்துச் செய்தி i
2] வலயக்கல்விப் பணிபாளரின் வாழ்த்துச் செய்தி ii
3] ஆலயக் குருக்கள் அவர்களின் ஆசிச் செய்தி iii
4] அருட்தந்தை அவர்களின் ஆசிச் செய்தி iv
5] கல்லூரி முதல்வரின் வாழ்த்துச் செய்தி v
6] முன்னாள் அதிபரின் வாழ்த்துச் செய்தி vi
7] பிரதி அதிபரின் வாழ்த்துச் செய்தி vii
8] பிரதி அதிபரின் வாழ்த்துச் செய்தி viii
9] இதழாசிரியரின் வாழ்த்துச் செய்தி ix
10] பொறுப்பாசிரியரின் வாழ்த்துச் செய்தி x
11] பொறுப்பாசிரியரின் வாழ்த்துச் செய்தி xi
12] பத்திராதிபதியின் எண்ணப் பதிவு xii
13] உப பத்திராதிபதியின் சிந்தனையிலிருந்து xiii
14] வாசிப்பு மனிதனைப் பூரணமாக்கும் 1-3
15] பெண்மையே எழு 4
16] நினைவுகள் சுமந்த பள்ளித் தாய் 5
17] வலிகள் சுமந்த வரிகள் 6
18] தனிநாயகம் அடிகள் 7-8
19] மகத்தான ஆசிரியப் பணி 9-11
20] காலம் செய்த கோலமா? அல்லது தமிழனுக்கு வந்த சாபமா? 12-13
21] வாழ்வை வாசிப்போம் 14
22] என் கல்லூரி அன்னை 15
23] நட்பே வென்றது 16-17
24] தமிழ்ப் பொன்மொழிகள் 18-19
25] மாணவத்தலைவர்களே 20
26] மயானத்து தருக்கள் 21
27] உண்மையான மகிழ்ச்சி 22
28] காலம் எனும் கவின்சிற்பி 23-24
29] பூரணமனிதனாய் வாழ்ந்திடக் கற்றல் 25-27
30] பள்ளியும் நட்பும் 28-29


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | |
|---|---|
| 31) ஈரநிலங்களைப் பேணுவோம் | 30 |
| 32) இயற்கையின் ஏமாற்றம் | 31 |
| 33) கோவிட் காலம் ஒரு பார்வை | 32-34 |
| 34) My mother | 35 |
| 35) மாணவத் தலைமைத்துவம் | 36-37 |
| 36) பொன்மொழிகள் | 38-39 |
| 37) பள்ளிக்கூடம் | 40-41 |
| 38) இயற்கையை காத்து இவ்வுலகின் ஆயுளைக் கூட்டுவோம். | 42 |
| 39) வகுப்பறை என்னும் கருவறை | 43 |
| 40) மாபெரும் இலட்சியம் | 44 |
| 41) தற்காலத்தின் விஞ்ஞான வளர்ச்சி | 45-46 |
| 42) பள்ளிநாட்கள் | 47 |
| 43) கல்வியின் மகத்துவமும் அவசியமும் | 48-49 |
| 44) கல்லூரி வாழ்க்கை | 50-51 |
| 45) அனைவருக்கும் கல்வி | 52 |
| 46) காந்தியின் பொன்மொழிகள் | 53 |
| 47) பேண்தகு பாடசாலை அபிவிருத்தித் திட்டம் | 54-58 |
| 48) பாடசாலை நினைவுகள் | 59-60 |
| 49) நல்ல நட்பின் வலிமை | 61-62 |
| 50) கற்கையின் போது எவ்வாறு கவனம் செலுத்துதல் | 63-64 |
| 51) விவேகானந்தர் பொன்மொழிகள் | 65-66 |
| 52) நூலின்பம் தரும் பேரின்பம் | 66-67 |
| 53) உலக மாற்றத்தை தடுக்கும் உவமையணிகள் | 68-69 |
| 54) உன்னத அன்பு | 70-71 |
| 55) பாடசாலையில் கழியும் எமது உன்னத காலம் | 72-73 |
| 56) இன்றைய இளைஞர்களும் எதிர்காலமும் | 74-75 |
| 57) மனிதம் | 76-77 |
| 58) Computer virus | 78-81 |
| 59) ஏழையின் ஆசை | 82 |
| 60) விதி | 83-84 |
| 61) பொன்மொழிகள் | 85 |
| 62) முயற்சி | 86 |
| 63) நன்றியும் நிறைவும் | 87 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாடசாலைக் கீதம்

வளம் நிறையும் கழனி கல்வி எழில் நிறையும் எங்கள் அன்னை

கிளிநொச்சி மத்திய மகா வித்தியாசாலை வாழிய

அழகு தமிழ் கலைகளோடு கல்வி நிதம் எமக்கு ஊட்டி

அன்பொழுக பண்பொழுக இன்புறுக அன்னையாக

(வளம் நிறையும்)

முத்தமிழும் ஆங்கிலமும் மூதறி வெண் விஞ்ஞானம்

வர்த்தகமும் வளர் கலைகள் வல்ல விளையாட்டும் நல்கி

எத்திசையும் ஏற்றிடவே எங்கும் சமதர்மம் காட்டி

சித்தமதில் நல்லவராய் வாழ வழிகாட்டும் அன்னை

(வளம் நிறையும்)

எண்ணும் எழுத்தும் அறிவித்த இறையவனைப் பணிவோம்

நண்ணும் வித்தியாசாலை நல்லதிபரைப் பணிவோம்

கண்ணும் கருத்துமாய் எமக்கு கல்வி தந்தாரைப் பணிவோம்

பண்ணும் பக்தியோடு மகா வித்தியாலயத்தைப் பணிவோம்

(வளம் நிறையும்)

தெய்வபக்தி, தேசபக்தி தெளிந்த ஞான குருபக்தி

உய்யும் வழிகாட்டி எம்மை உத்தமராய் வாழவைப்பாள்

செய்யும் பணி யாவையுமே செம்மையுடன் செய்ய வைப்பாள்

வையகத்துள் நல்லவராய் வாழ வழிகாட்டும் அன்னை

(வளம் நிறையும்)

பிரம்மஸ்ரீ ந.வீரமணி ஐயர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மகுட வாசகம்

"கற்று ஆய்ந்து ஒழுகு"

## தொலைநோக்கு

"நவீன தொழில்நுட்ப உத்திகளுக்கு முகங்கொடுக்கக் கூடிய அறிவும் திறனும் சிறந்த பண்பும் கொண்ட சமூகம்"

## பணிக்கூற்று

"நவீன கல்வி உத்திகள் மூலம் எதிர்காலத்தின் சவால்களுக்கு ஏற்ப மேம்பாடடைந்த ஒரு சமூகத்தை அர்ப்பணிப்புடன் உருவாக்குதல்"

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாவட்ட அரசாங்க அதிபரின் வாழ்த்துச் செய்தி

## பேரிடர் கால பெறுபேறு



கிளி/கிளிநொச்சி மத்திய மகாவித்தியாலயம் (தேசியப் பாடசாலை) 2020 கொரோனாக் காலப்பகுதியை எவ்வாறான தொரு நம்பிக்கை தரும் செயற்பாட்டிற்குப் பயன்படுத்தியிருக்கிறது என்பதன் சாட்சியாக வெளிவரும் **"குரிசில்"** வருடாந்த இதழுக்கு வாழ்த்துச் சொல்லுவதிலே நான் நிறைவடைகின்றேன். பள்ளியின் முன்மாதிரியான மாற்றங்களுக்குத் தலைமை தாங்கும் ஆசிரியக் குழுவும், மாணவத் தலைவர்களும் இணைந்து படைத்திருக்கும் இவ்விதழில் கலை, இலக்கியப் படைப்புக் களும், பெரிதும் பாராட்டத்தக்க சிறுகதைகள், கவிதைகள், என்பவற்றுடன் கட்டுரை களும், ஆசிரிய ஆக்கங்களுமாக இச்சிறப்பிதழில் வெளிவந்துள்ளது.

இது ஒரு நம்பிக்கை தரும் செயற்பாட்டின் இடுகுறியாகும். பேரிடர்கள் காலத் துக்குக் காலம் மனிதனைத் தாக்கி வந்திருக்கிறன. இவ்விடர்மிகு காலப்பகுதியிலிருந்து மக்களை நம்பிக்கையோடு மீள இயல்பு நிலைக்குக் கொண்டுவரும் பணியில் பள்ளிகள் ஆற்றிவரும் பங்கு பாராட்டிற்குரியது. கிளிநொச்சியின் மதிப்புமிக்க மாணவர்கள் பலரை உருவாக்கிய பெருமையுடைய மத்திய மகாவித்தியாலயத்தின் இந்த முயற்சிக்கு பாராட்டுத் தெரிவிப்பதில் நானும் பெருமை கொள்கின்றேன். இப்பாடசாலையின் **பழைய மாணவியாக** இருந்த அந்த நினைவுகளுடன் முயற்சியில் ஈடுபட்ட அதிபர், ஆசிரிய குழாத்தினர் மற்றும் மாணவத் தலைவர்களுக்கு எனது உளமார்ந்த பாராட்டுக்கள்.

நன்றி.

**திருமதி.ரூபவதி கேதீஸ்வரன்,**
**மாவட்ட செயலாளர் / அரசாங்க அதிபர்,**
**கிளிநொச்சி மாவட்டம்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வலயக்கல்விப் பணிப்பாளரின் ஆசிச்செய்தி



கிளி/கிளிநொச்சி மத்திய மகாவித்தியாலயத்தின் 2020ஆம் ஆண்டு பாடசாலையில் மாணவத் தலைவர்களாக கடமையாற்றிய மாணவத்தலைவர்களால் **"குரிசில்"** என்னும் பெயரில் வெளிவரும் முதற் பதிப்பானது தனது கன்னிப் பயணத்தினை ஆரம்பித்து ஒரு மைல்கல்லைப் பதித்துள்ள இவ்வேளை அந்நூலுக்கான வாழ்த்துச் செய்தியினை வழங்குவதில் பெருமையடைகின்றேன்.

சமுதாயத்தில் பாடசாலையின் நற்பெயரைக் கட்டியெழுப்புவதில் மாணவதலைவர்களும் பெரும் தூண்களாக விளங்குகின்றனர். அந்த வகையில் மாணவர் களின் எண்ணச்சிதறல்களின் வெளிப்பாடாகவும், மொழி விருத்தியின் ஆளுமையான கருத்தாடல்களாகவும் ஒழுங்குபடுத்தி ஆளுமைமிக்கதான **"குரிசில்"** எனும் நூலை வெளியிடுவது என்பது பாராட்டிற்குரியது.

மேலும் இந்நூலுக்கான ஆக்கங்களை மாணவர்கள் 2020ஆம் ஆண்டு Covid 19 ஊரடங்கு காலத்தில் தங்களின் தொழில்நுட்ப இணையத்தளப் பாவனையினூடாக சேகரித்து ஒழுங்குபடுத்தி இன்று புத்தக வடிவமாக மாற்றியமைத்த மலர்க்குழுவின ருக்கும் இம்மலர் குழுவினரை சரியான முறையில் வழிப்படுத்திய கல்லூரியின் முதல்வர் அவர்களையும், கல்லூரிச் சமூகத்தினரையும் வாழ்த்துவதோடு மேலும் ஒவ்வொரு வருடமும் இந்நூலை மாணவத்தலைவர்கள் வெளியிட்டு தமது ஆளுமையையும், தலைமைத்துவத்தையும் வெளிப்படுத்த வேண்டும் என்பதை அன்புரிமையுடன் வேண்டு கின்றேன்.

**"வாழ்த்துகள் தொடரட்டும்"**

நன்றி.

**திரு.கி.கமலராஜன்,**
**வலயக்கல்விப் பணிப்பாளர்,**
**கிளிநொச்சி.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆலயக் குருக்களின் ஆசிச் செய்தி



இயற்கை எழில் மிகுந்த கிளிநொச்சி மாவட்டத்திலே கல்வியிலே சிறந்த பாடசாலையாக மிளிர்கின்ற கிளிநொச்சி மத்திய மகாவித்தியாலயத்தின் 2020 ஆம் ஆண்டு மாணவத் தலைவர் அணி கொவிட்-19 காலத்தில் படைக்கப்பட்ட கலாச்சார அம்சங்களை உள்ளடக்கிய பொக்கிசமாக "குரிசில்" எனும் நாமம்கொண்டு வெளியிடப்படுகின்ற இம்மலருக்கு ஆசி வழங்குவதையிட்டு மகிழ்ச்சியடைகின்றேன்.

இம்மாணவர்களின் கலைப்படைப்பானது அவர்களின் சிறந்த ஆளுமைகளை வெளிப்படுத்தி நிற்பது மட்டுமல்லாது ஏனையோருக்கும் ஒரு முன்மாதிரியான செயற்பாடாக முன்னெடுக்கப்பட்டது. கொவிட் -19 காலப்பகுதியில் நாடு முழுவதும் ஊரடங்கு பிறப்பிக்கப்பட்டு மக்கள் அச்சமடைந்திருந்த போதிலும் அம்மாணவர்களின் முயற்சியும் ஆளுமையும் தளர்வடையாது இவ் ஆக்கங்களைப் படைத்திருக்கின்றார்கள்.

இப்பாடசாலை அணி 2020 மாணவதலைவர்களின் அணி முயற்சியானது இவ்வாண்டு கலைப்பொக்கிசமாக எல்லோர் கரங்களிலும் மலர இருக்கின்றது. "குரிசில்" மலர் சிறக்கவும் மலர் வெளியீடானது சிறந்த முறையில் இடம்பெறவும் ஆக்கங்களை படைப்பித்த மாணவதலைவர்களுக்கும் அவர்களின் ஆளுமையை வெளிப்படுத்த உறுதுணையாக செயற்பட்ட அதிபர், ஆசிரியர்கள், பெற்றோர்கள் அனைவருக்கும் இறைவன் திருவருளோடு கூடிய எனது மனம் நிறைந்த நல்லாசிகளை வழங்கி மகிழ்வடைகின்றேன்.

நன்றி.

"சாம ஸ்ரீதேச மானிய"
நாக நாத சிவகலாநிதி
சிவஸ்ரீ அமிர்த - ஸ்ரீஸ்கந்தராஜகுருக்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கிளிநொச்சி புனித திரேசாள் ஆலய பங்குத்தந்தை அருட்பணி யோ.அ.யேசுதாஸ் அடிகளாரின் ஆசிச் செய்தி



கிளிநொச்சி கல்வி வலயத்தில் மிகப் பிரபல்யமான பாடசாலைகளில் ஒன்றாக விளங்கும் கிளி/கிளிநொச்சி மத்திய மகா வித்தியாலயத்தின் சகல துறை செயற்பாடுகளும் சிறந்த மற்றும் தனித்துவமான முறையில் முன்னோக்கி செல்கின்றமை நாம் அனைவரும் அறிந்ததே. அந்த வகையில் இக்கல்லூரியின் மாணவத் தலைவர்களால் வெளிவரும் சஞ்சிகை மாணவர்களின் ஒன்றிப்பையும், ஆழமான கருத்தையும் கொண்டு வரும் என்பது எனது நம்பிக்கை.

அத்தோடு இச்சஞ்சிகை மாணவர்களது வாசிப்பு ஆர்வத்திற்கு களமாக அமைந்து சமூகத்தில் புத்திஜீவிகள் உருவாக்கப்பட உறுதுணையாக அமையும். இம் மன்றத்தினால் வெளிவரும் இச்சஞ்சிகை மாணவர்களின் சிந்தனைத்திறனுக்கும் படைப்பாற்றலுக்கும் சான்று பகர்வனவாக அமையும். இத்தகைய முயற்சி தொடர்ந்து புதிய ஆக்கங்களாக பிறந்து மாணவர்களின் வளர்ச்சிக்கு படிக்கற்களாய் அமைய ஆசிக்கின்றேன்.

நன்றி.

**அருட்பணி யோ.அ.யேசுதாஸ்,**
**புனித திரேசாள் ஆலயம்,**
**கிளிநொச்சி முதல்வர்,**
**கிளிநொச்சி.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முதல்வரின் வாழ்த்துச் செய்தி



கிளி/கிளிநொச்சி மத்திய மகாவித்தியாலயத்தின் மாணவத் தலைவர்களும், ஒழுக்காற்றுக் குழு ஆசிரியர்களும் இணைந்து 2020 ஆம் ஆண்டில் Covid-19 உலகளாவிய இடர்மிகுந்த காலத்தில் **"குரிசில்"** என்னும் நூலைப் படையல் செய்வதையிட்டு மட்டில்லா மகிழ்வடைகின்றேன்.

கிளிநொச்சி மாநகரில் தேசிய பாடசாலையாக திகழும் இக் கல்லூரியை 26.02.2020 இல் பொறுப்பெடுத்த வேளையில் மாற்றத்திற்கான தூர நோக்கொன்று எனது எண்ணத்தில் உயிரோட்டமாக நிழலாடியது. இருந்தும் துரதிஸ்ரம் எமது நாட்டிலும் Covid-19 தொற்றுநோய் பரவியமையால் பாடசாலையின் கற்றல் கற்பித்தல் இணைப் பாடவிதமானச் செயற்பாடுகளை முன்கொண்டு செல்ல முடியாமை ஏற்பட்டது.

இருந்தும் இடர்மிகுந்த காலத்திலும் இயலுமானவரை கல்வி நடவடிக்கைகளை சிறப்பாகச் செயற்படுத்தினோம். இன்று எமது மாணவர்கள் சமூகத்தில் நுழைந்து வேலை உலகினுள் பிரவேசிப்பதற்கு தனியாக க.பொ.த(சா/த), க.பொ.த(உ/த) பெறுபேறுகளோ போதியது அல்ல மேலதிகமாக பல்வேறு இணைப்பாடவிதானச் செயற்பாடுகளின் பெறுபேறுகளும் தேவைப்படுகின்றது. இதனை நோக்காகக் கொண்டு பொறுப்பாசிரியர் ஊடாக மாணவத் தலைவர்களை ஊக்கப்படுத்தினோம். அதன் பெறுபேறே உங்கள் கைகளில் தவழும் **"குரிசில்"**

இக்கல்லூரியின் வரலாற்றில் மாணவ தலைவர்களின் எண்ணத்தில் உதித்த சிந்தனையை நூல்வடிவில் படையல் செய்வதுடன் இந்நூலானது தொடர்ச்சியாக வருடா வருடம் வெளிவரவேண்டும் மாணவர்களும், ஆசிரியர்களும் இதன் மூலம் படைப்பாளி களாக மிளிரவேண்டும் என வாழ்த்துகின்றேன்.

நன்றி.

**திரு.ச.பூலோகராஜா,**
**அதிபர்,**
**கிளி/கிளிநொச்சி மத்திய மகாவித்தியாலயம்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முன்னாள் அதிபரின் வாழ்த்துச் செய்தி



கிளி/கிளிநொச்சி மத்திய மகாவித்தியாலய மாணவத் தலைவர்களால் வெளியிடப்படும் **"குறிசில்"** சஞ்சிகைக்கு வாழ்த்துச் செய்தி வழங்குவதில் மட்டற்ற மகிழ்ச்சியடைகின்றேன். இத்தகைய வெளியீடு அவர்களின் கல்லூரி வாழ்வின் இருப்பினை அடையாளப் படுத்தவும் ஞாபகப்படுத்தவும் துணைநிற்கும் என்பதில் எதுவித ஐயமும் இல்லை.

எமது வித்தியாலத்தில் **முதன் முறையாக** மாணவத் தலைவர்களால் மலர் வெளியிடப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது. மாணவர்களது முயற்சி தொடரவேண்டும் என்பதே எனது ஆசை. மாணவத் தலைவர்களினதும், ஆசிரியர்களினதும் ஆக்கங்களைத் தாங்கி வரும் **"குறிசில்"** தங்குதடையின்றி என்றும் புலரவேண்டும்.

மாணவத் தலைவர்கள் வித்தியாலத்திலே பல்வேறு பணிகளிலும் முன்மாதிரியாக விளங்குகின்றனர். வித்தியாலயத்தில் இடம் பெறும் இல்ல விளையாட்டுப் போட்டி தொடக்கம் விழாக்கள் வரை தமது பங்களிப்பினை எமது வித்தியாலய அன்னைக்கு வழங்கிவருகின்றனர். ஒவ்வொருவருடமும் ஆசிரியர் தினத்தினை நன்றியுடன் கொண்டாடிவருவதும் குறிப்பிடத்தக்க விடயமாகும்.

தொழில்நுட்ப சாதனங்களின் பயன்பாடு அதிகரித்து வரும் இக்காலகட்டத்தில் மாணவர்களது சுய ஆக்கத்திறன் தேடல் என்பன அருகிவருகின்றமை நோக்கற்பாலது. இத்தகைய சூழலில் மாணவர்கள் தமது ஆக்கத்திறனை வளர்க்கும் நோக்குடன் மலருக்குத் தம்மாலான பங்களிப்பினை வழங்கியுள்ளார்.

எதிர்காலத்தில் பல்வேறு துறைகளில் சாதனை படைக்கப் போகும் மாணவ தலைவர்களது கன்னி முயற்சியைப் பாராட்டுவதுடன் தொடர்ந்தும் இம்முயற்சி தடைகளின்றித் தொடர எல்லாம் வல்ல இறைவனை வேண்டுகின்றேன்.

நன்றி.

**முன்னாள் அதிபர்,**
**திரு.முத்துராஜா ரவீந்திரன்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிரதி அதிபரின் வாழ்த்துச் செய்தி



கிளி மாநகரின் கல்வி கிளை பரப்பிநிற்கும் கிளிநொச்சி மத்திய மகாவித்தியாலத்தின் முத்துக்களான மாணவ முதல்வர்களால் வெளியிடப்படும் விடியலை நோக்கிய **"குரிசில்"** என்ற நூல் சிறப்பாக வெளிவர முதலில் என் வாழ்த்துக்கள்.

1927ஆம் ஆண்டு உருவாக்கப்பட்ட எமது பாடசாலையில் **முதல்** நூல் வடிவ விடியலாய் வெளிவரும் **இந்த "குரிசில்"** என்ற சஞ்சிகை பல்வேறுபட்ட மாணவ ஆக்கங்க ளையும், திறன்களையும் தாங்கி கிளி மண்ணில் தொடர்ச்சியாக உலாவர வேண்டும். என்பதே எனது அவா

**இ**லை மறை காயாக எம் மாணவர்களிடம் மறைந்திருக்கும் திறன்களையும் எம் பாடசாலையின் வளங்களையும் புலப்படுத்த சிறந்த தளமாக அமைய **"குரிசில்"** என்ற இந்த நூல் வழிவகுக்கும் என்பதே எனது எண்ணம்.

எனது கல்லூரியில் மாணவர்களின் படைப்புக்கள் **"குரிசில்"** போன்ற பல நூல்கள் மூலம் வெளிவர எனது வாழ்த்துக்களையும் ஆசியையும் தெரிவிப்பதில் மிக்க மகிழ்ச்சி.

நன்றி

**திருமதி.தியாகேஸ்வரி கணேஸ்வரநாதன்,**
**பிரதி அதிபர்.**
**கிளி/கிளிநொச்சி மத்திய மகாவித்தியாலயம்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிரதி அதிபரின் வாழ்த்துச் செய்தி




கிளி/கிளிநொச்சி மத்திய மகாவித்தியாலயத்தின் மாணவ தலைவர்களின் ஆக்கத்தினைத் தாங்கிவரும் சஞ்சிகைக்கு வாழ்த்துத் தெரிவித்துக் கொள்வதோடு. உலகில் தற்போது ஏற்பட்டிருக்கும் Covid-19 ஆனது 2020ஆம் ஆண்டில் தீவிரமடைந்து பல உயிர்களைக் காவுகின்ற காலத்தில் இலங்கையில் பல பாடசாலைகள் மூடப்பட்டிருந்தவேளையிலும் மாணவர்கள் சுய முயற்சியாக கல்வி கற்றுக்கொண்டிருந்த வேளையில் வீட்டிலிருந்தே தமது ஆக்கங்களை எழுதி சஞ்சிகையாக வெளிவருவதையிட்டு மகிழ்ச்சியடைவதோடு தொடர்ந்தும் எதிர்காலத்திலும் வெளிவர வாழ்த்துகின்றேன்.

இம் மாணவர்களின் கன்னி முயற்சி ஏனையவர்களுக்கு ஒரு வழிகாட்டியாக அமையும் என்பது எனது நம்பிக்கையாகும்.

நன்றி

**திரு.த.தர்மராஜா,**
**பிரதி அதிபர்,**
**கிளி/கிளிநொச்சி மத்திய மகாவித்தியாலயம்.**





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இதழாசிரியரின் இதயத்திலிருந்து...

"என்னை நன்றாக இறைவன் படைத்தனன்
தன்னை நன்றாக தமிழ் செய்யுமாறே"



எமது வித்தியாலயம் கல்வியிலும் கலைகளிலும் மேன்மை யுற்றுத் தனக்கெனத் தனி முத்திரையைப்பதித்து விளங்கி வருகின்றது. வித்தியாலத்தின் மாணவமுதல்வர்களால் சஞ்சிகை ஒன்று வெளியிடப்பட வேண்டும் என்ற பேரவா நீண்ட காலமாக இருந்து வந்தது. இன்று அந்த எண்ணம் ஈடேறும் காலம் கனிந்துள்ளது. மாணவ முதல்வர்களின் ஆக்கங்களைத் தன்னகத்தே கொண்டு **"குரிசில்"** என்ற நாமத்துடன் குன்றா வளமுடன் சஞ்சிகை வெளிவருவதில் மட்டற்ற மகிழ்ச்சியடைகின்றேன்.

கல்விக் கொள்கைகளும், கலைத்திட்டங்களும் காலங்காலமாக மாற்றமுற்று வளர்ந்து வருகின்றன. தற்போதைய கால மாற்றத்திற்கு ஏற்ப மாணவர்களது சிந்தனை களும், திறன்களும் மாற்றமுற்று வருகின்றன. இனிய தமிழ்மொழியிலே எளிய நடையிலே **"குரிசில்"** எனும் இளந்தளிர் ஒன்று வெளிவருகின்றது.

மாணவமுதல்வர்களின் பல்தரப்பட்ட ஆக்கங்களுடன் மலர இருக்கும் மலருக்கு அதிபரின் ஊக்கமும் பிரதி அதிபர்களின் ஆலோசனைகளும் உறுதுணையாக அமைந் துள்ளன. வருடந்தோறும் மலர்ந்து மணம் பரப்ப வேண்டும் என்பதே எனது அவா.

வாசிப்புப் பழக்கம், சுய ஆக்கத்திறன் என்பன அருகிவரும் காலகட்டத்திலே தமது ஆளுமைகளை, எழுத்தாற்றல்களை,ஆக்கங்களை வடிவமைத்துத் தந்த அனைவருக்கும் நன்றிகள்.

மாணவர்களின் சுய ஆக்கங்கள் வெளிவருவதுடன் இனி வருங்காலங்களில் மாற்றங்கள் பலவற்றைத் தாங்கி புதுப்பொலிவுடன் வெளிவரவேண்டும். வெறுங்கற்க ளாய் இருந்த மாணவச் செல்வங்கள் தம்மைத்தாமே செதுக்கிச் சிலையாக மாற **"குரிசில்"** வழி சமைத்தமை குறிப்பிடத்தக்கது. இதனை இனி வரும் மாணவ சமூகம் கையேற்று வளப்படுத்தும் என எதிர்பார்க்கின்றேன்.

**"குரிசில்"** குன்றில் இட்ட தீபமாய் ஒளிர வேண்டும் என்பதில் உறுதுணையாக உழைத்த உள்ளங்களுக்கும் வாழ்த்துக்கள். 2020 ஆம் ஆண்டு மாணவ முதல்வர்க ளால் அடித்தளமிடப்பட்ட **"குரிசில்"** உயர்ந்து விளங்க இறை ஆசி வேண்டி நல்லாசி யினையும், வாழ்த்துக்களையும் தெரிவித்துக் கொள்கின்றேன்.

**செல்வி. அருளம்பலம். அருளாம்பிகை,**
**ஆசிரியை.**
**கிளி/கிளிநொச்சி மத்திய மகாவித்தியாலயம்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாணவத்தலைவர்களின் பொறுப்பாசிரியரின் வாழ்த்துச் செய்தி



"தோன்றிற் புகழோடு தோன்றுக" என்ற வள்ளுவப் பெருந்தகையின் வாக்கிற்கிணங்க எமது பாடசாலை மாணவ தலைவர்களால் வெளியிடப்படும் இந்நூலுக்கு வாழ்த்துச் செய்தி கூறுவதில் பெருமகிழ்வடைகின்றேன். எமது பாடசாலை அதிபர், ஆசிரியர்கள், மாணவ தலைவர்களின் ஒன்றிணைந்த கருத்துக்களுடன் அவர்களது ஆக்கமும் ஊக்கமும் நிறைந்த எண்ணத்தில் **"குரிசில்"** எனும் நூல் வெளியிடப்படுகின்றது.

14 ஆண்டுகள் எமது பாடசாலையில் கல்விகற்று இங்கேயே தமது சாதனைகளை நிலைநாட்டிய மாணவர்கள் பணிவு, நற்பண்பு, ஒழுக்கம் என்பவற்றில் மேல்நோக்கி நின்றவர்கள் அவர்களது விடாமுயற்சியின் பலனாக வெளியிடப்படுகின்றது. **இவ்வாறு எதிர்வருகின்ற காலங்களிலும் எமது மாணவர்கள் துடிப்புடன் செயற்பட முன்மாதிரியாக இருந்துள்ளதைப் பாராட்டி வாழ்த்துகிறேன்.**

**"நன்றே செய்க அதனை இன்றே செய்க"**

நன்றி.

**திரு.இ.ஜெயசுதர்சன்,**
**வரலாற்று ஆசிரியர்(SRJ.சுதன்)**
**பொறுப்பாசிரியர் (மாணவ தலைவர்)**
**கிளி/கிளிநொச்சி மத்திய மகாவித்தியாலயம்.**





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாணவத்தலைவர்களின் பொறுப்பாசிரியரின் வாழ்த்துச் செய்தி



கிளி/கிளிநொச்சி மத்திய மகாவித்தியாலயத்தின் மாணவத் தலைவர்களின் ஆக்கங்களை உள்ளடக்கி வெளிவரும் **"குரிசில்"** எனும் நூல் எமது பாடசாலை வரலாற்றில் முதன் முதலாக மாணவ தலைவர்களால் வெளியிடப்படும் கன்னி வெளியீடாக அமைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

எமது கல்லூரியின் மாணவத் தலைவர் வரிசையில் 2020 ஆம் வருட உயர்தர மாணவர்களின் சிந்தனையில் உதித்த மிகப்பெரிய பொக்கிசமே **"குரிசில்"** எனும் இந்நூல் ஆகும். மாணவத் தலைவர்களின் சிந்தனைகளையும் எமது பாடசாலையின் பெறுமதி மிக்க ஆசிரியர்களின் ஆக்கங்களையும் தாங்கி வெளிவருகின்றது.

இந்நூல் வெளிவர தளராத முயற்சி எடுத்து முன்னின்று உழைத்த 2020 ஆம் வருட **சிரேஸ்ட மாணவ தலைவன் கணேசன் கீதசஞ்சாரனுக்கு** எனது வாழ்த்துக்களைத் தெரிவிப்பதோடு இந்நூல் வருடா வருடம் இன்னும் சிறப்பான ஆக்கங்களைத் தாங்கி வெளிவர வேண்டும் என இறைவனைப் பிரார்த்தித்து ஆசி வழங்குகின்றேன்.

நன்றி

**திருமதி. லோகநந்தினி திருக்குமார்.**
**உடற்கல்வி ஆசிரியர்.**
**பொறுப்பாசிரியர் (மாணவ தலைவர்)**
**கிளி/கிளிநொச்சி மத்திய மகாவித்தியாலயம்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பத்திராதிபதியின் எண்ணப்பதிவு...



கிளிநொச்சி மண்ணில் வேரூன்றி பல தசாப்தங்கள் கடந்து இம் மண்ணுக்கும் இவ்வுலகிற்கும் பல அறிஞர்களையும், தலைவர்களையும் சமுதாயச் சிற்பிகளையும் வழங்கும் கிளிநொச்சி மத்திய மகாவித்தியாலயம். புதியதோர் மாற்றத்திற்காய் ஓர் அச்சுப்பிரதியை பிரசுரிக்கின்றது. உண்மையில் எமது கல்லூரி யில் மாணவத் தலைவர்களது தலைமைத்துவத்தையும் தாண்டி அவர்களது மொழிசார் திறன்களையும் வெளிப்படுத்தும் முகமாகவே இந்த **"குறிசில்"** எனும் படைப்பு ஆக்கப்பட்டுள்ளது.

2020 ஆம் ஆண்டில் ஏற்பட்ட கொவிட் -19 காலத்தில் வீடுகளில் இருந்து பொழுதுகளை முறையாக பயன்படுத்தியதன் வெளிப்பாடே இந்த நூல். இது மாணவ தலைவர்களால் உருவாக்கப்படும் **"கன்னி"** வெளியீடு என்பதில் சிரேஸ்ட மாணவ தலைவன் என்ற ரீதியில் பெருமையும் உவகையடைகின்றேன். அதிலும் ஆக்கங்களை வீடுகளிலிருந்தாவாறே தொழில்நுட்ப உதவியுடன் பெற்றமை குறிப்பிடத்தக்கது.

எதிர்வரும் வருடங்களிலும் இந்நூலின் தொடர்ச்சிகள் வெளிவரும் என்பதில் எவ்வித ஐயமும் இல்லை. இவ்வாறான வாய்ப்புக்களை ஏற்படுத்தி பாடசாலைச் சமூகம் தொடர்ச்சியான பங்களிப்பை வழங்கவேண்டும் என்பதே எந்தன் அவா.

**"மாணவர்களின் முன்னேற்றமே பாடசாலையின் கௌரவம்"**

நன்றி

**செல்வன். கணேசன் கீதசஞ்சாரன்,**
**சிரேஸ்ட மாணவ தலைவன்.[2020]**
**கிளி/கிளிநொச்சி மத்திய மகாவித்தியாலயம்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உப பத்திராதிபதியின் சிந்தனையிலிருந்து...



எமது பாடசாலையில் வெளியிடப்படுகின்ற **"குறிசில்"** பனுவலின் உப பத்திராதிபதி என்ற வகையில் பெரிதும் உவகை யடைகின்றேன். இப்பனுவலானது பல இன்னல்களுக்கு மத்தியில் எங்களுக்கும் உங்களுக்கும் கிடைக்கப்பெறுகிறது. இதற்காக ஆக்கம் திரட்டிய விதம் அளப்பெரியது. கிளி/கிளிநொச்சி மத்திய மகா வித்தியாலய வரலாற்றில் வெளியிடப்படும் கன்னி வெளியீடு என்பதில் பெருமிதம் அடைகின்றேன்.

Covid 19 எனும் தொற்று நோய்க்காலத்தில் இவ்வாறான பனுவல் தோற்றம் பெறுவது சாலச்சிறந்தது. இப்பனுவலில் மாணவத்தலைவர்களினதும் ஆசான்களினதும் ஆக்கங்கள் இணைந்து வெளிவருகின்றது. இப்பனுவல் மாணவர் மத்தியில் புதைந்து கிடக்கின்ற ஆளுமை, தலைமைத்துவம், படைப்பாற்றல், என்பவற்றை உயர்த்தும் எழுத்துருவமாகும். இது வாசிப்பவர்களது அகக்கண்ணில் ஐயம் தெளிவுறும் என்பதில் எவ்வித ஐயமும் இல்லை.

எனவே, இப்பனுவல் வெளிவர உதவிய அனைத்து நெஞ்சங்களுக்கும் இதன் உப பத்திராதிபதி என்ற வகையில் நன்றி கூறுகின்றேன். மேலும் பாடசாலைச் சமூகம் தொடர்ச்சியாக இப்பனுவலின் வெளியீட்டை மேற்கொள்ள அனைவரது ஒத்துழைப்பும் என்றென்றும் நிலைத்திருக்க வேண்டிநிற்கின்றேன்.

நன்றி.

**செல்வன். பத்மநாதன் சுகுணதாஸ்.**
**உப பத்திராதிபதிபர்.**
**கிளி/கிளிநொச்சி மத்திய மகாவித்தியாலயம்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாசிப்பு மனிதனைப் பூரணமாக்கும்

*ஆக்கம்,*
*பா.எழில்வதனன் (தரம்-11)*

"வாசிப்பதால் மனிதன் பூரணமடைகிறான்" என்பது அறிஞர்களின் கருத்தாகும். வாசிப்பு ஒரு விலைமதிப்பற்ற சாதனமாகும். ஆனால் தற்போது தொழில் நுட்பப் புரட்சியில் சுழன்று கொண்டிருக்கும் இவ்வுலகில் வாசிப்பு என்ற பொன் மொழி அருகிவருகின்றது. வாசிப்பதனால் மனிதன் பெறக்கூடிய முழுமையான அறிவை இயந்திர சாதனங்களால் கொடுத்துவிட முடியாது என்பதே உண்மை.

"கண்ணுடையார் என்போர் கற்றோர் முகத்திரண்டு புண்ணுடையோர் கல் லாதவர்" என்பது வள்ளுவர் வாக்காகும். கற்றவரே இரண்டு கண்களுடையவர் ஆவார். கல்லாதவர் விலங்கிற்கு ஒப்பானவர். "மனிதர்கள் கல்வி கற்கவேண்டும் ஏனெனில் அவர்கள் மனிதர்கள்" என்பது ரஷ்ய பழமொழி. ஆகவே மனிதன் மனிதனாக வையத்துள் வாழ்வாங்கு வாழ்வதற்கு கற்றலே துணைபுரிகின்றது. கருவறையிலிருந்து கல்லறைவரையும் கற்றல் தொடர்கிறது என்பார்கள். அத்தகைய கற்றல் பயணத்தில் வாசிப்பே முதன்மை பெறுகிறது. வாசிப்பு இல்லாமல் கற்றல் எனும் செயற்பாடே நிறைவு பெறாது. உலகிலுள்ள கலைகளில் கற்பதும் ஒரு கலைதான். ஆனால் அவ்வனைத்துக் கலைகளையும் ஒருங்கே கொண்ட கலைதான் வாசிப்பு. கற்றலில் சுயகற்றல் என்பது மிகப்பெரும் பங்கு வகிக்கிறது. ஆகவே சுய கற்றல் பழக்கமுள்ள அனைவருக்கும் வாசிப்பு மிகவும் அத்தியாவசியமாகின்றது.



மின்னல் வேகத்தில் முன்னேறிக் கொண்டிருக்கும் இவ்வுலகில் அன்றாட நிகழ்வுகளிலிருந்து ஆழமான ஆய்வுகள் வரை பல்வேறு தகவல்களை அறிய வாசிப்புத் துணைபுரிகிறது. எந்தவொரு துறையிலும், எமது திறமையை வளர்த்துக் கொள்வதுற்கு சிந்தனையாற்றல், வழிகாட்டல் என்பன அவசியமாகும். அவற்றை வழங்குவதற்கு வாசிப்பினால் மட்டுமே முடியும். ஏனெனில் நாம் வாசிக்கும் போது எமது மூளையானது மிகவும் சுறுசுறுப்பாகின்றது. சிந்தனா சக்தி பெருகுகிறது. அத்துடன் கிரகித்தல், சிந்தித்தல், ஆராய்தல், ஆக்கம் போன்ற திறன்களும் வளர்ச்சியடைகின்றது. ஆகவே தான் "வாசிப்பினால் மனிதன் பூரணமடைகிறான்" என்று கூறப்படுகின்றது.

இவ்வாறு மனித வாழ்க்கையின் ஒரு அங்கமாகக் கருதப்படும் வாசிப்புப் பழக்கமானது அனைவரிடமும் குறைந்து வருகின்றது. குறிப்பாக மாணவர்களி டமே இப்பழக்கம் அருகிவருகின்றது. மாணவர்களது அறிவுப்பசிக்கு நவீன தொழில்நுட்ப சாதனங்களால் தீனி போட முடியாது. ஆடையில்லாதவன் அரை மனிதன் என்று கருதப்படுவது போல வாசிக்காதவனும் அரை மனிதன் ஆவான். வாசிப்பவனே முழுமனிதனாக கருதப்படுகிறான். ஆகவே **"நூல் பல கல்"** என்ற ஔவைப் பாட்டியின் கூற்றுக்கிணங்க நல்ல நூல்களைத் தேடிக்கற்க வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நல்ல நூல்களே நல்ல நண்பர்களைப் போன்றன. நல்ல நூல்கள் எமது சிறந்த வழிகாட்டியாக, அரவணைக்கும் தாயாக, தைரியமூட்டும் தந்தையாக, கருத்துக்களை பகிர்ந்து கொள்ளும் நல்ல நண்பனாகப் பல்வேறு பாத்திரங்களை வகிக்கின்றன என்றால் மிகையாகாது. "உன் நண்பனைச் சொல் நீ யாரென்று சொல்கிறேன்" என்ற கருத்து நண்பர்களுக்குப் பொருந்துவதை விட புத்தகங்க ளுக்கு நூறு வீதம் பொருந்தும்.



**"பள்ளமான இடத்தினைப் பார்த்து பாயும்**
**வெள்ளம் போல்**
**நல்ல நல்ல நூல்களை நாடி நாமும்**
**பயிலுவோம்"**

என்று அழைக்கிறார் குழந்தைக் கவிஞர் அழ.வள்ளியப்பா. "என்னை என்றும் எச்சந்தர்ப்பத்திலும் கைவிடாத ஒரே ஒரு நண்பன் புத்தகங்கள் மட்டுமே ஆகும்" என்கிறார் ஆங்கில அறிஞர் ஒருவர்.

மாணவர் மத்தியில் வாசிப்புப் பழக்கத்தைத் தூண்டும் நோக்கில் பாடசாலைகளிலும், கிராமங்களிலும் நூலகங்கள் அமைக்கப்படுகின்றன. "எந்த வீட்டில் நூலகம் இருக்கின்றதோ அந்த வீட்டில் தான் ஒளிவிளக்கு இருக்கின்றது" எனக் கூறுகிறார். பேரறிஞரான பிளேட்டோ. **"ஆறு இல்லா ஊருக்கு அழகு பாழ்"** என்பது பழமொழி. சுருங்கக் கூறின் நூலகம் ஓர் ஆய்வுக் கருவூலம். "படிக்கும் ஆற்றலும் படிக்க வேண்டும் என்ற ஆர்வமுமே அக்கருவூலத்தைத் திறக்கும் சாவிகள்" என்று கூறினார் ஆங்கில அறிஞரான ரஸ்கின்.

"தொட்டனைத் தூறும் மணற்கேணி மாந்தர்க்கு கற்றனைத் தூறும் அறிவு" என்பது பொய்யாமொழிப் புலவரின் கூற்றாகும். எவ்வாறு மணற்கேணியைத் தோண்ட தோண்ட நீர் ஊற்றெடுக்கின்றதோ அதே போல நல்ல நூல்களைக் கற்கக் கற்க எமது அறிவும் பெருகும். இதனால்தான் நம் முன்னோர்கள்" பாடை ஏறினும் ஏடது கைவிடேல்" என்று கூறிப்போயினர்.

சிறுவயதிலிருந்தே வாசிப்புப் பழக்கம் உள்ள மாணவர்கள் தீயநட்புகள், தீய பழக்கங்களிலிருந்து தவிர்ந்து கொள்கின்றனர். அதனால்தான் காந்தியடிகள் "ஒரு நூலகம் திறக்கப்படும் போது பத்து சிறைச்சாலைகள் மூடப்படுகின்றன" என்று கூறியுள்ளார். வாசிப்பின் மூலம் மனிதனின் ஆறாம் அறிவான பகுத்தறிவு வளரும். எது சரி எது பிழை என்று பகுத்து ஆராயும் பண்பு உதயமாகும். அது மட்டு மல்லாது வாசிப்பானது ஒரு மனிதனை குழப்பமான மனநிலையை அகற்றி நன்னிலைப்படுத்தவும் உதவுகிறது. இதனால்தான் மனோவைத்திய நிபுணர்கள் மன அழுத்தத்திற்கு உள்ளானவர்களுக்கு வாசிப்பை ஒரு சிகிச்சை முறையாக கையாளுகின்றனர்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாசிப்பின் சிகரங்களாக விளங்கிய ஆபிரகாம்லிங்கன், நேரு, மகாத்மா காந்தி, அப்துல்கலாம், நெல்சன் மண்டேலா என்போரே உலகத்தை திரும்பிப் பார்க்க வைத்த அறிவியலாளர்கள் ஆவார்கள். "ஒரு கோடி ரூபாய் கிடைத்தால் என்ன செய்வீர்கள்?" என்று கேட்டால் "ஒரு நூலகம் கட்டுவேன்" என மகாத்மா காந்தி கூறியுள்ளார். இதே போல்தான் உலகில் தலைசிறந்த தத்துவஞானியான சோக்ரட்டீஸ் நஞ்சூட்டப்படும்வரை வாசித்துக்கொண்டேயிருந்தார் என்பது வரலாறு கண்ட உண்மை. ஆகவே சிறுவயதில் சுயவாசிப்பில் ஈடுபடும் பிள்ளை எதிர்காலத்தில் சிறந்த மேதையாக விளங்கும் என்பதில் எவ்வித ஐயமும் இல்லை.

வாசிப்பானது வெறுப்பை உண்டாக்குகிறது என்பது பலரின் கருத்தாகும். நெல்லிக்கனியை உண்ணும் போது அது கசப்பான அல்லது புளிப்பான தன்மையை ஏற்படுத்திய பின் இனிப்பும் இன்பமும் தாமதமாக ஏற்படுத்துகின்றன. அது போல் புத்தகங்களை வாசித்த பின் ஏற்படும் அறிவும் ஆற்றலும் மிகவும் இன்பம் தரக்கூடியது. ஆகவே எவ்வாறு அன்னப் பறவையானது நீரை விலக்கி பாலை மட்டும் பருகுகின்றதோ அதே போல் மாணவர்களாகிய நாமும் தேவை யற்ற நூல்களை தவிர்த்து நல்ல நூல்களை வாசிக்க வேண்டும். அதுவே எமக்குப் பயன் தரும்.

எனவே மாணவர்களாகிய நாம் வாசிக்கக் கற்றுக்கொண்டு வாழவும் கற்றுக் கொள்ளவேண்டும் என்பதை உணர்ந்து வாசிப்பை உணர்வாகவும் உழைப்பாகவும் எடுத்துக்கொண்டு இருபத்தோராம் நூற்றாண்டுக்கு ஈடுகொடுக்க வாசிப்பு எனும் கருவியைப் பயன்படுத்தி அறிவால் உலகை ஆள்வோம்!

**"நன்றே செய் அதை இன்றே செய்"**





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பெண்மையே எழு

***ஆக்கம்,***
***த.யுரேக்கா(தரம்-11)***

செந்தமிழ் போல் இனிமை – நிலாவென
சிரிக்கும் அவள் பெண்மை
செந்தமிழாலே பாடிட முயல்வேன் – எனை
படைத்திட்ட பெண்ணையே............

பாரதி கனவாம் புதுமைப் பெண்ணே – இன்று
பாரை ஆள்வதும் புதுமைப் பெண்ணே
நேராத துன்பம் நேர்ந்திட்டாலும் – விழி
நீர் துடைத்து விழித்தெழுவாய்



கண்ணால் வரை ஒரு கோடு – அதில்
விண்ணை வளைத்துப்போடு – உன்
நெற்றிப் பொட்டில் நிலவை – ஏந்தி
பெண்ணின் சுதந்திரம் தேடு.....
விதியை நம்பும் நிலை – அகற்றி
மதியைச் செய்வாய் சலவை – நீ
அறிவும் துணிவும் இரண்டுமே
ஆதாம் ஏவாள் கலவை

அடிமைச் சிறையை உடைத்து
தமையைப் பொடிபடச் செய்வாய் இடித்து
இனி விண் உலகையும் தாண்டி
பறந்து புதிய உலகினைப் படைத்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நினைவுகள் சுமந்த பள்ளித்தாய்

ஆக்கம்,
நி.நிதுர்சனா
(2021) commerce

வெள்ளைநிற வெற்றுத்தாளிலே
வண்ணமிடத் தொடங்குகின்றது - என் பேனா !
கண்களுக்குள் ஓராயிரம் நினைவுகள்
இதழ்களை விரிக்கிறது - இனம் புரியாத புன்னகை
சொல்லுக்குள் அடக்க முடியாப் பொருளினை
வகுத்து வடிக்கிறேன் கவிதை தனில்.

கோடிக்கனாக்களுடன் என் பள்ளிதனில்
பாதம் பதித்த முதல் நாள்,
ஈன்றவள் கரத்தை சட்டென விடுத்து
கட்டியணைத்தேன் கல்லூரித் தாயவளின் மடிதனை
"கட்டைச் சட்டையும் குட்டிச் சப்பாத்தும் "
நினைவுகள் மீட்கும் நிஜங்கள் அவை.

படைத்தவனின் இன்னோர் உருவம் - ஆசானாம்
பெற்றுத் தந்தாள் பள்ளித்தாய்
மழலைக்கதை பேசி பாடம் கற்க
என்போல் எண்ணற்றோர்
விரல் கோர்த்து கதைபேசி நடைபழகி
சுற்றித்திரிந்தோம் தோழர்களாய் ....
இன்றும் நீள்கிறது நாட்கள்...நினைவுகளின் துணையுடன்.

வகுப்பறைச் சுவர்களில் வரைந்த கிறுக்கல்கள்
கிளை பரப்பி தலையசைக்கும் பழ மரங்கள்
இன்னமும் மணக்கிறது - மனதிற்குள்
ஓராயிரம் வடுக்களை மடி சுமந்த பிரதான மண்டபம்
மிடுக்கோடு நிமிர்ந்து நிற்கிறது - தாயவளின் பெருமையாய்
எண்ணற்ற வெற்றிகள் குவித்தும் வலிகள் மறையவில்லை.
பள்ளித்தாயவள் பெருமை கூற வரிகள் நீளுகின்றன.....
ஏனோ ! காரணமின்றி கசிகின்றது கண்ணீர்.
நினைவுகள் கனக்கையில்....





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வலிகள் சுமந்த வரிகள்

*ஆக்கம்,*
*மகேந்திரன் றஜீசன்போல்*
*(2020 கணிதப்பிரிவு)*

வெள்ளை மண் சிவந்த காலம்
தமிழர் கண்ட பெருந்துயரம்
உலகம் செவிடாகிப் போன சோகம்
இனமே ஆதரவு அற்று அழிந்த படலம்
கந்தகப் புகைக்குள்ளும் கார்கால மழைக்குள்ளும்
மூன்றடிப் பதுங்கு குழியில் மூச்சடங்கிப்போனோம்.

ஒட்டிய வயிற்றுக்கு கட்டிய தாலிவிற்று
ஒரு நாள் பசியாறினோம்
உற்ற உறவுகளை இருந்த இடத்திலேயே
புதை குழிக்குள் மூடினோம்
வெந்த புண்ணில் வேல் பாய்ந்தாற் போல்
கந்தகச் சிதறல்களால் காயங்கள் ஏந்தினோம்

எங்களோடு இருந்தவர்களை
இன்னும் காணாமற் தேடுகின்றோம்
விளக்கச் செய்வது விழியறியாத் தூக்கம்
விளக்க முடியாத் தூக்கம்
விடங்கொண்ட உலகம்
விருப்பம் தீர்த்த காலம்



அடிமைப்பட மறுத்த தினம்
சுதந்திரம் கேட்ட நேரம்
சூழ்ச்சியால் சாய்ந்த வையகம்
சத்தியம் ஓர் நாள் வெல்லும்
உண்மை உலகறிய நிற்கும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தனிநாயகம் அடிகள்

*ஆக்கம்,*
*மேதகையன்*
*(2022 கணிதப்பிரிவு)*



**ஈழத்தமிழர், கல்வியாளர்**
(பிறப்பு : 2 ஆகஸ்ட் 1913)
(இறப்பு : 1 ஐப்பசி 1980)

யாழ்ப்பாணத்தில் உள்ள தீவான நெடுந்தீவில் பிறந்து பின்னர் கரம்பனில் கற்ற தனிநாயகம் அடிகளின் இயற்பெயர் நாகநாதன் இந்துக் குடும்பத்தில் பிறந்தவர் கிறிஸ்தவ சமயத்தை தழுவியபோது ஏற்றுக்கொண்ட பெயர் ஸ்தனிஸ்லாஸ் என்பதாகும். ஆரம்பக்கல்வியை ஊர்காவற்துறை புனித அந்தோனியார் கல்லூரியிலும் இடைநிலைக் கல்வியை 1920 முதல் 1922 வரை யாழ்ப்பாணம் புனித பத்திரிசியார் கல்லூரியிலும் கொழும்பில் சென்ட்பேர்னாட் செமினறியில் தத்துவவியல் கலை மாமணிப்பட்டத்தையும் (1934) தமிழ்நாடு அண்ணாமலை பல்கலைக் கழகத்தில் முதுகலைமாணிப் பட்டத்தையும் M.Litt பட்டத்தையும் பின்னர் லண்டனில் கலாநிதிப் பட்டத்தையும் பெற்றார்.

<u>ஆசிரியர் பணி</u>

தமிழ்நாட்டில் நெல்லை மாவட்டத்தில் உள்ள வடக்கன்குளம் புனித தெரேசா உயர்நிலைப் பள்ளியில் துணைத்தலைமையாசிரியராகப் பணியாற்றினார். இங்கு இருந்தபோது பண்டித குருசாமி சுப்ரமணிய ஐயர் என்பவரிடம் தமிழ் பயின்றார். பின் இரத்தை பல்கலைக்கழகத்திலும் தமிழ் விரிவுரையாளராக பணியாற் றினார்.

1961இல் மலேசியா சென்று மலாயா பல்கலைக்கழகத்தில் 1969 வரை இந்தியக் கல்விமான் துறையிலே தலைமைப் பேராசிரியராகப் பணிபுரிந்தார். பின் அங்கிருந்து ஓய்வு பெற்று ஓராண்டு காலம் பாரிசில் பிரஞ்சுக் கல்லூரியிலும் ஓராண்டு காலம் நேட்பிள்ஸ் பல்கலைக்கழகத்திலும் சிறப்பு பேராசிரியாகப் பணி யாற்றினார்.

<u>தமிழ்ப் பணி</u>

கத்தோலிக்க துறவியாக தனது பணியை ஆரம்பித்த தனிநாயகம் அடிகள் தமிழை முறைப்படி கற்றுத்தேர்ந்து தமிழ் வளர்ச்சி பரப்பும் தூதராகவும் திகழ்ந்தார். Tamil culture எனும் ஆங்கில காலாண்டிதழை ஆரம்பித்து அதன் ஆசிரியராக 1951-1959 வரை இருந்தார். அதன் மூலம் அகில உலகிலுள்ள தமிழ் ஆர்வலர்களை ஒன்று சேர்க்க பாடுபட்டு வெற்றியும் கண்டார். 1961 சென்னையில் தமிழ் பண்பாட்டு கழகம் என்னும் அமைப்பைத் தோற்றுவித்தார். தமிழிலும் ஆங்கிலத்திலும் பல



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆய்வுக்கட்டுரைகளையும் பல நூல்களையும் எழுதி வெளி யிட்டார். தமிழ்த்தூது எனும் நூல் அடங்கலாக 137 நூல்களை எழுதினார்.

**தமிழாராய்ச்சி நிறுவன தோற்றுனர்.**

மலேசியாவில் பணிபுரியும் காலத்தில் உலக தமிழாராய்ச்சி நிறுவனத்தின் தோற்றுனர்களில் ஒருவராக இருந்து செயற்பட்டார். அதன் முதல் மாநாட்டினை 1966 ஏப்ரல் 16-23 திகதிகளில் மலேசிய அரசின் துணையோடு பிரமாண்டமான முறையில் மலேசிய தலைநகர் கோலாலம்பூரில் நடத்தினார். பின்னர் சென்னையில் நடந்த உலக தமிழாராய்ச்சி மாநாட்டில் பிரதம விருந்தினராக கலந்து கொண்டார்.

**மறைவு**

அடிகளார் இறப்பதற்கு முன் நான்கு மாதத்திற்கு முன்னர் ஏப்ரல் 1980ல் தந்தை செல்வா நினைவுப் பேருரையைக் கொழும்பில் நிகழ்த்தினார். அதே ஆண்டு மே மாதம் வேலணையில் பண்டிதர் கா.பொ.இரத்தினம் அவர்கள் எழுதிய தமிழ்மறை விருந்து நூல் வெளியீட்டு விழாவில் பங்கேற்றார். பின்னர் உடல் நலிவுற்ற தனிநாயகம் அடிகளார் 1980 செப்ரம்பர் 1 மாலை 6.30 மணியளவில் உயிர் நீத்தார்.









Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆசிரியப் பணி

*ஆக்கம்,*
*திருமதி. லோகநந்தினி திருக்குமார்*
*Dip.in physical Education*
*Dip.in Counselling*
*B.A ஆசிரியர் பயிற்சி (உடற்கல்வி)*

ஆரம்ப காலக் குருகுலக் கல்வி தொடக்கம் இன்றைய இணையவழிக் கற்கைவரை ஆசிரியர்பங்கு பெறுமதி மிக்கது. ஆசிரியர் எனும் ஏணி இருந்தால் தான் நாம் வாழ்வின் இலட்சிய உச்சியை எட்ட முடியும். அறிவீனத்தையழித்து தனிமனிதர்களை அறிவாளியாக்கும் செயற்பாடே கற்பித்தலாகும். உலகில் காணப் படும் அனைத்துத் தொழில்களிலும் மேலாகத் தெய்வீகத் தன்மை வாய்ந்த ஒரு தொழிலாக ஆசிரியத்தொழில் காணப்படுகிறது. பெற்றோர் குழந்தையை உலகிற்கு வழங்குகின்றனர். ஆனால் ஆசிரியர் அந்த உலகையே குழந்தைக்கு வழங்கு கின்றார்.



இன்றைய நிலையில் பெற்றோர்களின் அன்பு பெரும்பாலான பிள்ளைகளுக்குக் கிடைப்ப தில்லை. காரணம் இன்றைய நவீன உலகில் தொழிலுக்கு முக்கியத்துவமளித்து பெற்றோர் ஓய்வின்றி ஓடியலைகின்றனர். அதனால் அவர்கள் பிள்ளைகளைக் கவனிப்பதுமில்லை. அன்புகாட்டு வதுமில்லை அடுத்து பாடசாலையில் பிள்ளைகள் அதிக நேரத்தைச் செலவிடுவதால் அன்பு செலுத் தும் ஆசிரியர்களால் கவரப்படுகின்றனர். வடிவமற்ற கல்லொன்றை செதுக்கி சிலையாக மாற்றும் சிற்பி போன்று செயற்பட்டு சிறந்த ஒழுக்கமுடைய அறிவுமிக்க பிள்ளையாக மாற்றுபவராக ஆசிரியர் காணப்படுகின்றார்.

ஆசிரியர் ஒருவர் பிள்ளைகளுடன் சகஜமாகவும் அன்பாகவும் பழகும் ஆற்றலைக் கொண்டிருக்க வேண்டும். குழந்தைகளுக்கு கற்பிக்கும் ஆசிரியர் குழந்தையாக மாறவேண்டும் மற்றும் பெற்றோர் ஸ்தானத்திலிருந்து செயற்பட வேண்டும். அது மட்டுமன்றி ஒரு நண்பர், ஆலோசகர், ஆய்வாளர் அவதானிப் பாளர், துன்பத்தில் கைகொடுப்பவர், நீதி மேற்பார்வையாளர் போன்ற பாத்திரப் படைப்பு ஏற்று அதன்படி நடந்து கொள்ள வேண்டும்.

மாணவர் எனப்படுவோர் மனித பருவங்களின் பிரிவில் கட்டிளமைப் பரு வத்தை உடையவர்களாகவே காணப்படுவர். இப்பிரிவினருடன் தமது தொழில் நிமித்தம் பழகும் ஆசிரியர்கள் பல பயிற்சிகள் பெற்ற பின்பே அவர்களைப் பாடசாலையில் சந்திக்கலாம். பயிற்சியில் கூறப்பட்ட வழிமுறைகளின் படி கற்பித்தலையும் அதற்கு மேலான மாணவரது உள எழுச்சிகளை சமாளித்த லையும் எல்லா ஆசிரியர்களாலும் எளிதாகக் கையாள முடிவதில்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒவ்வொரு பிள்ளையும் வெவ்வேறு சமூகச் சூழலிலும் பலதரப்பட்ட குடும்ப அமைப்புகளிலும் இருந்து வருகை தருவதால் வயது, பால் என்றடிப்படையில் பிரிவினை இல்லாதபோதும் அவர்களது உளப்பிரச்சினைகள் ஆளுக்காள் வித்தியா சமானவை. அவ்விடயத்தைச் சரியாக புரிந்து கொள்ள முடியாத ஆசிரியர்களால் பிள்ளைகளை ஒழுங்கான பிள்ளைகளாக வழிநடத்தவே முடியாது.

பாடசாலையில் தான் இளமையில் நல்ல பழக்க வழக்கங்களும், விட்டுக் கொடுக்கும் மனப்பான்மையும், பிணக்குகளை எப்படி சமாளிப்பது என்ற ஆற்றலும், சமூகத்தில் பழகும்போது எவ்வாறான தேர்ச்சிகளைக் கொண்டிருக்க வேண்டும் என்ற மேம்பட்ட ஆளுமைத்திறன் படிப்படியாக பல செயற்பாடுகளின் மூலம் அருமையாக வளர்க்கப்படுகின்றது. இதனடிப்படையில் ஒவ்வொரு ஆசிரியர்களாலும் தட்டிக்கொடுத்து நன்மை தீமை தெரிந்த ஒரு நற்பிரஜையாக பாடசாலைக் கல்வி முடிவுற்ற நிலையில் சமூகத்தில் இணைக்கப்படுகின்றான் ஒரு மாணவன். மாணவன் நாட்டின் முதுகெலும்பாகச் செயற்படக் கூடியவனாக இருப்பான் என்பதில் எவ்வித ஐயமுமில்லை

இருந்த போதிலும் ஒரு வகுப்பிலுள்ள மாணவர்களில் கால்பங்கில் சிலர் உள நலக்குறைபாடுகளைக் கொண்டவர்களாகக் காணப்படுவர் அவர்களைப் பின் வரும் பண்புகளின் மூலம் இனங்கண்டு கொள்ளலாம்.

- பாடசாலைச் செயற்றிறனில் மாற்றம்.
- திடீரெனப் புள்ளிகள் குறைதல்.
- உணவு, தூங்கும் பழக்கம் என்பவற்றில் திடீர் மாற்றம்.
- உடல் எடை குறைவடைதல்.
- அடிக்கடி கோபப்படல்.
- கற்பித்தலின் போது கவனக்குறைவு.



இவ்வாறான பண்புகளை பதினான்கு வயதுக்கு பின்னர் வெளிப்படுத்தும் மாணவர்களை மிகவும் கவனமாக ஆசிரியர்கள் கையாளவேண்டியது முக்கியமானது. இப்பருவத்தில் இவ்விடயங்களைக் கவனிக்காது விடப்படும். மாணவர்கள் தமது முக்கியமான க.பொ.த(சா/த)(க.பொ.த.உ/த) பரீட்சைகளை எதிர்கொள்வது மிகவும் பிரச்சினைக்குரியதாகிவிடும். எனவே ஆசிரியர்கள் தரம்-9 இற்குப் பின்பு மாணவச் செல்வங்களில் அதிக அக்கறை எடுக்க வேண்டியது கட்டாயமானதாகும். இவர்களுக்கு கற்பித்தல் மட்டுமன்றி அதற்கு மேலதிகமாக உடலும் மனமும் ஆரோக்கியமாக இருப்பதற்கான வழிமுறைகளைக் கட்டாயப் பயிற்சியின் கீழ் பழக்கப் படுத்திக் கொள்ள வேண்டும். அதற்கான சில செயற்பாடுகளாக.

- கட்டாய உடற்பயிற்சி
- குடும்பத்துடன் (பெற்றோர் சந்திப்பு) ஒரு வேளையாவது பிள்ளையுடன் உணவருந்தும் பழக்கத்தினை ஏற்படுத்தல்.
- சிரிக்கக் கற்றுக் கொடுத்தல்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- நேரத்தைத் தவற விடக்கூடாது என்பதற்கான கடுமையான விதிகள் கொண்ட வேடிக்கை நிகழ்வுகளை ஒழுங்குபடுத்தல்.
- பொது விடயங்களில் ஈடுபட வைத்தல்.
- புத்தகம் எழுத, வாசிக்கக்கட்டாயப் படுத்துதல்.
- சுற்றுப்புறத்தைச் சுத்தமாக வைத்திருக்க கற்றுக்கொடுத்தல்.

இவ்வாறு மாணவரின் விருப்புகளுடனான கட்டாய பழக்கங்களை ஏற்படுத்து வோமாயின் அவர்களை அறியாமலேயே உளத்தாக்கங்களிலிருந்து விடுபட்டு கற்றல் செயற்பாடுகளில் ஈடுபாட்டுடன் செயற்படுவர் என்பதில் ஐயமில்லை. எனவே ஆசிரியராக உருவெடுத்திருக்கும். ஒவ்வொரு ஆசிரியரும் தங்கள் சேவை யின் பெறுமதியை அறிந்து செயற்பட வேண்டும் என்பது இதன்மூலம் குறிப்பிடக் கூடியதாக உள்ளது. வகுப்பாசிரியராக கடமைபுரியும் ஆசிரியர்கள் உங்கள் வகுப் பிலுள்ள ஒவ்வொரு மாணவரையும் உங்கள் பிள்ளைகளாக நினைத்து வழி நடத்துங்கள். பாட ஆசிரியர்களை விட வகுப்பாசிரியர்களே பிள்ளைகளினால் இறக்கும் வரை மறக்க முடியாதவர்களாக உள்ளனர். என்பது மனித வரலாறுகள் கூறும் கருத்துக்கள் என்பது குறிப்பிடத்தக்கது.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காலம் செய்த கோலமா? அல்லது தமிழனுக்கு வந்த சாபமா?

குமுறல்

*ஆக்கம்,*
*வரலாற்று ஆசிரியர் (S.R.J சுதன்)*

ஈழத்திருநாட்டில் அவதரித்து விட்ட தமிழனாய் கூறிடவும் முடியாமல் மறைத் திடவும் முடியாமல் நின்று திண்டாடும் நிலையை காணமுடிகிறது. அதாவது மாடு மெல்லவும் முடியாமல் விழுங்கவும் முடியாமல் நின்று திண்டாடுகின்றது என்பது போலவே எமது நிலமையும் இரண்டாயிரத்து எட்டுக்கு முன் தங்கத் தமிழராய் தன்மான உணர்வுடனே வாழ்ந்ததே நம் இனம். இரண்டாயிரத்து பத்துக்குப் பிறகு பத்தறுந்து போயிற்று. அன்று ஊர் உறங்கும் சாமத்திலே யாருமற்ற வேளையில் கூட தட்ட தனியாக கன்னி ஒருத்தி கழுத்து, கை நிறைய தங்கங்கள் அணிந்தும் கூட துணிச்சலுடன் நடமாடு காலமாய் இருந்தது. ஆனால் இப்போது ஒரு குச்சி தோடும் நூல் செயினும் போட்டுக்கொண்டு பாதையில போறதுக்கு மட்டுமில்ல வீட்டில் கூட கதவைப்பூட்டி விட்டும் நிம்மதியாய் தனியே உறங்க முடியாது பயத்திலேயே பாதி உயிர் போய்விடும். அன்றைக்கு கிராமங்கள் கூடி குதூகலித்து ஒரு தாய் பிள்ளைகள் போல உறவாடினோம் நிம்மதியாய் சந்தோஷமாய். ஆனால் இன்றைக்கு பக்கத்து வீட்டில் இருக்கிறது யார் என்று தெரியாமல் பயமாக இருக்கிறது. அந்த காலத்தில் படிக்கிற போதெல்லாம் படிக்க மின்விளக்கு இல்லை எழுதுவதற்கு கொப்பிகூட நெருக்கடி போன வருஷம் எழுதி முடியாத கொப்பிகளை சேர்த்து ஒரு கொப்பி தயார் புதுவருட ஆண்டில் எழுத மின் விளக்கு இல்லை என்றால் மட்டுமா? குப்பி விளக்குகூட ஒருவீட்டில் ஒன்றுதான் எரிக்கமுடியும் மண்ணெண்ணெய் தட்டுப்பாடு ஆனால் கூடி இருந்து பிள்ளைகள் நன்றாக படித்தார்கள். இப்போ ஒரு பிள்ளைக்கு ஒரு மின்விளக்கு கரண்ட் நின்றுவிட்டது என்றால் அம்மாவின் சமையல் தொடக்கம் பாட்டியின் ராமா பார்க்கும் படலம் ஈறாக பிள்ளைகளின் படிப்புவரை அனைத்தும் இடைநிறுத்தம். தேத்தண்ணி கூட பக்கத்து ரீக்கடையில் ஒடர். குளிக்கவும் முடியாது மோட்டர் போடாமல் என்று புலம்பல் சமைக்க உலை வைப்பது தொடக்கம் தேத்தண்ணி வைப்பது மரக்கறி வெட்ட குழைத்த சம்பலுக்கு தேங்காய் துருவ பிழிய என பலதுக்கும் கரண்டு வேணும். மேலும் பொழுதை போக்க என்று ராமா பார்க்கிறேல்ல. பொழுது முழுதும் ராமா என்று சிலதுகள் கைகளை ஆட்டாமல் சமையல் முதல் அனைத்தும் செய்துவிட்டு பொழுது போக்க கூடி மன அழுத்தம் தரும் ராமாவை பார்த்திட்டு அதுலே வாழ்வு நடைமுறையுடன் ஒப்பிட்டு குடும்பத்திற்குள் சண்டையும் சந்தேக பெயர் வழியில் டைவேஸ் வரை ஓடுது காலம். பிரிவும் ஒருவருக்கு ஒருவர் சூது, சூழ்ச்சி செய்யும் நிகழ்வே ராமாவின் உச்ச வெளிப்பாடு அதுவே எம் உறவுகளின் உணர்விலும் ஊறுது. அது ஒருபுறம் போக படிக்கிற பிள்ளையளும் அரைவாசி நேரத்தை இப்படியே கழிக்குதுகள்.

இதனால் முப்பது வயதை தாண்டமுன் கிளினிக்கொப்பியுடன் மாதம் ஒரு பிறசர் கிளினிக், மாதமொரு டைபொயிட் கிளினிக், கொலஸ்ரோல் கிளினிக் என



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாதத்தில் நான்கு ஐந்து நாள் கிளினிக் சாப்பிடுற சாப்பாட்டு அளவை விட ஒரு சிறங்கை குளிசை போடுறதுதான் இப்போதைய பாசன் என்று ஆயிற்றுது. அது ஒரு புறம் இருக்க படிக்கிறதுகளை பார்க்க கண்றாவியக் கிடக்குது பள்ளி வகுப்பில் கூட பாதியில் கண்உறக்கம் ஏன் தெரியுமா பாவிச்ச போதைகள் எங்க கண்திறக்க விடுமா? அப்படி இல்லை எண்டு வாத்தியார் வகுப்பில் வந்து என்ன நித்திரையா? எழும்புங்கோ படிக்க நேற்று என்ன படிச்சனாங்கள் எண்டு தொடங்க. ஏதோ கதைப்பாங்க முறைப்பாங்க சிலவேளை அடிக்கவும் வருவாங்கள். வெளியில சொன்னா வெட்க கேடு சொல்லாமல் இருந்த நம்ம இனம் கேடு கெட்டு போகுது.

பாதி வளர்த்த தலைமுடி உயர்ந்த ஜீன்ஸ் என பல கோவணக் கோலம். திருத்த வந்த வாத்தியாரும் சிறுவர் உரிமை சட்டத்தின் முன் சிக்குண்டு தவிக்க வேண்டும். படத்தில் நடப்பதை போல தன்பிள்ளை ஹீரோ என நினைக்கிற பெற்றோரும் வாத்தியாரை எதிர்ப்பதுண்டு. இதுகள் இடையிலேயே படிப்பை விட்டு பள்ளிக்கு வெளியில பறந்தடிச்சு திரியுங்கள். அதுகள் படிக்கா விட்டாலும் பரவாயில்லை சந்தோசமாய் இருப்பார்கள் என்று பெரிய ஐ போனும் குதிரை மோட்டார் சைக்கிளும் லீசிங்கில் எடுத்து கொடுத்துவிட்டு அப்பாமார் ஓடாய் உழைக்க கடன் அடைக்க கஸ்ரப்படும் வேளையில் கூடாத கூட்டங்களாக பெடியள் எல்லாம் கூட்டு சேர்ந்து ஆவா கூவா எண்டு குழுக்களாக சேர்ந்து குடு, கஞ்சா, கசிப்பு என போதைகளை பாவிச்சு விட்டு நீ பார்த்த பெட்டையோட அவன் கதைக்கிறான் என்று தூண்டி துலங்கல் கதைகளை கதைச்சு குத்தும், வெட்டும், தூக்கும், ரெயினில குதிக்கிறதும், பாதியிலே பரலோகம் போகுதுகள். பெத்தவயிறு வாயைக்கட்டி வயிற்றைக்கட்டி சேர்த்து இதுகளுக்கு வழிகாட்ட வழிதவறி போகுதுகள். அப்ப நம்ம சந்ததிகள் சாதிக்க சென்று சாதனை படைத்து வீரமாய் மரணித்தார்கள். அது பெருமையின் சிகரம். மனம் பொறுத்திடமுடியும். இன்றைக்கு பாதியில போறது வீதியில் விபத்து வெட்டு குத்திக் கொலை, தற்கொலை என ஏற்கவோ அல்லது சகிக்கவோ முடியாத சாபமாய் இருக்கிறது. தன்பிள்ளையை கூட கொலைசெய்யும் மனிதாபிமானம் மரணித்து போன தேசமாய்ப் போய்விட்டது.

இரண்டாயிரத்து எட்டிற்கு பிறகு எம்மானம் தன் மானம் என்ன மலையேறி விட்டதா? மனிதாபிமானம் என்ன மாண்டுவிட்டதா? மக்களே மாணவர்களே எம்மானம் காப்போம் தன்மான உணர்வுடன் வரலாற்றுச் சாபமா? காலம் செய்த கோலமா? எம் மனிதாபிமானம் அருகிக் கருகிப்போக மனிதம் என்னும் பண்புடன் வித்திட்டு முளை ஆல விருட்சமாய் விழுதெறிந்து மனிதாபிமானம் என்னும் தமிழ் உணர்வு இழையோடு பட்ட மரமும் தளிர்க்கும். பீனிக்ஸ் பறவை போல அழிந்த எம் உணர்வுகளை சாம்பல் மேட்டிலிருந்து தட்டி எழுப்பி பறக்கவிட்டு சிறகடித்து மகிழ்வோம். அனைவரும் தமிழன் என்ற உணர்வுடனே மாணவ மணிகள் மனத்தில் உணர்வோடு உழைப்போம் வெல்வோம் உணர்வின் ஊற்றாய் பெருக் கெடுக்க பெரும் பாடுபட்டு யாவருமே உழைப்போம் வெல்வோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழ்வை வாசிப்போம்

***ஆக்கம்,***
***கேசிகா***
***2021 கணிதப்பிரிவு***

அறிவியலின் விளிம்பில் அனுபவங்களின் முதிர்ச்சியில்
அரிச்சுவடிகள் தந்த அழகியதொகுப்பே நூல்கள்
எழுதுகோலின் நுனியில் வாழ்வின் எழுதாப்
பக்கங்களால் விதைத்துக்கிடக்கின்றன.


மனிதநேயம் பழுத்தகாலங்களை அகிம்சையில்
வென்றோர் எழுதிவைத்தவை
நாகரிகத்தில் உயர்ந்தநாட்களை இலத்திரனியலில்
கடக்கும் தலைமுறைகளால் ஒதுக்கப்படுவதேன்

நூலகங்கள் வெறுமையாகி நூல்கள் சிறுமையானது
வலைத்தளம் நிரம்பி வாழ்க்கை வறுமையானது
முகப்புத்தக மோகங்களில் மூளை உறக்கம் கொள்ள
இரத்த நாடிகளில் பொழுதுகள் உறைகின்றன.



புலன்களை அடக்கி மெய் காண முயலுகின்றோம்
அமைதியின்றி அலைகின்றோம் எல்லையில் அடங்குகின்றோம்
சாதிக்க முடிவதில்லை சாகும் வரை புலம்புகின்றோம்
நூல்களை வாசிக்க நொடிப் பொழுதும் பொறுமையில்லை

மனிதம் தொலைந்து மர்மமாகிப் போனது
இலகுவைத் தேடும் உலகில் இலக்கியத்துக்கு இடம் இல்லையே
பத்திரிகை முகப்பறியா சமுதாயம் – நாட்டில்
நடப்பவையும் அறியா மனுக்கூட்டம்



அறியாமையில் மூழ்கி அழிவில் மிதக்க
காரணம் தேடிக்களைத்து விட்டோம்
நூல்களை நெருங்க மறுக்கும் தலைமுறை
சோதிடத்தின் முன்னே முட்டிபோட்டுத் தாழ்கின்றது

அமைதியின்றி அல்லும் பகலும் அலையும் மானுடம்
பொறுமையின்றி ஆவேசப்பட்டு புதைந்து போகும் உலகமதில்
பேதமையில் சிக்குண்டு – பின்
அறிவுரை கேட்டு அலைகின்றது.
வாழ்வை வாசிக்காது...............



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# என் கல்லூரி அன்னை

*ஆக்கம்,*
*சந்திரகுமார் லக்சிகா*
*2021 உயிரியல் பிரிவு*

சூலம் சுமந்த சிவனாய்
சிலுவை சுமந்த யேசுவாய்
தானம் செய்த நபியாய்
தவம் செய்த புத்தனாய்
இறைவனை நான் கண்டதில்லை.

அன்பு புகட்டும் அதிபராய் அறிவு வளர்க்கும்
ஆசானாய் தோள் கொடுக்கும் நண்பனாய்
இறைவனைப் பல உருவில் கண்டேன் – நம்
கல்லூரியில்

கல்லூரி அன்னையே – நீ பத்து வருடங்கள்
கற்றுத் தந்த பாடங்களும் பெற்றுத்தந்த இன்பங்களும்
நீங்காத நினைவுகளாய் நிற்கிறது – என்
நெஞ்சினிலே........

மெல்லியதாய் அரும்பிய நேசம் புன்னகைப்
பூக்களைப் பகிர்ந்து மணம் வீசி
மறக்காத எண்ணங்களாய் இனிக்கிறது – என்
மனதினில்

சுமையில்லாப் புத்தகப்பை வேண்டும் – சுவையான
பாடங்கள் வேண்டும். என்றோம் – புத்தகப்
பாடங்களை விட வாழ்க்கைப் பாடங்களையே
அதிகம் கற்றோம் கல்லூரிநாட்களிலே.....

கல்லூரி அன்னையே – அன்று நான் உன்னை
பார்த்த பார்வையிலே நீங்காத நினைவாய்
ஆனாய் நீயே – உன்னோடு நான் நின்ற நாட்கள்
யாவும் அழியாத கோலமாய் என்மனதினிலே.....

நல்லாசி தினம் அளிக்கும் கலைவாணியின்
இருப்பிடம் நீயே – கண்டிப்புடன் நடைபயிலும்
முதல்வரின் மூலஸ்தானம் நீயே – இன்று தேசியத்தில்
இடம்வகிக்கும் சாதனைக் கல்லூரி நீயே
சரித்திரத்தில் இடம்பதிக்க காத்திருக்கிறாய் விரைவினிலே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நட்பே வென்றது

ஒரு சமயத்தில் காட்டுக்கு அரசனான சிங்கம் வேட்டையாடும் போது அதன் உடலில் காயங்கள் ஏற்பட்டன. நொண்டியவாறு தன் குகைக்கு அதுவந்து கொண்டிருக்கும் போது சில வஞ்சகக் கழுதைப் புலிகள் அதனை சாதகமாக மிக வீரத்துடன் சிங்கம் அவற்றுடன் சண்டையிட்டது. இருப்பினும் அதனுடலில் மேலும் காயங்கள் ஏற்பட்டன. எத்தனை வஞ்சக கழுதைப்புலிகளுமாக சேர்ந்து அடிபட்ட சிங்கத்தை தாக்குவதைக் கண்டு கோபமடைந்த ஒரு காட்டெருமை சிங்கத்தை காப்பாற்ற அங்கே வந்தது. கூரிய கொம்புகளாலும் பலம் பொருந்திய கால் களாலும் தாக்கி அவற்றைத் தூக்கி எறிந்தது. பயத்தாலும் ஏமாற்றத்தாலும் ஊளை யிட்டவாறு கழுதைப்புலிகள் அங்கிருந்து சென்றன. தக்க சமயத்தில் உதவிய எருமையிடம் நன்றியுணர்வோடு பழகியது சிங்கம்.

அன்றிலிருந்து சிங்கமும் காட்டெருமையும் சிறந்த நண்பர்களாயினர். உடம்பில் பட்ட காயங்கள் குணமடைந்தவுடன் சிங்கம் பழையபடி வலிமைய டைந்தது. வீரமும் வேகமும் திரும்பவும் அதனிடம் ஏற்பட்டன. காட்டிற்கு அரசன் என்ற அதிகாரத்தை பயன்படுத்திய சிங்கம் வஞ்சகமான கழுதைப் புலிகளை அந்தக் காட்டை விட்டே துரத்தியது. ஒரே ஒரு விலங்கு மட்டுமே காட்டை விட்டு சென்ற கழுதைப் புலிகளுக்காக மனம் வருந்தியது. அது வேறுயாருமல்ல அவற்றின் ஒன்று விட்ட சகோதரனான நரியே ஆகும். வஞ்சகத்திற்கு நரியும் பேர் போனதாயிற்று ஆனால் இந்த நரி சிங்கத்தையும் காட்டெருமையையும் அடிக்கடி சந்தித்தது. முதலில் அவை இரண்டிற்கும் ஒன்றும் புரியவில்லை. பிறகு தங்களை உயர்வாக மதிக்கின்ற தீங்கு ஏதும் இல்லாத ஒரு பிராணி இந்த நரி என்று சிங்கமும் காட்டெருமையும் உணர்ந்துகொண்டன. நாட் செல்லச் செல்ல அந்த இரு நண்பர்களும் நரியை நம்ப ஆரம்பித்தன.

ஒரு நாள் தண்ணீர் குடிக்கச் சென்ற காட்டெருமை நரி சென்று, "நீங்கள் உங்கள் நண்பனான காட்டெருமையை விரும்புவதைப் போல வேறுயாரும் இந்தளவு நண்பர்களை நேசிப்பதை நான் பார்த்ததில்லை" என்றது. சிரித்தவாறு சிங்கம் பதில்கூறியது. "எனக்குத் தெரியும்; காட்டெருமை என்மீது மிகவும் அன்பு வைத்திருக்கின்றது. ஒருமுறை என் உயிரையும் அது காப்பாற்றியிருக்கிறது." இதைக் கேட்ட நரி பெருமூச்சு விட்டவாறே, சோகமான குரலில், "நீங்கள் சொல் வது உண்மையாக இருக்கக் கூடாதா? நான் கூறுவதைக் கேட்டு கோபமடைந்து நீங்கள் என்னைக் கொல்ல முற்படலாம்; ஆனாலும் எனக்குத் தெரிந்ததை உங்களிடம் கூற வேண்டியது என் கடமை நீங்கள் மிகவும் அன்பு செலுத்தும் காட்டெருமை, உங்களுடைய அரச பதவியை எடுத்துக்கொள்ளத் திட்டம் தீட்டி வருகிறது என்பதை உங்களுக்குத் தெரியப்படுத்த விரும்புகிறேன்" என்றது இதைக்கேட்டு கோபமடைந்த சிங்கம், கர்ச்சித்தவாறு "நீ கூறுவது பொய்யாக இருந்தால் நான் உன்னைக் கொன்றுவிடுவேன்," என்று கத்தியது.

உடனே அங்கிருந்து அகன்ற நரி காட்டெருமையிடம் நேராக சென்றது. "நீ ஒரு கோழை, பயந்தவன், தனியாக இருப்பதற்கு பயப்படுவதால் தான் நீ சிங்கத்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தோடு சேர்ந்து சுத்துகிறாய் என்று சிங்கம் நினைக்கிறது" என்று கோள்மூட்டியது நரி கூறியதைக் காட்டெருமை சிறிதும் நம்பவில்லை. என் நண்பனான சிங்கம் ஒரு போதும் என்னைப்பற்றி அவ்வாறு நினைக்காது" என்று உறுதியோடு சொன்னது. காட்டெருமை தலையைக் குனிந்தவாறு கோபத்தோடு உறுமியது. நரி கூறியதைச் சிங்கத்திடம் சொல்வதற்கு அதைத் தேடிச் சென்றது ஒன்றை மற்றொன்று தேடி சிங்கமும் காட்டெருமையும் எதிரெதிராக வந்தன. கோபத்துடன் சிங்கம் வருவதாக காட்டெருமையும் காட்டெருமை கோபத்தோடு தன்னைத் தாக்க வருவதாகச் சிங்கமும் எண்ணிக்கொண்டன.

அருகருகே வந்தவுடன் "நரி கூறியது ஒரு வேளை உண்மையாக இருக்குமோ? என்ற அதே எண்ணம் இரு மிருகங்களுக்கும் தோன்றியது. தங்களைக் காப்பாற்றிக் கொள்ள, அந்த இரு நண்பர்களும் ஒருவரை ஒருவர் தாக்கிக்கொண்டன. அவை நீண்ட நேரம் சண்டையிட்டன. அது ஒரு கொடூரமான சண்டை ஆகும். சிங்கமும் காட்டெருமையும் பயங்கரமானவை, வலிமையானவை நீண்ட சண்டைக்குப் பிறகும் ஒன்றால் மற்றொன்றைத் தோற்கடிக்க முடியவில்லை களைத்துப் போன அவை இரண்டும் மூச்சுவாங்கியவாறு படுத்துக்கிடந்தன.

தொலைவில் இருந்தவாறு இவற்றின் சண்டையைப் பார்த்துக்கொண்டிருந்த நரி, இரண்டு மிருகங்களும் இறந்துவிட்டன என்று எண்ணி மகிழ்ச்சியோடு உரத்துச் சிரித்தவாறு அருகில் வந்தது. "வலிமையான என்னுடைய சகோதரர்களான கழுதைப்புலிகளை நீங்கள் இந்த காட்டிலிருந்து விரட்டி அடித்தீர்களல்லவா? அதற்காகத்தான் பழிக்குப் பழிவாங்க நான் செய்த தந்திரம் தான் இது" என்று உரக்கக் கூறியது. நரியின் இந்தச் சொற்களை கேட்டு சிங்கமும் காட்டெருமையும் வியப்படைந்தது ஒன்றையொன்று பார்த்துக்கொண்டன. இப்போது அவற்றிற்கு எல்லா விபரங்களும் புரிந்தன.

இரு மிருகங்களும் ஒன்றாக எழுந்து நரியை அந்தக் காட்டை விட்டே துரத்தின. இப்போது அவை ஒரு பாடத்தைக் கற்றுக்கொண்டுள்ளன. அவற்றிற் கிடையேயான நட்புக்கு நடுவில் எந்த ஒரு புது நபரையும் இனிமேல் வர அனுமதிக்கக்கூடாது என்று அவை தீர்மானித்துக்கொண்டன.

**"நண்பர்களைப் பிரிப்பது துரோகமாகும்"**







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ் பொன்மொழிகள்

*ஆக்கம்,*
*இ.தமிழ்க்குமரன்*
*(தரம் – 11)*

- உன்னைப் பிறருடன் ஒப்பிடாதே மாறாக நேற்று இருந்த உன்னுடன் ஒப்பிடு
- உன்னால் செய்ய முடியாது என்று நீ நினைப்பதைக் கண்டிப்பாக நீ செய்ய வேண்டும்.
- வாழ்க்கை என்பது உன்னைக் கண்டுபிடிப்பது அல்ல வாழ்க்கை என்பது உன்னை உருவாக்குவது.
- நாம் பார்க்க விரும்பும் மாற்றமாக நாம் மாற வேண்டும்
- செயற்றிறன் மற்றும் கவனம் என்பவையே வெற்றிக்கான திறவுகோல்கள்
- சரியாக திட்டமிடப்படாத இலக்கு வெறும் ஆசை மட்டுமே
- உங்கள் எதிர்காலம் இன்று நீங்கள் என்ன செய்கிறீர்கள் என்பதிலிருந்து உருவாக்கப்படுகின்றது.
- சிறந்த பழிவாங்குதல் எதுவெனில் அது உன் பாரிய வெற்றியே ஆகும்.
- தோல்வியைக் கண்டு பயம் கொள்ள வேண்டாம் அதுவே உன் வெற்றிக்கான சரியான வழி
- எதிர்மறையான மனம் ஒரு போதும் உங்களுக்கு நேர்மறையான வாழ்க்கையை தராது.
- ஒளியை நோக்கி உன்முகத்தை திருப்பு இருளை உணரவே முடியாது.
- நன்றியுணர்வு எங்களுக்கு பிடித்த மனப்பான்மையாக இருக்க வேண்டும்.
- உங்கள் கவனம் நீங்கள் எங்கே செல்ல வேண்டுமென்பதிலே தான் இருக்க வேண்டும் உங்கள் பயத்தில் அல்ல.
- உங்கள் பயத்தைக் கண்டு அஞ்சாதீர்கள் அவைகள் உங்களை பயமுறுத்து வதற்கு அல்ல மாறாக ஏதோ ஒன்று மதிப்பானது இருக்கின்றது என்பதை உங்களுக்குத் தெரியப்படுத்துகின்றன.
- உங்களால் கடல் அலையை நிறுத்த முடியாது ஆனால் நீச்சல் கற்றுக்கொள்ள முடியும்.
- நடந்து முடிந்தவைகளை போகவிடுங்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- ஒரு வேலையை நிறுத்த நினைக்கும் போது அதை ஏன் ஆரம்பித்தோம் என சிந்தியுங்கள்.
- கோபத்தில் வெளிவிடும் வார்த்தைகளில் கவனமாக இருங்கள் அவைகள் மன்னிக்கப்படலாம் ஆனால் மறக்கப்பட முடியாதவை.
- வாழ்க்கை இனிமையாக இருக்கும் போது நன்றி சொல்லிக் கொண்டாடுங்கள் அதுவே கசப்பானதாக இருக்கும் போது நன்றி சொல்லி முன்னேறுங்கள்.
    - ஒரு முடிவில் மட்டுமே ஒரு புதிய தொடக்கம் உள்ளது.
    - இலக்கு தூரம் என்றால் பார்வையை நீட்டுங்கள்
- உங்கள் ஆசிரியர்களால் கதவை திறந்து விட மட்டுமே முடியும். ஆனால் அதன் உள்ளே நீங்கள் தான் செல்ல வேண்டும்.
- உங்களைக் காயப்படுத்தியதை மறந்துவிடுங்கள். ஆனால் அது உங்களுக்குக் கற்பித்ததை ஒரு போதும் மறந்து விட வேண்டாம்.
- "மகிழ்ச்சிக்கான திறவுகோல் சுதந்திரம்.... சுதந்திரத்திற்கான திறவுகோல் தைரியம்"
- "வெற்றிக்கான அடிப்படைத் திறவுகோல் செயல் ஆகும்"
- "சரியான வாய்ப்புக்காகக் காத்திருக்க வேண்டாம் அதை உருவாக்குங்கள்"
- "பேசவேண்டாம், செயற்படுங்கள் சத்தியம் செய்ய வேண்டாம் நிரூபியுங்கள்."
- "ஒரு இலக்கை உருவாக்கு அது உன்னை உருவாக்கும்."
- "மிகப்பெரிய இலக்குகளைத் தீர்மானியுங்கள் அதை அடையும் வரை முயற்சி செய்வதை நிறுத்தாதீர்கள்"
- "நம்பிக்கை நிறைந்த ஒருவர் யார் முன்னேயும் எப்போதுமே மண்டியிடுவது இல்லை"





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாணவர் தலைவர்களே.....

*ஆக்கம்,*
*ஆசிரியர் - செ.விஜியாநிதி*

***"ஒழுக்கம் விழுப்பம் தரலான் ஒழுக்கம் உயிரினும் ஓம்பப்படும்"***

என்ற வள்ளுவப் பெருந்தகையின் வாக்கிற்கேற்ப பாடசாலை என்ற கலைக் கூடத்தின் குறிக்கோளாம் மாணவர்களை நற்பிரஜைகள் ஆக்குவதாகும். சமூகத்தின் மத்தியிலே சிறந்த மாணவனை இணைப்பதில் பாடசாலைகள் ஒவ்வொன்றினதும் பணியானது அளப்பரியது. அது கல்வியாகட்டும் இணைப் பாடவிதானச் செயற்பாடுகளாகட்டும் ஏதுவாக இருந்தாலும் நல்ல சீரிய நடத்தையும் ஒழுக்கப் பண்பும் பெரியோரை மதித்தல், சமூகத்தின் சிறந்த மனிதனாக காணப்படும் ஒருவனே சிறந்த நற்பிரஜை ஆகின்றான். பாடசாலையின் நிர்வாகக் கட்டமைப்பில் வகுப்பறை என்ற சிறிய பிரிவில் இருந்து தொடங்குகையில் அங்கே வகுப்பறை தலைவன்/தலைவியிடம் வகுப்பறைப் பொறுப்புக்கள் ஒப்படைக்கப்படுகின்றன. தொடர்ந்து செல்கையில் மாணவ முதல்வர்கள் தலைமைத்துவமும் ஆளுமைப் பண்பும் ஏனைய மாணவர்களை சரியான வழியில் வழிநடத்தி ஒழுக்கத்திலும் பண்பிலும் சிறந்த முறையில் வளர்த்தெடுப்பதில் பாரிய பங்காற்றுகின்றனர். தனக்குக் கொடுக்கப்பட்ட பொறுப்பினை சரியான முறையிலே செய்து முடிப்பதில் ஒவ்வொரு மாணவத்தலைவர்களின் ஆளுமைப் பண்பானது மிளிரும். பாடசாலையின் கௌரவத்தினையும் சமூக மதிப்பினையும் உயர்த்துவதில் மாணவத்தலைவர்களின் பங்களிப்பானது அளப்பரியது. ஒவ்வொருவரும் தமக்கு வழங்கப்பட்ட பணியினை திறம்படச் செய்யும் வேளை பாடசாலையின் நாளாந்த செயற்பாடுகளின் முன்னேற்றமானது வியக்கத்தக்கதாகவும் இலகுவானதாகவும் காணப்படும். உங்களுக்கு வழங்கப்பட்ட மாணவத்தலைவர் சின்னமானது பாடசாலையின் கௌரவத்தைப் பேணும் நபர்களாகவே நீங்கள் திகழ்கின்றீர்கள் என்பதை அடையாளப்படுத்தும்.

உங்களால் நாளை பாடசாலையும் அதிபர், ஆசிரியர்கள் பெற்றோர் இவன் என் மகன் இவன் எனது மாணவன், என நெஞ்சை நிமிர்த்திக் கூறிட உங்கள் பணிகள் இன்றும் என்றும் சிறக்கவேண்டும். மாணவத்தலைவர்களின் செயற்பாடுகளையும் முன்னேற்றங்களையும் கணித்து ஒவ்வொரு வருடமும் சிரேஷ்ட மாணவத்தலைவர்கள் தெரிவு செய்யப்படுகின்ற வேளை ஒரு தலைமையின் கீழ்க் கட்டுப்பட்டு ஏனைய மாணவத்தலைவர்களின் நடத்தைகளை அறிந்து சரியான வழிநடத்தலில் சிரேஷ்ட மாணவத் தலைவர்கள் செயற்படுகின்றனர். எந்தவொரு நிகழ்விலும் மாணவர்களை ஒழுங்குபடுத்தி வழிப்படுத்தும் பாரிய பொறுப்புக்கள் மாணவத் தலைவர்களையே சார்ந்தது. ஒவ்வொரு உயிரினமும் தன் தலை மைக்கு கட்டுப்பட்டு பொறுப்புடன் செயற்படும் போது ஆறறிவு படைத்த நாம் எப்படி செயற்படவேண்டும். ஒவ்வொரு மாணவனுக்கும் பாடசாலைக் காலமானது பொற்காலமாகும். மீண்டும் வராத காலம். கல்வி பயிலும் காலங்களில் எம்மால் முடிந்தவரை பல நன்மைகளையும் செயற்பாடுகளையும் எல்லோராலும் காலங் காலமாக கூறக்கூடிய வகையில் உங்களுடைய நடத்தைக் கோலங்களையும் நிலை நிறுத்துவது முக்கியம் பெறுகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மயானத்துத் தருக்கள்

*ஆக்கம்,*
*பா.சயந்தன்*
*(தரம் - 11)*

எத்தனை மரங்கள்?
அமைதியாகக் காத்து நிற்கின்றன
இன்னும் எவர் வருவார் - எவர்
போவார் என்ற ஏக்கத்துடன்



எத்தனை உடல்கள்?
அந்த மரங்களின் நிழலிலே
நித்தியமாய் நித்திரை கொள்ள
வந்து கொண்டிருக்கின்றன

மயானத்து மௌனத்தையும்
மனிதர்களின் மௌனத்தையும்
ஒன்றாக்கி வைத்துத்தான் - அந்த
இலைகளின் நர்த்தனத்தை - அறிய இயலுமோ

எத்தனை காலம் போனாலும்
எத்தனை பேர் வந்தாலும் - நல்லோர்
தீயோர் பாராமல் கைகொடுக்கும் - நீ
என்றும் நல்லோனே

மனிதர்கள் உறங்கும் - மயானத்திலும்
காற்றைத்தந்து உதவும் - நீயே
கற்பகதரு - காற்றில்லாமல்
சுவாசம் இல்லை - தருக்கள் இல்லாமல்
மனித குலமே இல்லை................






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உண்மையான மகிழ்ச்சி

*ஆக்கம்,*
*தோ.டிலக்ஷன்*
*(2022 A/L)*

மீயூர் என்ற அழகிய கிராமத்திலே ஒரு அடர்ந்த காடு காணப்பட்டது. அங்கே விலங்குகள், பறவைகள் அனைத்தும் மிகவும் மகிழ்ச்சியாக வாழ்ந்து வந்தன. ஏனெனில் அக்காட்டின் சிங்கராஜா பிராணிகளை வேட்டையாடுவதோ துன்புறுத்துவதோ இல்லை. ஒருநாள் காட்டில் சிங்கராஜா இல்லாதவேளை காட்டினுள் சில வேட்டைக்காரர்கள் நுழைந்தார்கள். அவர்களைக் கண்டதும் அனைத்துப் பிராணிகளும் திக்குத் திசை தெரியாமல் சிதறியடித்து ஓடின.

அதில் மான்கூட்டத்துடன் ஓடிக்கொண்டிருந்த சிறிய மான்குட்டியொன்று திடீரென நின்றுவிட்டது. இதனைத் தாய் மான் கவனிக்காமல் ஓடிக்கொண்டிருந்தது, சிறிது தூரம் சென்றபின் தனது குட்டியைக் காணாமல் தவித்தது. வந்தவழியே குட்டியைத் தேடி ஓடியது. குட்டி நின்று கொண்டிருப்பதைக்கண்டு அதன் அருகில் ஓடிச்சென்று வா என்று அழைத்தது. குட்டியோ நான் வரமாட்டேன் என்று கூறி அதே இடத்தில் நின்றது.



தாய்மான் குட்டியிடம் அடம்பிடிக்காமல் என்னுடன் வந்துவிடு என்றது. அப்போது குட்டி மான் தாயிடம் இன்று நான் அனைத்துப் பிராணிகளுக்காகவும் எனது உயிரை விடப்போகிறேன். நான் வேட்டைக்காரர்களிடம் மாட்டிக்கொண்டால் வேட்டைக்காரர்கள் என்னைக் கொண்டு சென்றுவிடுவார்கள். மற்றைய விலங்குகள் தப்பித்துக் கொள்ளும் அம்மா. நான் வாழ்ந்தது சிறிது காலமாக இருந்தாலும் அக்காலம் முழுவதும் ஏனைய விலங்குகளுக்காகவே வாழ்ந்திருக்கிறேன் என்பதை நினைக்கும் போது மகிழ்ச்சியாக இருக்கின்றது என்று கூறிக்கொண்டு இருக்கும் போதே வேட்டைக்காரர்களின் துப்பாக்கிச் சூடு பட்டு அதே இடத்தில் சுருட்டு விழுந்து உயிரை விட்டது.

**"நாம் நமக்காக வாழும் போது கிடைக்கும் மகிழ்ச்சியை விட பிறருக்காக வாழும் போது கிடைக்கும் மகிழ்ச்சியே உண்மையான மகிழ்ச்சி"**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காலமெனும் கவின்சிற்பி

*ஆக்கம்,*
*ம.தரங்கினி (2022-Bio)*

**"நாளென ஒன்றுபோல் காட்டி உயிர் ஈரும் வாளது உணர்வார் பெறின்"**

என காலத்தின் அருமை பற்றி நயமுடன் எச்சரிக்கின்றார் திருவள்ளுவப் பெருமான். அதாவது நாள் எனும் காலக்கருவிதான் உடம்பிலிருந்து உயிரைப் பிரித்து அறுத்தெடுக்கும் வாள் என்று நுணுக்கமுடன் அவர் கூறுகிறார். காலையில் நாம் எழுந்தவுடன் கிழித்தெறியும் நாட்காட்டியின் தாள் போல் நமக்கென்று அனும திக்கப்பட்ட ஆயுட்காலத்தில் ஒரு நாள் கிழித்தெறியப்பட்டு கழிக்கப்படுகிறது. இந்தப் பேருண்மையைப் புரிந்து கொள்ளாமல் நாளை நிறைவேற்றலாம் என நாளைக் கடத்துவோர் வாழ்வில் உரிய வெற்றிகளையும் இலக்குகளையும் அடைவ தேயில்லை.

தீதோ நன்றோ, நலனோ பலனோ, வீணோ விரயமோ நேரத்தை எதில் பயன்படுத்தினாலும் அல்லது பயன்படுத்தாவிட்டாலும் நேரமானது சங்கிலித்தொடர் போன்று சீராக நம்மை விட்டு ஒவ்வொரு கணமும் நிற்காமல் கடந்து சென்று கொண்டே இருக்கும். எவனொருவன் கடிகாரத்தின் நொடி முள்ளைப் போல ஓடிக்கொண்டிருக்கிறானோ அவன் தான் சாதனையாளன் ஆகிறான். இவ்வாறு காலத்தின் முக்கியத்துவத்தினை விவேகானந்தர் தன் பொன் மொழிகளால் அழகுற எடுத்துக்கூறியுள்ளார். அதாவது "நீங்கள் வாழ்க்கையில் வெற்றிகளை அறுவடை செய்ய விரும்புகிறீர்களா? அப்படியானால் ஒரு சிறிய நொடியையும் வீணாக்கிவிடாதீர்கள். ஏனெனின் வாழ்க்கை என்பதே நேரம் எனும் இழையால் செய்யப்பட்டது என்கிறார் அவர். எவன் "நேரம் போதவில்லை" என்கிறானோ அவன் சாதனையாளனாகின்றான். எவன்" நேரம் போகவில்லை" என்கிறானோ அவன் பின்னோக்கி செல்கிறான். ஒரே ஒரு எழுத்துதான் அவர்கள் வாழ்க்கையைத் தீர்மானிக்கின்றது.

காலத்தின் பெருமையை அருமையாக உணர்ந்த ஜப்பானியர் தங்கள் தேசிய கீதத்தைக் கூட நான்கே அடிகளில் அமைத்துக்கொண்டிருக்கிறார்கள். விரைவாக நிகழ்ச்சியை முடித்து அடுத்த வேலையைக் கவனிக்க வேண்டும் என்ற துடிப்பும் விறுவிறுப்பும் இதன்மூலம் தெளிவாகிறது. உலகிலேயே மிகச்சிறிய தேசிய கீதத்திற்கு உரிமையாளர்களான அந்த குள்ள உருவம் பெற்றவர்கள்தான் கவிதை பாடுவதிலும் குறுகிய வடிவில் உள்ள "கைக்கூ" வடிவக்கவிதைகளால் வையகத்தையே வியப்பில் ஆழ்த்திக்கொண்டிருக்கிறார்கள். அது மட்டுமன்றி இன்றைய உலகில் பல உற்பத்திகளுக்கு உரிமையாளராக ஜெட் வேக முன்னேற் றத்தில் காணப்படுகின்றது ஜப்பான்.

**"கொக்கொக்க கூம்பும் பருவத்து மற்றதன் குத்தொக்க சீர்த்த விடத்து"**

என்று கொக்கையும் அது இரையைக் கொத்தும் தன்மையையும் காட்டி காலத்தோடு செயற்பட வேண்டியது பற்றி அற்புதமாக நெஞ்சில் பதியவைக்கிறார் வள்ளுவப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெருமான். நீரில் மீன் வரும்போது நேரத்தை வீணடிக்காமல் நொடிப் பொழுதில் அதைக் கொத்திப் பிடிக்காத கொக்கு பசியால் வாடுவது உறுதி. அதைப்போல் கடமையைக் காலத்தோடு செய்யாதவர் எதையும் சாதிக்க இயலாதவர்களா கின்றனர்.

அவ்வாறே காலத்தின் அருமை பற்றி இன்னோர் அறிஞர் பின்வருமாறு கூறியுள்ளார். "அதோ கடிகாரத்தின் டிக் டிக் ஓசை கேட்கிறதே, அது என்ன தெரியுமா? அது தான் நம் ஆயுள்மரத்தை வெட்டிக்கொண்டிருக்கும் கோடரிச் சத்தம். வாழ்க்கை மரம் வீழ்வதற்குள் வெற்றிக்கனிகளை உலகிற்கு நாம் வழங்கிட வேண்டும் என்கிறார் அவர். காலம் என்பது இயற்கை நமக்கு அளித்திருக்கும் மூலதனக் கருவூலம் அதில் உள்ள விலைமதிப்பில்லாத வைரங்களே மணித் துளிகள்" அந்த ஒவ்வொரு மணித்துளியையும் யார் முழுமையாகப் பயன்படுத்து கிறார்களோ அவர்கள் சிறந்த தலைமைகளாக மாற்றம் காண்பார்கள். நாமும் எமது காலத்தைச் சரியாகப் பயன்படுத்தி இவ்வுலகை ஆள்வோம்.






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பூரண மனிதனாய் வாழ்ந்திடக்கற்றல்

*ஆக்கம்,*
*இரவீந்திரன் திலக்ஷன்,*
*ஆசிரியர் (NDT,BSC)*
*கிளி/கிளிநொச்சி மத்திய மகாவித்தியாலயம்.*

பெரும்பாலும் வாழ்க்கையிலே நாம் நீண்டதூரம் பயணித்திருப்போம். எம்மை மீளமைத்துக்கொள்ள கால அவகாசம் போதாமலிக்கும். எனவே, வாழ்க் கையில் நாம் வெற்றியடைந்தோம் வாழ்க்கையைப் பரிபூரணமாக வாழ்ந்தோம் என்பதை எவ்வாறு அளவிடலாம் என்று அறிந்து, இப்போதே எம்மை நாம் தயார்படுத்திக் கொள்வதே சாலச்சிறந்தது.

"வாழ்க்கை முன்னேற்றச் சக்கரம்" என்பதன் மூலம் எம்மை நாமே அளவிட்டுக் கொள்ளலாம். மற்றவர்களுக்காகவன்றி, எமக்காக எமது மனச்சாட்சி யின் படி, நாம் எங்கே நிற்கிறோம் என நம்மை நாமே சுயமதிப்பீடு செய்து கொள்வோம்.

தனிப்பட்ட முன்னேற்றம், என்பது தொழில்சார் முன்னேற்றம், உறவுகளில் முன்னேற்றம், நிதி நிலைமையில் முன்னேற்றம் சமூகப் பங்களிப்பில் முன்னேற்றம் மற்றும் ஆன்மீகத்தில் முன்னேற்றம் என அனைத்துத் துறைகளிலும் முன்னேறி யிருந்தாலே வாழ்க்கையில் முன்னேறியதாக அர்த்தம். வாழ்க்கையைப் பூரணமாக வாழ்ந்ததாக அர்த்தம். ஒவ்வொரு துறையிலும் எவ்வளவு தூரம் முன்னேறி இருக்கிறோம் என நம்மை நாமே அளவிட்டுக்கொள்ளலாம். ஒரு துறையில் மிக அதிகமாகவும், இன்னோர் துறையில் மிகவும் குறைவாகவும் முன்னேறியிருப்பின் முன்னேற்றச் சக்கரம் சீராக உருளாது. பூரணத்துவமான வாழ்க்கையாகிக் கொள்வது கடினமாகவிருக்கும். எனவே, குறைவான வீத முன்னேற்றமுள்ள துறை யைச் சிறிது முன்னேற்றுதல் பொருத்தமாகவிருக்கும்.

<u>**தனிப்பட்ட முன்னேற்றம்**</u>

தனிப்பட்ட, தனிநபர் சார் முன்னேற்றத்தை இது குறிக்கும். உடலை ஆரோக்கியமாக வைத்திருத்தல். எமது தனிப்பட்ட முன்னேற்றத்தில் ஓர் பகுதி இதுவாகும். உடல் ஆரோக்கியத்திற்குத் தேவையான நிறையுணவு பற்றிய அறிவு இருப்பதோடு அதனை நடைமுறைப்படுத்தல் அவசியமாகும். காலையுணவு கட்டாயம் உண்ணுதல் வேண்டும். அத்தோடு போதிய உடற்பயிற்சியும் ஓய்வும் கட்டாயம் அவசியமாகும். அதிக மனஅழுத்தம் எம்மைப் பாதிக்காத வண்ணம் பார்த்துக்கொள்வதும் நன்று. எமது தனிப்பட்ட முன்னேற்றத்தில் இன்னோர் பகுதி மென் திறன்கள் ஆகும். மற்றவர்களுடன் தொடர்பாடும் முறை, பொறுப்புணர்ந்து செயற்படும் தன்மை, குழுவாகச் செயற்படுந்தன்மை, தலைமைத்துவம் வழங்கப்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

படுகையில் சுயநலமின்றி இருத்தல், வழிநடத்துதல் போன்ற குணங்கள் நாம் எங்கே நிற்கிறோம் எனச் சிந்திக்க முடியும்.

**தொழில்சார் முன்னேற்றம்**

எமது தொழிலில் எவ்வளவு முன்னேறியிருக்கிறோம் என்பதை சுயமதிப்பீடு செய்யலாம். திறமை மிக்க ஆசிரியர் ஒருவர் தனது பாடத்தினை மிகவும் அர்ப்பணிப்புடனும் திறமையாகவும் கவர்ச்சியாகவும் எளிமையாக விளங்கிக்கொள் ளக்கூடிய வகையில் கற்பிக்கிறாரா?மாணவர்கள் அனைவரும் விளங்கிக் கொண்டுள் ளார்கள் என்பதை உறுதிப்படுத்திக்கொள்வது நன்று. தொடர் கற்றல் மூலம் தனது பாடம் சம்பந்தமாகவும் கல்வியில் மற்றும் கற்றல் மூலம் தனது பாடம் சம்பந்தமாகவும் கல்வியியல் மற்றும் கற்றல் கற்பித்தல் தொடர்பாகவும் ஏற்பட்டு வரும் நவீன உத்திகள் மற்றும் மாற்றங்கள் பற்றி ஆவலுடன் தொடர்ந்து வருகிறாரா எனவும் கணிப்பிடமுடியும்.

**உறவுகளின் முன்னேற்றம்**

ஏனையவர்களுடன் எமது உறவை நன்னிலையில் பேணுதல் எமது கடமையாகும். குடும்ப உறவுகளான தாய்,தந்தை,சகோதரர்கள், கணவன்,மனைவி, குழந்தை போன்றோருடன் உறவுமுறை முன்னேற்றகரமாக உள்ளதாவென அறிதல். எமது சொல் செயல்கள் அவர்களுக்கு உற்சாகமும் உறுதுணையாகவும் இருக்க வேண்டும். நண்பர்கள் மற்றும் சக ஊழியர்களின் சுக துக்கங்களில் மனப்பூர்வமாகப் பங்குபற்றுதல் அவர்களின் முன்னேற்றத்தை எமது முன்னேற்ற மாகக் கருதுதல். இவற்றின் மூலம் எம்மைத் தமது நண்பராகவோ,உறவாகவோ சொல்லிக் கொள்வதில் அவர்கள் திருப்தி கொள்கிறார்களா என கணிப்பிடமுடியும்.

**நிதி நிலைமையின் முன்னேற்றம்**

மிகுந்த பணக்காரராக இல்லாத போதும் எமது தேவைகளை நிறைவேற்றக் கூடிய நிலையில் இருத்தல். நிதித்தேவைக்காக மற்றவர்களிடம் தங்கியிராத தன்மை, எமது பணத்தேவைகளுக்கு மற்றவர்களிடம் தங்கியிருக்கிறோமா? எமது வருமானத்திற்கு உட்பட்டவகையில் செலவு செய்கிறோமா? சிறு தொகையேனும் சேமித்து வைக்கிறோமா? ஒரு சிறுதொகையைத் தான தருமம் செய்கிறோமா? என எம்மால் எம்மை மதிப்பிட்டுக் கொள்ள முடியும்.

**சமூகப்பங்களிப்பில் முன்னேற்றம்**

நாம் ஒரு சமூகப்பிராணி, எமது முன்னேற்றத்திற்கு பெற்றோர் உறவினர், ஆசிரியர், நண்பர் ஏன் முகம் தெரியாதவர்கள் கூட உதவியுள்ளனர். எனவே வட்டியோடு இல்லாவிடினும் ஓரளவிற்காவது எமது கடனை திருப்பிக்கொடுக்க வேண்டியது எமது கடமை அல்லவா? நாம் நன்மை செய்யச் செய்ய மிகுந்த நன்மை எமக்கு விளையும் அத்துடன் பரம்பரையும் நன்கு வளரும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**ஆன்மீகத்தின் முன்னேற்றம்**

எம்மையும் மீறி ஒரு சக்தி எம்மை இயக்கிவருவதை யாவரும் ஏற்றுக் கொண்டுள்ளனர். மெஞ்ஞானிகள் கடவுள் என்றும் பிரம்மம் என்றும் விஞ்ஞானிக ளின் அதீதபுத்தி, இயற்கைசக்தி என்றும் குறிப்பிடுகின்றனர். இந்தசக்தி எம்மிலும் அனைத்து உயிர்களிடமும் காணப்படுவதை உணர்ந்து செயற்படுவதையே ஆன்மீகத்தில் முன்னேற்றம் எனலாம். இயற்கையைப் பேணிக்காப்பதும் இந்த வகையிலேயே அடங்கும். நாம் அனைவரும் ஒன்றே என்ற உணர்வு ஏற்படுகை யில் அன்பு, கருணை, இரக்கம் மற்றவர்கள் நிலையில் எம்மை வைத்துப் பார்த்தல் என்ற உணர்வுகள் ஏற்படும். இந்நிலையில் போட்டி பொறாமை அகலும், சூது, வாது மறையும் கொலை, கொள்ளை அகன்று பூவுலகே சொர்க்க லோகமாகும். எம்மைப்போல மற்றையோரையும் நேசிக்கும் தன்மையிது. எமது நிலை என்ன என்பதை இறைவழிபாடு தியானம், நல்லவர்களின் சேர்க்கை என்பவற்றிலிருந்து அறியமுடியும்.

இப்பொழுது எமது வாழ்க்கை முன்னேற்றச் சக்கரம் எமக்குக் கிடைத்திருக் கும். ஒரு சில துறைகளில் நன்கு முன்னேறியும் சிலவற்றில் பின்தங்கியும் இருக் கக்கூடும். பாதகமில்லை இதனை அறிந்து கொண்டதே மிகப் பெரிய விடயம்.

ஆகவே பூரணமனிதனாக வாழ்வதில் இனியென்ன நிறைவாக, நல்லதோர் சமுதாயத்தைக் கட்டியெழுப்பி கல்வியெனும் மந்திரக்கோலை தொழிற்கல்வி மற்றும் வாழ்க்கைக்கானகல்வி என்பவற்றில் நல்ல முறையிலே பயன்படுத்துவோம்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பள்ளியும் நட்பும்

*ஆக்கம்,*
*கு.றஜித்*
*(2021 Commerce)*

என்ன எழுத வேண்டும்?
எதை எழுத வேண்டும்?
எப்படி எழுத வேண்டும்?
அப்படிப் பல கேள்விகள் என்னுள்
இத்தனையில் – பள்ளி நட்பு பற்றிக்கொண்டது என்னை

அவன் மதம் என்ன?
அவன் ஊர் என்ன?
அவன் குலம் என்ன?
அவன் பணக்காரனா? ஏழையா?
யாரவன்?

எதுவும் அறியாமல்
எதுவும் தெரியாமல்
தேக்கி வைத்தோம் – அன்பை
பாய்ச்சி வளர்த்தோம் – நட்பு
எனும் பயிரை

வெறுப்புக்கள் இல்லாது
வேறுபாடுகள் காட்டாது
வேறெதற்குமல்லாத நட்பு
வெறுத்துப் போகாத அன்பு

பள்ளி நட்பு போல்
தேடிமுடிவதில்லை எங்கும்
நாடிவருவதில்லை – அவை
பாடிக்களிப்பதும் இல்லை
நட்பின் தேடல் – பள்ளியெனும்
தோட்டத்தில் பாசத்தோடு
தொடரும்.........

அம்மாவாய் ஆசான் வகுப்பெடுக்க – ஆசை மச்சான்
வாடா போவம் வெளியே
இண்டைக்கு விருப்பமில்லை படிக்க எண்டு
ஈரம் காயக்காய வகுப்பெடுக்கும்
வாத்தியாருக்கு கடுப்பெடுக்கும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஊரில் அம்மாட்ட பத்த வைப்பார்
என்னவோ என்று சொல்ல
அம்மாட அடி ஏட்டுச்சுரக்காய் என்று
தப்பி நூலகம் ஓடினால்
ஒளிஞ்சிருக்கும் கமரா காட்டிக்கொடுக்க
ஓடி ஒளிய வேண்டும்.
அவ்விடத்தை விட்டு
அஃதினிதே பள்ளிக்காலம்....

சாதனை பல நீ செய்ய வேண்டும்
சாமானியன் அல்ல நீ என்று
இந்த உலகம் உணர வேண்டும்
அந்த நாள் உன் வாழ்வில் உண்டு
எனச்சொல்லி வளர்த்த ஆசானை
என் அன்னை என்பேன்
நம்பிக்கையின் உச்சம் என்பேன்

அன்பை பண்பை
நல்லடக்கத்தை என மொத்தத்தையும்
கற்றுக்கொண்டோம்
மெத்தப் பயனளிக்கும் பின்நாளில்

இனிதான பள்ளி நினைவை
நனிதாய் இயம்பி
நட்பதையும் நட்டு வைத்து
ஆசான் காட்டிய வழியில் பயணித்து
சான்றோர் ஆவோம்
சாதனை பல புரிவோம்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஈரநிலங்களைப் பாதுகாப்போம்

***ஆக்கம்,***
***யூ.ஒறிஸ் பேம்ஸ்***
*(2020 Bio)*

இயற்கையின் வனப்பையும் கண்கொள்ளாக் காட்சியையும் இரசிக்கக் கூடிய இடமாக எமது நாடான இலங்கை காணப்படுகின்றது எமது அதிஷ்டமே. இவ் அழகை அள்ளித்தருவதில் ஈரநிலங்கள் முக்கியத்துவம் வாயந்ததாகக் காணப்படுகின்றதெனலாம். நிலையாகவோ அவ்வப்போதோ இயற்கைச் சூழலின் நீரினுள் அமிழ்ந்த நிலையில் காணப்படும் நிலப்பரப்புக்களே ஈரநிலங்கள் எனப்படுகின்றன. சில ஈரநிலங்கள் நன்னீரைக் கொண்டன சில ஈரநிலங்கள் சவர் நீரைக்கொண்டன மற்றும் சில ஈரநிலங்கள் உவர் நீரைக்கொண்டன. ஈரநிலங்கள் சில எப்போதும் நீரில் அமிழ்ந்தும் மற்றும் சில ஈரநிலங்கள் சில காலங்களில் மட்டும் நீரில் அமிழ்ந்தும் காணப்படுவதுண்டு. பெரும்பாலான ஈரநிலங்கள் இயற்கையானவை. பிறகாலத்தில் மனிதனால் உருவாக்கப்பட்ட சில ஈரநிலங்களையும் சூழலில் காணலாம்.

ஈரநிலங்கள் தரிசு நிலங்களன்று பற்பல தாவர இனங்களும், விலங்கு இனங்களும் அங்கு வாழ்கின்றன. நுண்ணிய தாவர பிளாந்தன்கள் தொடக்கம் யானைகள் போன்ற பாரிய முலையூட்டிகள் வரையிலான உயிரினங்கள் ஈரநிலங்களில் வாழ்கின்றன. ஈரநிலங்கள் பன்தொட்டு பல உற்பத்திகளையும் சேவைகளையும் நல்கிவருகின்றன. எமது தேவைகளை ஈடுசெய்யும் உற்பத்தி சேவையாகவும் சூழல் வளங்களைப்பேணும் காப்பகமாகவும் ஈரநிலங்கள் தொழிற்படுகின்றது இயற்கை வெளிக்காட்டுவதன் மூலம் எம்மை மகிழ்விக்கும் தன்மையையும் ஈரநிலங்கள் கொண்டுள்ளன.


ஈரநிலங்களிலிருந்து நீர், உணவு, சுவையூட்டி, பழங்கள், ஔடதங்கள் என்பவற்றைப் பெற்று பயன் பெறுகின்றோம். மேலும் ஈரநிலங்கள் நீரைச் சுத்திகரிக்கின்றது. வெள்ளப்பெருக்கை கட்டுப்படுத்துகின்றது கடலரிப்பையும், காற்றரிப்பையும் தடுக்கிறது. உயிரினங்களுக்கு வாழ்விடமாக அமைகிறது. ஆனால், இவ் இலங்கை மக்களின் அறியாமையாலும் இன்னும் பிற காரணங்களாலும் கவனிப்பாரற்று விடப்பட்டுள்ள ஈரநிலங்கள் மிக ஆபத்தான நிலையில் உள்ளது. சிறப்பான ஓர் உயிர்ப்பல்வகைமைக்கான ஊற்றிடமாக விளங்கும் இந்த ஈரநில தொகுதிகள் அழிவை நோக்கி செல்வது தடுக்கப்பட வேண்டிய ஒன்றாகும். தற்போது இதன் பல்வேறு காப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. 1997 ஆம் ஆண்டு தொடக்கம் ஒவ்வோர் ஆண்டும் பெப்ரவரி மாதம் 02 ஆம் திகதி உலக ஈரநில தினமாக பிரகடனம் செய்யப்பட்டு பல்வேறு தொனிப்பொருள்களின் கீழ் நினைவு நிகழ்ச்சிகள் ஏற்பாடு செய்யப்பட்டு வருகின்றன. சூழலின் சமநிலை குலையாது ஈரநிலங்களை பாதுகாப்பது எமது ஒவ்வொருவரினதும் கடமையாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# KILINOCHCHI MADYA MAHA VIDYALAYAM

## Pricipal, Deputy Principals, Teachers & Non Academic Staff-2020




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இயற்கையின் ஏமாற்றம்

ஆக்கம்,
வி.யோகடிலக்சிகா
(2022 -Bio)

தினமும் எழும் சூரியனே
உன்னை யார் எழுப்புகின்றார்
துணையே இல்லாத நிலவே
யாருக்காகத் தினமும் காத்திருக்கின்றாய்
மேகமே என்ன இவ்வளவு சோகம்
மழையாய் கண்ணீர் பொழிகின்றாய்
வானவில்லே!!!
ஏழு வர்ணத்தில் யாருக்காக பாதை அமைக்கிறாய்
எல்லாம் மனிதனுக்காக இல்லை
ஆனால் நாம் எல்லாவற்றையும்
எடுத்துக்கொண்டோம்....






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கொவிட்காலம் ஓர் பார்வை

*ஆக்கம்,*
*கணேசன் கீதசஞ்சாரன்,*
*சிரேஷ்ட மாணவ தலைவன்*
*(கணிதப் பிரிவு-2020)*




2019 ஆம் ஆண்டின் இறுதியில் சீனாவின் வூவாங்(Wuhan) நகரில் உருவானது இந்த COVID 19 VIRUS. இது கொஞ்சம் கொஞ்சமாக அயல் நகரங்களிலும் நாடுகளிலும் பரவ மக்கள் தொற்றுக்கு ஆளாகின்ற வீதம் அதிகரித்துக் கொண்டேயிருந்தது. ஆரம்பத்தில் வௌவால்கள் மூலம் தோற்றம்பெற்றது என்று அறிவித்தல்கள் கிடைக் கப்பெறலானது. ஆனாலும் அதன் உண்மைத்தன்மை என்ன என்பது மர்மமாய் இருக்கிறது. ஆரம்ப கட்டத்தில் இத்தொற்று தொடர்பான சில செய்திகள் வெளிவந்த போதிலும் உலக நாடுகள் இதனைப் பெரிதும் பொருட்படுத்தாத தன்மையே உலகம் முழுவதும் இந்த நோய் வியாபிக்க ஏதுவாய் அமைந்தது எனலாம். இந்த அலட்சியப்போக்கே 2020 ஆம் ஆண்டின் உலகநாடுகளின் அனைத்து துறைசார் பின்னடைவுகட்கும், நெருக்கடி நிலைகட்கும் முழுமையான காரணமாய் இருந்தது என்பதே உண்மை.

இவ்வாறே இலங்கையிலும் 2020 மார்ச் மாதம் அளவில் வெளிநாட்டு பயணிகள் மூலம் இலங்கைக்குள் நுழைந்த இந்த வைரஸ் கொஞ்சம் கொஞ்சமாய் ஒருவரிடத்திலிருந்து இன்னொருவருக்கு சுவாசம் மூலம் தொடுகைகள் மூலம் சமுதாயத்திடம் ஊடுருவ ஆரம்பமாகியது இந்த வைரஸ். நம்மவர்களும் இதன் பிடிக்கு உட்படலானார்கள். அப்போது தான் உலகம் முழுவதும் இதன் ஆக்கிரமிப் பைக் கண்டு பயம் கொள்ள ஆரம்பித்தது. எப்படி இந்த கண்ணுக்குத் தெரியாத நுண்ணங்கிகளிடமிருந்து நம்மை நாம் பாதுகாப்பது, இதன் பரவல் தொடர்ந்து அதிகரிக்குமேயானால் மனுக்குலம் அடியோடு அழிந்து விடும் **"கரணம் தப்பினால் மரணம்"** என்ற நிலை எல்லோரையும் நிலைகுலைய வைத்துவிட்டது. எனவேதான் இதிலிருந்து பாதுகாத்து வாழ்வது எப்படி என்ற வினாக்கள் பேசுபொருளாகின.

இவ்வினாக்களின் விடையாய் தடுப்பூசி கண்டுபிடிக்க முயன்றது உலக வல்லரசுகள். ஆனால் அதுவரை சில முற்காப்புத் திட்டங்களை உலக சுகாதாரஸ் தாபனம்(WHO) வழங்கலானது. அவையாவன, முகக்கவசம்(Mask) அணிதல், சமூக இடைவெளியை பேணல், குறிப்பிட்டகால நேரத்திற்குள் தங்கள் கைகளைக் கழுவுதல், கைகளால் கண்மூக்கு வாய் போன்ற உறுப்புக்களைத் தொடுதலை தவிர்த்தல் போன்ற சில காப்பு நடவடிக்கைகள் பரவலை தடுப்பதற்கு உதவியாய் அமைந்த திட்டங்களாகும். எவ்வாறாயினும் இந்தத் திட்டங்களை நடைமுறை வாழ்வியலுக்கு பழக்கப்படுத்திக்கொள்ள மக்கள் உடல், உளச்சார்பான சிக்கல்களை முகம்கொடுத்ததை அறிந்த அரசாங்கங்கள் அவற்றை சட்டங்களாக மாற்றிக்கொண்டார்கள்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



சட்டங்களைப் பேணாது விடின் தக்க நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்பதையும் மக்கள் அறிந்து கொண்டார்கள். என்னதான் இந்த முற் காப்புத் திட்டங்கள் நடைமுறையில் இருந்த போதி லும் இந்த ஆட்கொல்லி நோய் தீவிரம் அடைந்து கொண்டேயிருந்தது. இதன் பரவல் வேகம் தொடர்ந்ததிகரிக்க சில நாடுகள் உடன் அமுலுக்கு வரும் வகையில் 144 என்கின்ற தடையுத்தரவைப் பிறப்பித்தன. இதன்மூலம் மக்கள் தத்தம் வீடுகளிலே இருக்க வேண்டும் யாரும் வெளியேறக்கூடாது. வீடுகளிலேதான் இருக்கவேண்டும் என்ற நிலை ஏற்பட்டது.

சுதந்திரப்பறவையினைக் கூட்டுக்குள் அடைத்து விட்டாற்போல் வேறுவழி யின்றி நோயிடமிருந்து தம்மைக் காக்க எல்லோரும் தங்கள் வீடுகளில் சமூக முடக்கத்தை கடைப்பிடிக்கலானார்கள்.

உண்மையில் இதுவொரு சிறைவாசம் வெளியே செல்லமுடியாதநிலை என்கின்ற போது விரக்தியான மனோநிலை ஏற்பட்டது. எனினும் சில நாட்கள் செல்லச் செல்ல தன் குடும்பத்தோடு தன் உறவுகளோடு சேர்ந்து மகிழ்வாய் பொழுதைக் கழிக்கின்ற வாழ்வு புதியதோர் அம்சமாய் அமைந்தது. ஏனென்றால் தொடர்ச்சியாக வேலைப்பழுக்களிலிருந்து பணம்தேடும் மானுடவாழ்க்கையில் ஞாயிற்றுக் கிழமைக்காய் மட்டும் ஏங்குகின்ற மனிதர்களிற்கு இது ஒரு "வரமாய்" அமைந்திடலானது, தன்பிள்ளைகள், மனைவி, பெற்றோர் என்று மகிழ்ச்சியும், அன்பும், கூட்டுறவும், வளர்ந்திட இந்த சமூக முற்றடக்கம் ஓர் காரணியானது. மேலும் சிலர், தங்கள் வீடுகளை அலங்கரித்தல் வீட்டுத் தோட்டம் அமைத்தல், கால்நடை வளர்ப்பு, தங்களால் முடிந்த சில விடயங்களை குடும்பம் சகிதம் செய்து தங்கள் பொன்னான தருணங்களை சிறப்பானதாக மாற்றிக்கொண்டார்கள். நண்பர்களை சந்திக்க முடியாது என்ற நிலை எவருக்கும் ஏற்படவில்லை. ஏனெனில் தொலைபேசி நிறுவனங்கள் இணையவசதிகள் என (Sim) பல சலுகைகளை மக்களிடத்திலே இலவசமாக வழங்கி(Data, Phone Recharge, SMS) என்பவற்றை மக்களிடத்திலே வழங்கியதனூடாக நாம் தனிமையில் இருக்கின்றோம் என்கின்ற எண்ணத்தில் மூழ்காது மக்கள் சாதாரண நடைமுறை வாழ்க்கையை வாழ ஏதுவாய் அமைந்தது. என்னதான் இருந்த போதிலும் தொற்றுத் தீவிரமடைந்த பிரதேசங்களில் தொடர்ச்சியாக இறப்புக்கள் ஏற்பட்டன.

இவ்வாறு இருந்த போதிலும் மகிழ்ச்சி மறுமலர்ச்சியடைய முடிந்தாலும் இந்நிலை தொடருமானால் அன்றாட உணவுத்தேவை என்னவாகும்? பணம் இல்லையே? வேலை இல்லையே? பிள்ளைகளுடைய கல்வி என்னவாகும்? என்கின்ற போதில்தான் சிலதுறைகளில் தொழில்நுட்பம் உதவியாய் அமைந்தது. தொலைக் கல்வி முறை(Zoom) மூலம் நாமெல்லாம் பாடசாலையில் இடைநிறுத்திய கல்வி நடவடிக்கைகளை தொடர ஆரம்பித்தோம். சிலர் வீடுகளில் இருந்து தம் அலுவலக பணிகளை செய்தார்கள். ஆனாலும் இந்த வழிமுறை அனைத்து துறையினராலும் கைக்கொள்ள முடியாமல் போனது, உதாரணமாக, தினசரி, உழைப்பை நம்பி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாழ்கின்ற சாதாரண தொழிலாளர்களால் உணவுத்தேவையை பூர்த்தி செய்ய முடியாமல் போகவே அரசாங்கமும் ஒரு குறித்த தொகையை இவ்வாறான மக்களுக்கு வழங்கியது. இதுபோல் புலம் பெயர், தென் இலங்கை, வாழ் உறவுகளும் கைகொடுத்து உணவுப்பொதிகளை மக்களுக்காய் வழங்கி இந்த நெருக்கடியான சூழ்நிலையில் மக்களுக்கான உதவிகளை மேற் கொண்டார்கள்.

உண்மையிலே தன்பசியை மட்டும் பார்க்காது இன்னுமொருவனுக்குப் பசிக்கும் அவனும் ஒருயிர் என்பதை உணர்ந்தவர்கள் மனிதநேயம் மிக்கவர்களாய் செயற்படலானார்கள். இப்படியான ஓர் எண்ணத்தை "மனிதத்தை" எம்மிடையே விதைத்து சென்றது இந்த நோய்.

**"எந்த தீமைக்குள்ளும் ஓர் நன்மை உண்டு என்ற வாக்கு உண்மையானது."**

**எடுத்துக்காட்டாக : வானிலை நேர்த்தியானது அதன் மூலமாக மழை வீழ்ச்சி குறைவடைந்த பிரதேசங்கள் பலவற்றிலும் மழை கிடைக்கப்பெறலானது. மேலும் இந்தச் சமூக முற்றடக்கம் காரணமாக, தொழிற்சாலைகள் மூடப்பட்டிருந்தமை யாலும் வாகனப் போக்குவரத்து இன்மையாலும் சூழல் மாசடைதல், குறிப்பாக வளி மாசடைதல் குறைக்கப்பட்டது என்பது உண்மையே! மேலும் சில சுவாச நோய்கள் மக்களிடையே அதிகளவில் பரவாமல் இருப்பதற்கு முகக்கவசம் அணிதல் சாதகமாய் அமைந்தது.**




காலம் மெல்ல மெல்லச் செல்ல சமூகமுடக்கம் தளர்வுற்று மக்கள் பழைய வாழ்விற்குத் திரும்பினார்கள். சில நாடுகளில் தடுப்பூசிகள் செய்வதற்காய் ஆய்வுகளும், பரிசோதனைகளும் தொடர்ந்து நடந்தன, சில நாடுகள் தடுப்பூசிகளை மக்களிற்கு வழங்கினார்கள். சீனாவின் சைனோபாம் ரஸ்யாவின் ஸ்புட்நிக் V அமெரிக்காவின் மொடோனா என்பனவாகும். அதுவரை எத்தனையோ உயிர்களைக் காவுகொண்டது இந்நோய். ஆனாலும் மனுக்குலம் இதனைக் காட்டிலும் எத்தனையோ பேரிடர்களைக் கண்டுள்ளது. என்பதால்தான் மன உறுதி கொண்டு உலகம் அடுத்த கட்ட வாழ்வியலையும் பணிகளையும் நோக்கிச் விரைகின்றது.............

விடியலுக்காய்.............





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# My Mother

***Written by,***
***V.Saalini***
***(2022-Bio)***

My mother kept a garden
A garden of the heart
She planted all the good thinks
That gave my life its start.



Her constant good example
Always taught me right from wrong
Makers for my pathway
That will last a lifetime long.

I can't thank her enough
There's no sufficient words to say
To someone who all ways gives
And hardly ever takes.

I love her for the way she stop and listen
And for her kind support throughout.
For teaching me the meaning of compassion.
And sharing in triumphs and my tears.

**<u>Mother always,</u>**
Believe in us more than we believe in ourselves.
Pray for us more than we'll ever know.
Value us more than anything else in the world.
Love us more than anyone else can.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாணவர் தலைமைத்துவம்

*ஆக்கம்,*
*செல்வி.அருளம்பலம், அருளாம்பிகை,*
*ஆசிரியர்,*
*கிளி/கிளிநொச்சி மத்திய மகாவித்தியாலயம்.*

பாடசாலை வாழ்க்கையிலும், பிற்பட்ட சமூக வாழ்க்கையிலும் சிறந்த தலைவர்களாக விளங்க மாணவர்கள் பல்வேறு வகையான அடிப்படை அம்சங்களை அறிந்துகொள்ளவேண்டும்.

"தலைமைத்துவம் என்பது வற்புறுத்தல் வலுக்கட்டாயமில்லாத வழிமுறைகளினூடாக மக்களைச் செயற்பட ஊக்குவிப்பதன் மூலம் ஒரு திட்டமிட்ட திசையில் நகர்த்திச்செல்லும் செயன்முறையாகும். அது நீண்டகாலக் குறிக்கோளை நோக்கியதாகவோ அல்லது குறுகியகால குறிக்கோளை நோக்கியதாகவோ அமையலாம்.

மாணவத்தலைவர் ஒரு குறித்த அந்தஸ்து வழங்கப்பட்டு அதற்குப் பொருத்தமான முறையில் செயற்பட வேண்டும் என எதிர்பார்க்கப்படும் அங்கத்தவராவார். அத்துடன் தமது குழுவின் இலக்குகளை அமைப்பதிலும் அவற்றை நிறைவேற்றிக் கொள்வதிலும் செல்வாக்குச் செலுத்தவேண்டிய ஒருவராகவும் இருக்கிறார்.



செயற்றிறன் மிக்க தலைவர் ஒருவர் எதிர்காலம் பற்றிய தூர இலக்குடன் அறிவுபூர்வமாக செயற்படுவார். அவ்வாறு இயங்குவதற்கு அவசியமாகின்ற ஒத்துழைப்பையும், குழுமுயற்சியையும் வழங்கக்கூடிய முக்கியமான கூட்டத்தினரின் ஆதரவையும் திரட்டுவார். செயற்பாடுகளை அமுல்படுத்தும் விடயத்தில் பங்கெடுத்துச் செயற்படக்கூடிய ஆட்களை நல்ல முறையில் ஊக்குவிப்பார்.

பாடசாலை போன்ற சமூக நிறுவனங்களில் கடமையாற்றுகின்றவர்களுடன் உரையாடினால் பெரும்பான்மையோர் தலைமைத்துவத் திறன்களையும் பண்புகளையும் பெற்றுக்கொள்ள வேண்டும் அப்போதுதான் அவர்களால் சமூகத்திற்கு உதவிடமுடியும். உண்மையில் (இன்றைய மாணவர்கள்தான் நாளை நாம் முன்னோக்கிக் கொண்டிருக்கும் எதிர்காலத்தின் தலைவர்களாக இருக்கின்றனர்) நாளைய சமூகத்தை முன்னேற்றப் பாதைக்கு இட்டுச்செல்லும் பொறுப்பும் கடமையும் இவர்களையே சாரும் என்பதால் பாடசாலைக் காலங்களிலேயே தலைமைத்துவப் பண்புகளையும் திறன்களையும் பெற்றுக்கொள்வது இன்றியமையாததாகக் காணப்படுகின்றது.

பாடசாலையில் தலைமைத்துவத் திறன்களை விருத்திசெய்வதற்கான சந்தர்ப்பங்களாகப் பின்வருவனவற்றைக் குறிப்பிடலாம். விளையாட்டுப் போட்டி நிகழ்வுகள், மாணவர்மன்றம், காலை ஆராதனைகள், சிரமதானங்கள், மாணவர் பாராளுமன்றம், பாடசாலை நிகழ்வுகள், மாணவர் தலைமைத்துவம், சாரணர் பயிற்சி முகாம், சுற்றுலா, முதலுதவிப்பிரிவு, இசை வாத்தியப்பிரிவு, பாடசாலைக்கழகங்கள் இவை தவிர ஆசிரியர்களால் திட்டமிட்டு ஏற்பாடு செய்கின்ற விசேட நிகழ்ச்சிகளும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாணவர்களின் தலைமைத்துவத் திறன்களையும், பண்புகளையும் விருத்தி செய்வதற்கான சந்தர்ப்பங்களாக அமைகின்றன.

மாணவர்களாயினும் சரி, ஏனையவர்களாயினும் சரி ஒருவர் சிறந்த தலைவராக மாறுவதற்கு அதற்கே உரிய பண்புகளை அவர் தன்னகத்தே கொண்டிருப்பது அவசியமாகும். ஒரு தலைவரிடம் காணப்பட வேண்டிய மிக முக்கியமான பண்பு களைப் பின்வருமாறு குறிப்பிடலாம்.

* உண்மைத் தன்மை, நம்பகத்தன்மை.
* தூர நோக்கான சிந்தனை.
* தொடர்பாடற்றிறன்.
* ஏனையவர்களுடனான சுமுகமான உறவு.
* செல்வாக்குச் செலுத்தும் தன்மை.
* நெகிழ்வுத் தன்மை.
* குழுவாகச் சேர்ந்து செயற்படும் பண்பு.
* பயிற்சியளித்தலும் விருத்திசெய்தலும்.
* தீர்மானிக்கும் ஆற்றல்.
* திட்டமிடல்.
* கலந்துரையாடல்.

இவை தவிர இன்னும் பல பண்புகளும் காணப்படுகின்றன. நாங்கள் முன்மாதி ரியாக விளங்கிய தலைவர்களின் வாழ்க்கை வரலாறுகளை வாசிக்க வேண்டும். அவர்கள் பின்பற்றிய விடயங்களைக் கடைப்பிடித்து அத்தகைய தலைமைத்துவப் பண்புகளையும் திறன்களையும் தேடியறிந்து பாடசாலை வாழ்க்கைக் காலத்தி லேயே அவற்றைச் செயற்படுத்துவதனூடாக சமூகத்தின் சிறந்த தலைவர்களாக மாறுவதற்கு முயற்சிக்க வேண்டும்.

**"குரலை உயர்த்திப் பேசுவது தலைமைத்துவம் அல்ல நாம் பேசத் தொடங்கும் போது மற்றவரின் குரல்கள் அடங்குவது தான் தலைமைத்துவம்"**

- ***அறிஞர் அப்துல் கலாம்*** -





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொன் மொழி

*ஆக்கம்,*
*கவிசாளினி*
*(2021 Arts)*

குறிக்கோளை அடையும் முயற்சியில்தான் மகிமை இருக்கிறது.
அந்த குறிக்கோளை அடைவதில் இல்லை.

*-மகாத்மாகாந்தி.*

ஒரு முட்டாள் தன்னை முட்டாள் என்று உணரும் தருணத்தில்
புத்திசாலியாகிறான்,
ஒரு புத்திசாலி தன்னை புத்திசாலி என பெருமை கொள்ளும் கணத்தில்
முட்டாளாகின்றான்...

*-டாக்டர் அப்துல் கலாம்*

இன்னொருவனுக்கு தீமை விளைவிக்கும் போது
உனக்கே நீ தீமை செய்து கொள்கிறாய்.
ஏனெனில் நீயும், உனது சகோதரனும் ஒன்றே.

*-சுவாமி விவேகானந்தர்*

தன்னை உயர்ந்த ஜாதியாகவும் இன்னொரு
மனிதனை தாழ்ந்த ஜாதியாகவும் கருதுபவன்
மனநோயாளி

-அம்பேத்கர்



அன்பு தான் உன் பலவீனம் என்றாலும்,
இந்த உலகின் மிக சிறந்த பலசாலி நீதான் !

*-அன்னை தெரசா*

இங்கே மனிதனைத் தவிர வேறு யாரும் அகங்காரத்தால்
நிரம்பியவர்கள் இல்லை
அதனால் தான் மனிதனைத் தவிர இங்கு வேறு யாருமே
துன்புறுபவர்கள் கிடையாது.

*-ஓஷோ*

உழைப்பின் சக்தியே உலகில் மிக உன்னதமானது
அதை வெற்றி கொள்ளும் ஆற்றல் வெறெந்த
சக்திக்கும் கிடையாது.

*-ஆபிரகாம் லிங்கன்*

உண்மை எப்போதும் எளிமையிலிருந்தே
கண்டறியப்பட வேண்டும்
குழப்பத்தில் இருந்து அல்ல.

*-ஐசாக் நியூட்டன்*

மோரைக் கடைந்து வெண்ணெய் எடுப்பது போல
அறிவை வளர்த்துக் கொண்டு பலன் பெற வேண்டும்.

*-கா.ந.அண்ணாதுரை*

நாம் இன்று என்ன நிலையில் இருக்கிறோமோ அந்நிலையை
நமக்கு அளித்தது நமது எண்ணங்கள்தான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நமது இன்றைய நிலை நமது எண்ணங்களாலேயே ஆக்கப்பட்டிருக்கிறது.

*-புத்த பகவான்*

நேருக்கு நேர் இனிமையாகப் பேசிவிட்டு, பின்னர்
போகவிட்டு புறம் பேசும் மனிதர்களைத் தவிர்த்து விடுங்கள்.
அத்தகைய மனிதர்களோடு நட்பு கொள்வது,
பசும்பாலில் கடும் விஷத்தைக் கலந்து பருகுவதற்கு ஒப்பாகும்.

*-சாணக்கியர்*

எவராவது தன்னுடைய வாழ்வில்
ஒரு பிழையும் செய்ததில்லை என்று நினைத்தால்
அவர்கள் தாம் தம் வாழ்வில் புதிய
முயற்சிகளை செய்து பார்த்ததில்லை என்று பொருள்.

*-ஆல்பர்ட் ஜன்ஸ்டின்*

மனிதன் பிறக்கும் போது வெற்றுத்தாள் போல் தான் பிறக்கின்றான்.
இவ்வுலகில் அவன் கண்டு கேட்டு உற்று அறியும் சம்பவங்கள் மூலம்
மெல்ல மெல்ல அவன் நல்லது, கெட்டது பகுத்தறியும் திறன் பெறுகிறான்.

*-சிக்மண்ட் பிராய்ட்*

புகழை மறந்தாலும் நீ பட்ட அவமானங்களை மறக்காதே
அது இன்னொரு முறை உன்னை அவமானப்படாமல் காப்பாற்றும்.

*-ஹிட்லர்*

நேரம் கிடைக்கவில்லை என்று வருந்துவதை விடுத்து,
நேரத்தை நேர்த்தியாக உபயோகிக்கவில்லை என வருத்தம் கொள்...

*-திவ்ய பாரதி*

விதைத்துக் கொண்டே இரு முளைத்தால் மரம்,
இல்லையேல் உரம்.

*-சே குவேரா*

செல்வம் இருந்தால் உன்னை உனக்குத் தெரியாது
செல்வம் இல்லாவிட்டால் உன்னை யாருக்கும் தெரியாது.

*-கதே*

ஒரு பறவை மரத்தின் கிளையில் அமரும் போது,
அது எந்த நேரத்திலும் முறிந்து விடும் என்ற பயத்தில் அமருவதில்லை
ஏன் என்றால் பறவை நம்புவது
அந்த கிளையை அல்ல அதன் சிறகுகளை.

வெற்றி எனும் மைல்கல்லை அடைய துணை செய்யும் மிக
சிறந்த ஆயுதமே நம்பிக்கை - அதை மட்டும்
வளர்த்துக்கொள்ள உன்னை முழுவதுமாக
தயார்படுத்திக்கொள்.
வாய்ப்புக்காக காத்திருக்காதே...
உனக்கான வாய்ப்பை
நீயே ஏற்படுத்திக் கொள்...





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பள்ளிக்கூடம்

*ஆக்கம்,*
*தமிழினி*
*(2021-Bio)*

பள்ளிக்கூடம் என்கின்ற வார்த்தை எவ்வளவு அழகானது. நாம் கூடும் முதல் கூடமாய் பல செயல் அறியும் அறிவுக்கூடமாய் அறிவைப் படைக்கும் தொழில் கூடமாய் கலைகள் பயிலும் கலைக்கூடமாய் வாழ்வின் கூடமாய் விளங்குகின்றது. பள்ளிக்கூடங்கள் எத்தனையோ கலைகளும் சாதனங்களும் சரித்திரங்களும் அரங்கேற்றிய அமைவிடமாகும். நம் வாழ்க்கையின் அத்திவாரமாய் விளங்குவது இந்த பள்ளிக்கூடம் மட்டும்தான் என்பதில் எவ்வித ஐயமும் இல்லை. அறிவை அறிமுகம் செய்கின்ற அழகிய கோயிலாய் அன்பை பண்பை ஒழுக்கத்தை கட்டுப்பாட்டை ஏன் உலகத்தையே உணரச்செய்த உன்னத இடங்களாய் நட்பை விதைக்கும் இல்லங்களாய் பள்ளிக்கூடங்கள் மிளிர்ந்து கொண்டிருக்கின்றன.

எண்ணையும் எழுத்தையும் மட்டும் கற்றுத்தரும் இடமல்ல இது நாம் யார் என்று நமக்கும் இந்த உலகத்திற்கும் கற்றுத்தரும் உணர்த்தும் அளப்பெரிய பணியை ஆற்றுவது பள்ளிக்கூடம் மட்டும்தான் என்பதை நாம் எள்ளளவும் மறந்து விடலாகாது.

"செல்வம் பெருகப்பெருக ஆசை அதிகம் ஆவது போல அறிவு பெருகப்பெருக அதில் ஆர்வம் அதிகமாகும்" என்பதை நமக்கு புகட்டியதும் பள்ளிக்கூடங்களே. எம் வாழ்க்கை வாழத்தொடங்கும் போதே வாழ்வின் அர்த்தங் கள் புரிந்து விடுவதில்லை. அதே போல்த்தான் பள்ளி நமக்கு கற்றுத்தரும் பாடங்களும் ஆரம்பத்தில் கசப்பாய் இருந்த போதிலும் இன்று இனிமையான வையாக மாற்றம் பெற்றுள்ளன. இது மட்டும்தான் நலமான வாழ்வு எது என்பதை உண்மையாய் உணர்த்துகின்றது என்பதில் எவ்வித ஐயமுமில்லை.

அறிவு ஒன்றுதான் அச்சத்தை முறிக்கும் அரிய மருந்து என்பார்கள். அறிவு எனும் அகராதிக்கு பள்ளிக்கூடங்களே உயிர்கொடுக்கின்றன என்பது மறக்க முடியாத உண்மையாகும். எப்போதும் மற்றவர் தவறைச் சுட்டுவது இலகு ஆனால் நம் தவறை உணர்வது கடினம் என்பது யாமறிந்த உண்மையே. தவறுகள் செய்யாத மனிதர்களும் இல்லை தவறுகளை உணராத நொடிகளும் இல்லை. நாம் செய்த தவறுகளை உணர்ந்து நமது வாழ்வில் இனிமையாக வாழக் கற்றுத்தந்தது பள்ளிக்கூடங்களே. விதைகள் தங்களுக்குப் பிடித்த இடத்தை தேடி முளைப் பதில்லை. தமக்கு கிடைத்த இடத்தில் தன்னை செடியாக மரமாக மாற்றிக் கொள்கின்றன. அது போலவே மனிதனும் வாழ்க்கையில் வீழ்ந்து விடுவோமோ என்று எண்ணாமல் விழுந்த இடத்திலிருந்து முன்னேறிச் செல்ல வேண்டும் என்பதை நமக்குப் புகட்டுவதும் இந்தப் பள்ளிக்கூடங்களே.

கல்வியழகே வாழ்வின் அழகு எனும் பழமொழிக் கிணங்க ஒருவருடைய வாழ்வின் இன்றியமையாத சிறந்த செல்வம் கல்விச்செல்வம் என்பதை ஒவ்வொரு பள்ளிக்கூடங்களும் தான் நமக்கு புகட்டுகின்றன. இவை கண்டதையும் கற்கும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கலைக்கூடம் அல்ல ஒவ்வொரு தாயின் கருவறையில் உதித்த பிள்ளைகளின் கனவுக்கூடம். என்பது அழியாத உண்மையாகும். சிந்தனை ஆற்றலையும் சிரசிலே புத்தியையும். சிறுகச் சிறுக சேமிக்கும் பண்பினை இந்த பள்ளிக்கூடங்கள் வழங்கு கின்றன. உடலுக்கு உயிரின் அவசியம் எங்ஙனம் தேவையோ அதுபோல் என்றுமே வாழ்க்கைக்கு பள்ளிக்கூடங்கள் உதவுகின்றன, வாழ்க்கைக்கு ஒத்திகை ஒன்று கிடையாது. அதுபோல் பள்ளிக்காலமும் அற்புதமான நினைவுகள் மட்டுமே எல்லைவரை நிலைக்கும் நிரந்தரம் இல்லா இந்த அற்புதமான வாழ்க்கையை ஒரு குழந்தையின் புன்னகை போல் இனிமையாக வாழ்வோம். அதுவே எம் வாழ்க்கையை அழகாகும்.

"பள்ளிக்கூடங்கள் எமது எதிர்காலத்தின் ஏணிப்படிகள்"







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இயற்கையைக் காத்து இவ்வுலகின் ஆயுளைக் கூட்டுவோம்

*ஆக்கம்,*
*வே.மதுசாஜினி*
*(தரம்-11A)*

இவ்வுலகில் தோன்றிய அனைத்து உயிரினங்களுக்கும் பொதுவாக இறைவன் அளித்தவரமே இந்த இயற்கை. இதன் அழகையும் அதிசயங்களை வர்ணிக்க வார்த்தைகளே இல்லை. இயற்கைக்குப் புறம்பாக மனிதனால் உருவாக்கப்பட்டதே செயற்கை. இயற்கையை அழைத்து செயற்கையை உருவாக்கும் போது சிலசமயங்களில் இப்பூமி மற்றைய உயிரினங்களுக்கும் சொந்தம் என்பதை மறந்து விடுகிறான். என்னதான் இயற்கை நமக்கு உண்ண உணவு, குடிப்பதற்கு சுத்தமான நீர், சுவாசிக்க சுத்தமான காற்று என்பவற்றைத் தந்தாலும் அதற்கு கைமாறாக கிடைப்பது அழிவு மட்டுமே உலகம் நவீனமயமாகிவிட்டது. எங்கு பார்த்தாலும் கட்டிடங்கள், வாகனப்புகை நச்சு வாயுவை வெளியேற்றும் தொழிற் சாலைகள் உக்காத பிளாஸ்ரிக் பொருட்களின் பாவனை இவ்வாறு எண்ணற்ற தீமைகளைச் செய்கின்றான்.

நீரினை அடுத்து முக்கியமாக அதிகளவில் மாசடைந்து வருவது வளி இயற்கையாகக் கிடைக்கும் சுத்தமான காற்றைக் கூட விலை கொடுத்து வாங்கும் காலகட்டத்தை நோக்கி பயணித்துக் கொண்டிருக்கின்றோம். வளிமாசடைய முக்கியகாரணம் அதிகளவிலான வாகனப்புகை மற்றும் தொழிற்சாலைகளிலிருந்து வெளியேறும் நச்சுவாயுக்கள் இவையே அமில மழைக்கு காரணமாகின்றது. மனிதனோ இதனைப் பொருட்படுத்தாது தொடர்ந்து பல கண்டுபிடிப்புக்களை இவ்வுலகிற்கு வழங்கிக் கொண்டிருக்கின்றான். கண்டுபிடிப்புக்கள் தவறல்ல ஆனால் அவை இயற்கையுடன் இணைந்ததாகக் காணப்பட வேண்டும்.

நிலம் மாசடைவதை எடுத்துக் கொண்டோமானால் தொழிற்சாலைக் கழிவுகள் மண்ணுடன் சேருவதால் விவசாயத்திற்கு உகந்த மண் அழிவடைந்து செல்கின்றது. அத்துடன் சேனைப் பயிர்ச்செய்கை போன்றவற்றை மேற்கொள்வதற்காக காடுகளை அழிக்கின்றோம். இதனால் மண் வளம் மற்றும் காட்டுவாழ் உயிரினங்கள் பல ஆபத்துக்களை எதிர்நோக்குகின்றன. இவ்வுலகில் எந்தவொரு தாக்கத்திற்கும் சமனும் எதிருமான மறுதாக்கம் உண்டு. அதனால்தான் நாம் இயற்கைக்குச் செய்யும் தீமைக்கு ஏற்ப சூறாவளி, சுனாமி, காட்டுத்தீ, வெள்ளப்பெருக்கு போன்ற இயற்கை அனர்த்தங்களால் அழிவடைகின்றோம். இதனால் நாம் மட்டுமல்ல அப்பாவி உயிரினங்களும் அழிவடைகின்றன. இயற்கை நமக்காக படைக்கப்பட்டது என்பதை மறந்து செயற்கையை விரும்பியதால் இன்று சிறியவர்கள் முதல் பெரியவர்கள் வரை விரும்பியோ விரும்பாமலோ வைத்தியசாலைகளை நாட வேண்டிய தேவையுள்ளது. எனவே, இயற்கையை நாம் பாதுகாத்தால் இயற்கை நம்பை பாதுகாக்கும் என்பதை புரிந்து செயற்பட்டு இவ்வுலகினை அழிவில் இருந்து பாதுகாப்போம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வகுப்பறை எனும் கருவறை

ஆக்கம்,
அ.அபிராஜ் (2020-Maths)

வகுப்பறை எனும் கருவறையில்
நம்மைச் சுமந்த கல்லூரித்தாயே
விடைபெறுகிறோம்!
வாழுங் காலம் முழுவதும் நினைந்திருக்க
உன்னிடத்தில் சேமித்த நினைவுகள் சுமந்து செல்கிறோம்!
கறுப்பு வெள்ளை கரும்பலகை வகுப்பறைகளில்
எத்தனையோ வண்ணக் கனவுகள் கண்டோம்!
உன் மடியில் வளர்ந்த காலங்கள் வாழ்க்கைப் புத்தகத்தின்
வசந்தகாலப்பக்கங்கள்!
பாடங்களோடு சேர்ந்தே
வாழ்க்கைப்பாடமும் கற்றுத்தந்தாய்!



அறிமுகமில்லாது வந்தோம்
உன் நிழலில் ஒன்றாய் நட்பானோம்!
சின்னச் சின்ன சண்டைகள்..
செல்லக்கோபங்கள்...
நகைச்சுவை குறும்புகள்....
பகிர்ந்து உணவுண்ட பொழுதுகள்...
இப்படியாய் ஏராளம் நட்பின் பசுமை நினைவுகள்!

கண்டிப்புக்களோடும் அறிவுரைகளோடும்
இன்னொரு தாய் தந்தையராய்
நல்வழி காட்டிய ஆசான்கள்!
அறிவுக் கண்களை அகலத் திறந்த தெய்வங்கள்!
வாழ்த்த வயதில்லை
வணங்குகிறோம்!

போர்க்கால மேகங்கள் சூழ்ந்து
குண்டு மழைகளில் நனைந்து
குருதி ஆறுகள் பெருக்கெடுக்க
ஊர்பிரிந்து உறவுகளைப் பிரிந்து
கல்லூரித்தாயே
உன்னையும் பிரிந்தோம்
இடம்பெயர்ந்து எங்கோ அலைந்து
மீண்டும் உன் மடியில் வந்தமர்ந்தோம்!
பீனிக்ஸ் பறவைகளாய் மீண்டெழுந்தோம்!
இன்னும் உயரப்பறப்போம்!
உன் புகழ் உரைத்திடுவோம்!





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாபெரும் இலட்சியம்

*ஆக்கம்,*
*அ.அபிநயா,*
*(தரம் – 11A)*

இலங்கையில் இளைய குடிமகனாக நான்
தொழில் நுட்ப அறிவு
தேசப்பற்று ஆகியவற்றை
ஆயுதங்களாக்கி கொண்டிருக்கிறேன்.

குறுகிய இலட்சியங்களை வைத்திருப்பது
குற்றமென்று உணர்கிறேன்.
எனவே நான் மிகப்பெரிய இலட்சியங்களுக்காக
நான் வியர்வை சிந்திக் காத்திருக்கிறேன்.

வளர்ச்சியுற்ற இலங்கை
அந்த தொலை நோக்குப் பார்வை
இலங்கையை ஒரு வளர்ந்த நாடாகவும்
பொருளாதாரத்தில் வலிமை மிக்கதாகவும்
நூறு கோடி மக்களில் நானும் ஒரு குடி மகன்
கோடான கோடி மக்களின் மனதில்
இந்த தொலைநோக்குப் பார்வை
ஒளிவிட்டுப் பிரகாசிக்க வேண்டும்.



இது என்னுள் இருக்கிறது.
என்னுள் நிறைந்திருக்கும்
அந்த ஒளி மிக்க ஆன்மா
பூமியிலும் பூமிக்கு மேலும் உள்ளும்
அதிக சக்தி வாய்ந்ததாகும்.

வளர்ச்சியுற்ற இலங்கை என்னும்
தொலைநோக்கு இலக்கை எட்ட
அறிவு என்னும் விளக்கை நான் ஏற்றியுள்ளேன்.
இந்த ஒளி விட்டுப் பிரகாசிக்கும்
தொலை நோக்கு எண்ணங்களுடன்
நாம் தொடர்ந்து பாடுபட்டால்
வளர்ச்சி மிகு இலங்கை உருவாகும்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தற்காலத்தில் விஞ்ஞானத்தின் வளர்ச்சி

*ஆக்கம்,*
*வ.வசீகரன்(தரம் 11)*

விஞ்ஞான வளர்ச்சி காரணமாக இன்று உலகின் எந்த மூலையில் இருக்கும் ஒருவரை நினைத்த சில வினாடிகளில் தொலைபேசியில் தொடர்பு கொள்ளலாம். அந்த அளவுக்கு தொலைபேசி சேவை இன்றைய சூழலில் அத்தியாவசியமான ஒன்றாக மாறிவிட்டது. விஞ்ஞான வளர்ச்சியால் இணையத்தளம், தொலைபேசி பயன்பாடு தவிர்க்க முடியாத ஒன்று என்பது மறுக்கப்படாத உண்மை. இணையத்தளமோ தொலைபேசி சேவையோ ஒரு சிலநிமிடங்கள் பாதிக்கப்பட்டால் ஏதோ உலகமே துண்டிக்கப்பட்டது போன்ற உணர்வு.

மன்னர் ஆண்டகாலத்தில் ஒருபகுதியில் இருந்து மற்றொரு பகுதிக்கு தரைவழியாக நடந்து சென்றனர். அதுவே சிறிது காலத்திற்குப் பின்னர் குதிரை சவாரி, வண்டியைப் பயன்படுத்தி வந்தோம். படிப்படியாக பெற்றோல், டீசல் மூலம் பயன்படுத்தும் வாகனங்கள் வந்தன. இன்று தரைவழிப் போக்குவரத்து, கடல்வழிப் போக்குவரத்து, வான்வழிப் போக்குவரத்து என போக்குவரத்துக்கள் மேம்படுத்தப் பட்டுள்ள நிலையில் நாம் ஓர் இலக்கை அடையக் காத்திருக்க வேண்டியதில்லை. மின்சாரம் கண்டு பிடிக்கும் முன்னர் மண்ணெண்ணெய் போன்ற எரிபொருள் மூலம் எரியும் விளக்குகளை பயன்படுத்தி வந்தோம். காலப் போக்கில் மின்சார தேவையும் அத்தியாவசியமாகிவிட்டது. மின்சாரம் இல்லையெனில் உலகமே இருளில் மூழ்கிவிடுகிறது என்பதனை விட மக்களின் தேவைகளை பூர்த்தி செய்வதில் தாக்கம் ஏற்படுகிறது என்றுதான் சொல்ல வேண்டும்.

மக்கள் சனத்தொகை அதிகரித்து வருவதால் விஞ்ஞான வளர்ச்சியும் இன்று எளிதாக தோன்றுகின்றது. பத்து பதினைந்து ஆண்டுகளில் வியப்பைத் தரும் வகையில் மனித சமுதாயம் வளர்ச்சி பெற்றுள்ளது. சைக்கிள் பயன்பாடு குறைந்து இன்று நடுத்தரப் பிரிவினர் கூட மோட்டார் சைக்கிள், கார் போன்றவற்றை பயன் படுத்தும் அளவுக்கு மாற்றமும் பொருளாதார வளர்ச்சியும் ஏற்பட்டுள்ளது. இதே போல் தொலைபேசி சேவை என்பது தகவல் தொழில்நுட்பத் துறையில் புரட்சி என்று கூறலாம். தொலைபேசி சேவையைப் பயன்படுத்துவோர் எண்ணிக்கை நாளுக்கு நாள் அதிகரித்துவருகின்றது. தொலைபேசி தயாரிக்கும் தனியார் நிறுவனங்களும் விற்பனை மையங்களும் மிகவேகமாக அதிகரித்துவருகின்றது.

உலகில் தொலைபேசி பயன்பாடு அதிகரித்துவருவது ஒருபுறம் இருக்க தொலைபேசிகளினால் ஏற்படும் பாதிப்புக்களும் எமக்கு அதிர்ச்சியளிக்கிறது. தொலைபேசி கோபுரங்கள், செயற்கைகோள் போன்றவற்றின் கதிர்வீச்சு தாக்கம் காரணமாக வௌவால், சிட்டுக்குருவி, தட்டான் போன்ற அரியவகைப் பறவையினம் அழிந்து வருகின்றன என வன உயிரின வல்லுனர்கள் தெரிவிக்கின்றனர். பறவையினங்கள் அழிந்துவருவதால் சுற்றுச்சூழல் பாதிப்படைகிறது. இதைவிட தொலைபேசிச் சேவைக்காக அமைக்கப்பட்டுள்ள கோபுரங்கள் பெரும்பாதிப்பைத் தருவதாக கூறப்படுகிறது. வாடிக்கையாளருக்குச் சிறந்தசேவையை அளிக்க






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேண்டும் என்ற நோக்கத்தில் தொலைபேசி நிறுவனங்கள் போட்டி போட்டுக் கொண்டு செயல்படுகின்றன.

இதன் விளைவாக தொலைபேசி சேவைக்கான கோபுரங்கள் குடியிருப்பு பகுதியில் அதிக அளவில் அமைக்கப்பட்டு வருகின்றன. ஊருக்குள் திரும்பிய திசையெங்கும் தொலைபேசி கோபுரங்கள் கண்ணில் படுகின்றன. இந்தக் கோபுரங்கள் மக்கள் அதிகம் வசிக்கும் பகுதியிலும் அடுக்குமாடிக் குடியிருப்புக்கள் அமைந்திருப்பதால் அதன் கதிர் வீச்சுக்களால் மனித உயிர்களுக்கு ஆபத்தை தருகின்றது என மருத்துவர்கள் தெரிவிக்கின்றனர். தொலைபேசி கோபுரம் நிறுவப் பட்டுள்ள குடியிருப்பு பகுதியில் வசிப்பவர்களுக்கு இதயம் தொடர்புடைய நோய்கள் தாக்குவதாகும் கர்ப்பிணி பெண்களுக்குப் பாதிப்பை ஏற்படுத்துவதாகவும் மருத்துவ நிபுணர்கள் தெரிவிக்கின்றனர்.



தொலைபேசி கதிர்வீச்சு அலைகளினால் பிறந்த குழந்தையையும் பாதிக்கின்றது. விஞ்ஞான வளர்ச்சி ஒரு நாட்டின் வளர்ச்சியை மேம்படுத்துகிறது. விஞ்ஞான வளர்ச்சியின்மூலம் நாம் சேவைகளை எளிதில் பெறு கிறோம். வேலைவாய்ப்பு பெருகிவருகிறது. மனித வளர்ச்சிக்கு உறுதுணையாக இருக்கிறது. ஆனால் உயிர்களுக்கு தரும் ஆபத்தையும் நாம் உணரவில்லை என்பதும் மறுக்க முடியாத உண்மை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிரேஷ்ட மாணவத் தலைவர்களின் சின்னம் சூட்டல் விழா -2020



முதன்மை சிரேஷ்ட மாணவ தலைவன்
கணேசன் கீதசஞ்சாரன்



முதன்மை சிரேஷ்ட மாணவ தலைவி
சிவகுமார் சங்கவி



உதவி சிரேஷ்ட மாணவ தலைவன்
மோகனதாஸ் யதுர்சன்



உதவி சிரேஷ்ட மாணவ தலைவி
சந்திரகுமார் லக்ஷிகா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பள்ளி நாட்கள்

ஆக்கம்,
நி.நிதுர்சனா, (2021) வர்த்தகப்பிரிவு.

அறிவெனும் அமுதத்தையும்
அன்பெனும் பண்பையும்
நட்பெனும் உள்ளத்தையும்
அறிமுகம் செய்த கோவிலிலே

அலையலையாக எண்ணங்களோடும்
அடுக்கடுக்கான சிந்தனைகளோடும்
எதிர்காலம் குறித்த கனவுகளை
ஏந்தி சென்ற காலமது!

எங்கோ பிறந்து எங்கோ வளர்ந்து
ஆகாயம் தேடும் கள்ளத்தனமில்லா
மலர்கின்ற நட்பிலே இணைந்து
கவலைகளை மறந்த காலமது

செய்யாத வீட்டு வேலைக்காக
குருவிடம் அடிகள் பல வாங்கி
கைகள் சிவக்க கண்ணீர் முட்ட
கடவுளை நிந்தித்த காலமது

கட்டுக்கட்டான புத்தகங்களைப் பார்த்து
ஐயோ இவ்வளவா என ஏங்கியதும்
எப்போது இடைவேளை வருமென
காத்துக் கிடந்த காலமும் அதுவே
இதில் இனிமையென்ன கசப்பென்ன
கோடி கொடுத்தாலும் ஈடாகுமோ
அந்த அழகிய நொடிகள்
இன்னுமின்னும் நீடிக்காதா....





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கல்வியின் மகத்துவமும் அவசியமும்

*ஆக்கம்,*
*மோ.யதுர்சன்,*
*உதவி சிரேஸ்டமாணவ தலைவன்,*
*(2021.Bio)*

**"கேடில் விழுச்செல்வம் கல்வி"** என்ற திருக்குறள் வரிகளின் அர்த்தத்தை உணராதவர் இவ்வுலகில் இருக்கவாய்ப்பில்லை அத்தனை மகத்துவங்கள் நிறைந்த அழியாச் செல்வம் கல்வி. கல்வி என்பது தெரியாததை தெரியச் செய்வது மட்டு மல்ல இன்பத்தை அழிப்பதும் ஒழுக்கத்தை ஒழுகச் செய்வதும் தன் வாழ்நாளில் முழு சுதந்திரத்தோடு உலக நல் வாழ்க்கையை வாழத் தகுதியுடையவனாக்குவதும் ஆகும்.

இவ்வுலகில் நாம் பார்க்கும் சில புறக்காட்சிகளும் நிகழ்ச்சிகளும் எமது இன்ப துன்பத்திற்குக் காரணமாகின்றது. காலம் காலமாக அறிஞர்களும் சான்றோர்களும் தாம் கண்டவற்றையும் அவற்றின் அடியில் எழுந்த சித்தாந்தங்களையும் கொள்கைகளையும் கண்டுபிடிப்புக்களையும் அறிவுரைகளையும் நம் புலனுக்கு கொண்டு வருவது கல்வியே. கல்வியின் அடிப்படை எண்ணும் எழுத்தும் ஆகும். இலக்கியம், சமயம், தத்துவம், அறிவியல் கணிதம், எனக் கல்வியின் துறைகள் அனைத்தும் எண்ணையும் எழுத்தையும் சார்ந்தே உள்ளது. இதனையே **"எண்ணும் எழுத்தும் கண்ணெனத் தகும்"** என திருவள்ளுவர் குறிப்பிட்டுள்ளார்.



எமது அறியாமையை நீக்கி அறிவைப் பெருக்க நமக்கு உதவியாக இருக் கின்றது கல்வியே ஆகும். அறம், பொருள், இன்பம், வீடு என்ற நால்வகைப் பயன்களையும் நமக்குத் தருகின்றது. கல்வி கற்றவர்கள் தாம் கற்றவற்றை வாழ்வில் பயன்படுத்த வேண்டும். கல்வியின் வாயிலாக தாம் கற்ற அறநெறிகளை வாழ்க் கையில் பின்பற்ற வேண்டும். அவ்வாறு பின்பற்றினால் தான் கற்ற கல்வியில் பயனுண்டு. கற்றதன்படி அறநெறிகளை பின்பற்றி வாழாதவன் பிறருக்கு அறநெறி களைக்கூறினால் அவனது உள்ளமே அவனுக்கு பெரும் துன்பத்தை கொடுத்து விடும். எனவேதான் கற்ற வாழ்க்கை இருக்க வேண்டும் என **" கற்க கசடற கற்றவை கற்ற பின் நிற்க அதற்கு தக"** என்னும் குறளினூடாக திருவள்ளுவர் விளக்கியுள்ளார்.

கற்றோர்க்கு கல்வியே அழகு. அவர்களுக்கு வேறு அணிகலன்கள் தேவை இல்லை. அது எமக்குள் இருக்கும் அறியாமையைப் போக்கும் என நான்மணிக் கடிகையில் குறிப்பிடப்பட்டுள்ளது. **"அன்னயாவினும் புண்ணியம் கோடி ஆங்கோர் ஏழைக்கு எழுத்தறிவித்தல்"** எனக் கல்வியின் சிறப்பைப் பற்றி பாரதியார் குறிப்பிட் டுள்ளார். ஆதிகாலம் தொட்டு நவீனகாலம் வரை கல்வியின் மகத்துவங்களைப் பற்றி அறிஞர்கள் பலர் குறிப்பிட்டுள்ளனர்.

"ஒழுக்கம் உண்டாக்காத இலக்கியக் கல்வியால் ஒரு வித உபயோகமும் கிடையாது" எனக் காந்தியடிகளும் "இளமையில் கல்வியைப் புறக்கணித்தவன் இறந்த காலத்தை இழந்தவன் எதிர்கால வாழ்விலும் இறந்தவன்"! என யூரிபிடிஸும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கற்காமல் இருப்பதை விட பிறக்காமல் இருப்பதே நல்லது. ஏனெனில் அறியாமை தான் தீவினையின் மூல வேர்! என பிளேட்டோவும் குறிப்பிட்டுள்ளனர். மேலும் எட்மண்ட்பர்க், பெர்னாட்ஷா மற்றும் போலிங் புஷரூக் ஆகியோர் முறையே" கல்வி ஒரு மூட்டை நூல்களை வாசிப்பதன்று அடக்கம், ஒழுங்கு, அறம், நீதி இவற்றின் முன்மாதிரியாகும்", வாழ்க்கை அனுபவம் இல்லாத எவரும் கல்வி கற்றவராக முடியாது. சான்றோன் ஆக்காத கல்வி சாமர்த்தியமாய்க் கழித்த சோம்பலாகும்" எனவும் குறிப்பிட்டுள்ளார்.

மேலும் மூர், டெஸ்வசி, ரஸ்கின்பான்ட், ஹெர்பர்ட ஸ்பென்னர், ஔவையார் என பல அறிஞர்கள் பலர் கல்வியின் மகத்துவத்தை பல அறக்கருத்துக்களினூ டாக விளக்கியுள்ளனர். இனிவரும் காலத்தில் கல்வியின்றி ஓர் அணுவும் அசை யாது என்ற நிலைக்கு கல்வி முக்கியத்துவம் வாய்ந்ததாகக் காணப்படுகின்றது. தனிமனித வாழ்க்கையை இன்பமுடையதாக்குவதும் நன்மையுடையதாக்குவதும் எம்மை வாழ்வாங்கு வாழ வைப்பதும் கல்வியே ஆகும்.

**"உற்றுழி உதவியும் உறுபொருள் கொடுத்தும் பிற்றை நிலை முனியாது கற்றல் நன்றே"**





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கல்லூரி வாழ்க்கை

*ஆக்கம்,*
*சிரேஷ்ட மாணவ தலைவி,*
*சிவகுமார் சங்கவி (2020-Art)*

காலைக்கதிரவன் கண்விழிக்கும் முன்னரே
தூக்கமதை தொலைத்து துயில் விட்டு நாம் எழுவோம்
மாணவர் நாம் மாண்புடனே மனதில் பல கொள்கையுடன்
வெள்ளாடைப் பூண்டு வெற்றிக் களிப்புடனே
கல்லூரி வாசல்தனை கணப்பொழுதில் சென்றடைவோம்.

கல்லூரி சோலை காடும் காய்கனி பலமரமும்
காலங்கள் சென்றால் கூட கண்முன்னே நிழலாகும்
தேனாய் பேசிவரும் தேன்சிட்டு குருவிகளும்
வானார பறந்து வரும் செங்கால் நாரைகளும்
சட்டென்று திருடிச்செல்லும் கார்மேக காகங்களும்
பட்டென்று என்மனதில் பலதடவை வருவதுண்டு



இடம்சூழ்ந்த வேளையிலும் இடங்கள் பல தேடிச்சென்றும்
தடம் பதித்த வெற்றிகளும் தாராளமாய் எமக்குண்டு
புடம்போடும் ஆசான்களும் தடம் பற்றும் வீரர்களும்
உடனுண்டு எம்மகத்தே
ஜாதி மத பேதமென்றும் ஏழை பணக்காரர் என்றும்
எம்மகத்தே பேதமில்லை.

மாணவர்கள் ஒன்றாய் கூடி ஒருமித்த குரலிலே
கல்லூரி கீதத்தை கனிவுடனே இசைத்திடுவோம்
பண்பாகப் பேசி பாசமுடன் நாம் பழகி பலநூறு
நண்பர்களைப் பலமாகச் சேர்ந்திடுவோம்
அன்பாகப்பேசி அறிவூட்டும் ஆசான்களையும்
கண்டிப்பாய் இருக்கும் கனம் மிகுந்த அதிபரையும்
காலங்கள் சென்றால் கூட கணப்பொழுதும் நாம் மறவோம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தோளோடு தோள் நின்று எமைத் தூக்கி விட்ட பெற்றோர்களும்
எதிர்கால இலட்சியத்தின் கலங்கரை விளக்குகள் தான்

சீராக நாம் பெற்ற கல்விதனை
சிந்தாமல் சிதறாமல் சிரசுதனில் ஏற்றிக்கொண்டு
எதிர்கால இலட்சியத்தை இலகுவில் அடைவதற்கு
இரவுபகல் பாராது இயக்கத்துடன் நாமிருப்போம்

பல்கலைகள் கற்றபோதும் பல்துறையில் வென்ற போதும்
நாம் கற்ற கல்லூரியை ஒருபோதும் மறக்க மாட்டோம்
மீண்டும் மீண்டும் நினைக்க தூண்டும் அழகிய காலமது
வஞ்சமில்லா நெஞ்சும் கள்ள கபடமில்லா மனசும்
கவலைகள் இல்லா மழலையாய் சுற்றித் திரிந்த காலமது

நட்சத்திரங்களை எண்ணி முடிப்பதற்கு முன்
விடிந்து விட்ட வானம் போல வாழ்ந்து முடிப்பதற்கு முன்
முடிந்து விட்டது பள்ளிப்பருவம்
காலங்கள் கடந்து பிரிந்தாலும்
கல்லூரி மண்ணின் வாசமும் நண்பர்கள் பாசமும்
நீண்ட ஆண்டு நினைவில் வாழும்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அனைவருக்கும் கல்வி

*ஆக்கம்,*
*பி.யருசனா*
*(2022-BIO)*

கல்வியின் அவசியத்தை இன்று உலகனைத்தும் நன்குணர்ந்துள்ளது. இதனாலேயே உலக நாடுகள் அனைத்தும் கல்விக்காகப் பெருந்தொகைப் பணத்தை செலவிடுகின்றன. கல்விக்காகச் செலவிடும் பணம்நாட்டின் வருங்கால முன்னேற்றத்திற்காகச் செய்யப்படும் முதலீடாகவே கருதப்படுகின்றது. அனை வருக்கும் கல்வி என்பது இன்று உலக நாடுகள் அனைத்திலும் ஓங்கி ஒலிக்கும் குரலாக உள்ளது. மக்கள் அனைவரும் எழுதப் படிக்க தெரிந்த நிலையை எய்தி யிருக்க வேண்டும்.

இன்று தொழிநுட்ப யுகத்தில் நாம் வாழ்ந்து கொண்டிருக்கின்றோம். உயர் கல்விக்கே முக்கியத்துவம் அளிக்கப்படுகின்றது. எல்லோரும் கற்றவர்கள் என்ற நிலையை அடையும் வகையில் அனைவருக்கும் கல்வி அவசியம்.

கல்வி என்பது ஒரு முதலீடாகும். உலகில் வாழ்வாங்கு வாழ்வதற்கு இது அவசியமாகின்றது. ஒருவன் தான் பெற்றுக்கொண்ட கல்வியால் தனக்கும் தான் வாழும் சமுதாயத்திற்கும் பயன்படும் அளவிற்கு அவனது கல்வி அமைதல் வேண்டும். சிலர் வறுமை, அறியாமை, அலட்சியம் காரணமாக தம் பிள்ளைகளின் கல்வியில் கவனம் செலுத்தாது விடுகின்றனர். இதனால் வருங்காலப் பிரஜை களான சிறுவர்கள் பலர் கல்வி பெறும் வாய்ப்பை இழக்கின்றனர்.


**"எண்ணும் எழுத்தும் கண்ணெனத் தகும்"** என்ற உண்மையை பெற்றோர் உணர்ந்து தம்பிள்ளைகளுக்கு நல்ல கல்வி புகட்ட முன்வர வேண்டும். 'அனை வருக்கும் கல்வி' என்னும் திட்டம் பூரண வெற்றி பெற வேண்டுமாயின் அனைத்து தரப்பு மக்களும் கல்வியின் பயன்களை, கல்வியால் சமுதாயம் அடையப் போகும் உயர்வினை நன்குணர வேண்டும். அப்படி உணரும் பட்சத்திலேயே 'அனைவருக் கும் கல்வி' முழு வெற்றி பெறும். கல்வி அறிவுள்ள சமுதாயம் உருவாக உழைப் பதே நம்கடனாகும்.






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மகாத்மா காந்தி சிறந்த பொன்மொழிகள்

*ஆக்கம்,*
*புகழரசி*
*(தரம் -11)*

அன்பு எங்கே இருக்கிறதோ
அங்கே வாழ்க்கை இருக்கிறது.

அனைத்து பெரிய மதங்களின்
அடிப்படை சத்தியத்தை நான் நம்புகின்றேன்.

பாவத்தை வெறுக்க வேண்டும்
பாவியை நேசிக்க வேண்டும் .

சக்தி அதிகாரத்தின்
அன்பின் மாறினால்
உலகம் சமாதானத்தை அறிந்திருக்கும்.

எதிரியை சிந்திக்கும்
போது அவனை அன்பால் வெல்லுங்கள்







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பேண்தகு பாடசாலை அபிவிருத்தித் திட்டம்

***ஆக்கம்,***
***திருமதி.வி.கௌரிதாசன்,***
***ஆசிரியை.***

நாம் வாழும் புவியானது வாழும் அனைவருக்கும் சொந்தமானது மட்டுமல்ல இனிவருஞ் சந்ததிக்கும் சொந்தமானது. அதனை மாசுபடாது பேணிக் காத்து வழங்கவேண்டியது எம்மனைவரினதும் பொறுப்பாகும். பெரியோர்களிடத்தில் மாற்றத்தை ஏற்படுத்துவதிலும் முக்கியமானது நிலையான நடத்தைமாற்றம் ஏற்படுவதற்காக கற்றலில்,ஈடுபட்டுக்கொண்டிருக்கும் மாணவரிடத்தில் அதனை ஏற்படுத்துவது நிகழ்காலம், எதிர்காலத்திற்கு மிகப் பொருத்தமானதாகும். அனைத்து உயிரினங்களுடனும் பௌதீகத்துடனும் இணைந்துவாழும் போது நிகழ்காலத்தில் ஏற்படும் சமநிலையான சுற்றாடல் அபிவிருத்திச் சவால்களை வெற்றி கொள்ள வேண்டிய தேவை தற்காலச் சந்ததியினிரிடம் பொறுப்பு ஒப்படைக்கப்பட்டுள்ளது.

அச்சவால் ரீதியான இலக்குகள் சார்பில் திட்டமிடப்பட்ட பேண்தகு யுகம் எனும் செயற்பாட்டை பாடசாலைப் பிள்ளைகளிடம் உருவாக்குவதை நோக்காகக்கொண்டு பேண்தகு பாடசாலைச் செயற்திட்டம் உருவாக்கப்பட்டது.

பேண்தகு இலக்குகளை அடைந்து வெற்றியடைவதற்காக பாடசாலைகளில் பண்புத்தர மாற்றங்களை ஏற்படுத்த வேண்டியுள்ளதனை உணர்ந்ததனால் அதற்கானசெயற்பாடு "அழகிய சிறுவர் உலகம் – பேணிப் பாதுகாக்கப்பட்ட எதிர்காலம்" எனும் தொனிப்பொருளில் பாடசாலைகளுக்கூடாக ஆரம்பிக்கப்பட்டு செயற்படுத்தப்படுகிறது. இச்செயற்பாடு மாணவர்களிடத்தில் பங்களிப்பு அணுகு முறையுடன் இணைந்து மிகையுற்பத்திப் பெருக்கை ஏற்படுத்தி ஆக்க பூர்வ மாகக் கல்வி கற்கும் வாய்ப்பை ஏற்படுத்திக் கொடுத்துள்ளது.

இச்செயற்பாடு சமநிலையான அறிவையும், அதனோடிணைந்த திறமைகள் மனப் பாங்குகளினூடாக வாழ்வு முறையை அர்த்தமுள்ள வகையில் ஒழுங்கமைத்து சமூகத்தின் முன்னேற்றத்திற்காக அர்ப்பணிப்புடன் செயற்படும் வாய்ப்பை மாணவர்களிடத்தில் வழங்குகிறது.

தன்னிறைவுப் பொருளாதாரத்துடனும் சூழல் நேயச் செயற்பாட்டுப் பண்புகளுடனும்இணைந்தவாழ்க்கை முறை நுகர்வு முறைமைகளைக் கொண்டு வாழ்வை அழைத்துக்கொண்டஇந்நாட்டின் பண்டைய மக்கள் அந்நியராட்சி தற்கால பூகோளமயமாதற் செயற்பாடுகளின் விளைவினால் பல்வேறு அவலங்களை இக்காலத்தில் எதிர் கொண்டுள்ளது. இச்சவாலை எதிர் கொண்டு வெற்றிகரமாக எதிர்காலத்தில் செயற்படுபவர்களாக மாணவர்களை உருவாக்கும் நோக்குடன் நாடு முழுவதும் 3409 நிகழ்ச்சித் திட்டங்களை நடைமுறைப்படுத்த எதிர்பார்க்கப்பட்டுள்ளது. இதற்காக ஜனாதிபதி செயலகத்தின் அபிவிருத்தி, விசேட கருத்திட்டப் பிரிவினர் தொடர்புடைய அமைச்சுக்கள், திணைக்களங்கள், அரசு, அரசு சாரா நிறுவனங்களைத்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொடர்புபடுத்தி பேண்தகு அபிவிருத்திச் செயற்திட்டங்களை பேண்தகு பாடசாலைச் செயற்றிட்டங்களினூடாக வெற்றிகரமாக செயற்படுத்தப்படுகிறது.

பேண்தகு பாடசாலைச் செயற்திட்டத்தின் பிரதான நோக்கம் பாடசாலைப் பிள்ளைகள் ஆபத்துக்குள்ளாவதைத் தவிர்த்து உலகுக்கும் சமூகத்திற்கும் ஈடு கொடுக்கப்பழக்குவதுடன் அவர்களை சமூகமாற்றக் காரணிகளாக மாற்றுவது ஆகும். இச் செயற்பாடு ஐந்து தேசிய நிகழ்ச்சித் திட்டங்களினூடாக அடைவதற்கு எதிர்பார்க்கப்பட்டுள்ளது. பாடசாலைகளினூடாக செயற்படுத்த எதிர்பார்க்கப்படும் இச் செயற்திட்டத்திற்காக "பேண்தகு பாடசாலைக் குழு" ஒன்று பாடசாலை அதிபர்களின் தலைமையில் உருவாக்கப்பட்டு அதன் கீழ் ஐந்து நிகழ்சித் திட்ட உப குழுக்களைக் கொண்ட "பேண்தகு பாடசாலை மாணவக்குழு ஒன்றை உருவாக்கி தரத்தைக் கொண்ட அனைத்துப் பாடசாலைகளும் இந் நிகழ்ச்சித் திட்டத்திற்காகத் தெரிவு செய்யப்பட்டுள்ளன.

பொதுவான செயற்பாடொன்றிற்காக அதிபர் தலைமையிலான பேண்தகு பாடசாலைக்குழுவும் பேண்தகு பாடசாலை மாணவர்குழுவும், உபகுழுக்களும் உருவாக்கப்பட்டு மொத்த நிகழ்ச்சித் திட்டத்திற்கான உயர்ந்த செயற்பாட்டுத் திட்டமாகத் தயாரிக்கப்பட்டு ஐந்தாண்டுகளுக்கான அபிவிருத்திச் செயற்பாடுகளாகத் தயாரிக்கப்படும். இச் செயற்பாடு மாணவர்களிடத்தில்

- ✡ குழு மனப்பாங்கையும் கூட்டுப்பொறுப்புடன் செயற்படவும் தயாராகுதல்.
- ✡ திட்டமிடல், முகாமைத்துவம் தொடர்பான செயற்பாட்டுத் தெளிவை ஏற்படுத்துதல்.
- ✡ தலைமைத்துவ பண்பை ஏற்படுத்துதல்.

**என்பவை ஏற்படவழிவகுக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.**

பேண்தகு பாடசாலை நிகழ்ச்சித் திட்டமானது நாடு தற்போது எதிர் நோக்கும் நான்கு சவால்களை எதிர் வரும் காலங்களில் வெற்றி கொள்வதற்குரியவகையில் உருவாக்கப்பட்டுள்ளது. அந்தவகையில் உருவாக்கப்பட்டுள்ள நான்கு திட்டங்களும் பல்வேறு குறிக்கோள்களுடன் உருவாக்கப்பட்டுள்ளன. பாடசாலைகளில் செயற் படுத்தப்படும் இச்செயற்றிட்டங்களினூடாக நாட்டில் பேண்தகு அபிவிருத்தியை உயர்த்தமுடியும் என எதிர்பார்க்கப்படுகிறது. எமது பாடசாலைகளில் மிக அதிகளவான நிலங்கள் குறைந்தளவான பயன்பாட்டுடன் இருப்பது அவதானிக்கப்பட்டு உணவுற்பத்தி தேசிய வேலைத்திட்டத்தினூடாக பாடசாலைகளில் காணப்படும் குறைந்த பயன்பாட்டினைக் கொண்ட நிலங்களை விவசாய ரீதியில் சுற்றாடல் நேயமிக்க அபிவிருத்திச் செயற்பாட்டில் பயன்படுத்தும் உச்சஆற்றல் இருப்பது இனங் காணப்பட்டு உச்ச பயனுள்ள எதிர் கால குறிக்கோள்களை அடைந்து கொள்ளும் வகையில் இருக்கும் நிலவளத்தினைப் பொருத்தமான சிறந்த விவசாய ஆலோசனைகளின்படி பயன் படுத்தவும் அதனூடாக பாடசாலைகளுக்கான வருமானத்தைப் பெற்றுக் கொடுக்கும் அலகுகளாக விருத்தி செய்வதற்கும் எதிர்பார்க்கப்பட்டுள்ளது.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இச்செயற்பாடானது எதிர்காலத்தில் மாணவர்களை வினைத்திறன் மிகு முயற்சியாளர்களாகுவதற்கான அனுப வங்களை பெற்றுக்கொடுக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. அத்துடன் தொடர்பாடல்– விவசாயத்திற்கிடையில் காணப்படும் அன்னியோன்னியதொடர் புளைக் கற்றாய்ந்து செயற்படும் மிகச்சிறந்த விவசாய முயற்சியாளர் களை எதிர்காலத்தில் நாட்டுக்குப் பெற்றுக்கொடுப்பது இதன் நீண்ட காலக் குறிக்கோளாகும்.

எதிர்கால சந்ததியினருக்கு தூய்மை யான சுற்றாடலில் வாழ்வதற்கான உரி மையுள்ளது. ஆனால் சுற்றாடலானது நாளுக்கு நாள் பிரச்சினைகளை எதிர் கொள்வதுடன் அவற்றுக்ககுத் தீர்வு காண்பதில் பாரிய சவால்களை எதிர் கொள்கிறது. ஆகவே எதிர்கால நாட்டின் வளங்களான மாணவர்களி டத்தில்சுற்றாடலையும்இயற்கை வளத் தையும் பாதுகாக்கும்வகையில் சுற்றாட லில் பற்றுள்ளவர்களாக்கி பாதுகாத்து எதிர்காலத்திற்கு அளிப்பவர்களாகுதல் இதனூடாக சுற்றாடலை நேசிப்பதற் கும், பாதுகாக்கவும் அதனூடாக சக வாழ்விற்கான குணாம்சங்களை கட்டி யெழுப்ப சிறுவர்கள் பழக்கப்பட்ட சந்தர்ப்பங்கள் கிடைக்கும். இதன் மூலம் நன்னடத்தையுள்ள எதிர்கால சந்ததியை நாட்டுக்கு பெற்றுக்கொடுக்க முடியும் நிலை உருவாக்கப்படும் மேலும் தற்போது உருவாகியுள்ள பாதிப்பான நிலைமைகளிலிருந்து மாணவர்களைத் தெளிவுபடுத்தி பாட சாலைச் சமூகத்தை பாதுகாத்துக் கொள்ள முடியும்.

எமது நாட்டில் அண்மைக் காலங்க ளில் அதிக பாதிப்பை சமூகம், குடும்பம், தனிமனிதன் என ஏற்படுத் திவருவது போதைப்பொருட் பாவனை யாகும். இலங்கையைப் பொறுத்த வரையில் குறைந்தவருமானம் பெறும் குடும்பங்களின் குடும்ப வருமானத் தில் 1/3 பகுதி புகைத்தல், மதுசாரப் பயன்பாட்டிற்காக செலவிடப்படுகிறது. அத்துடன் நாட்டின் மொத்த சுகாதார செலவுகளில் 226 ஐ விட அதிகமாக மதுசார, புகைத்தல் பயன்பாட்டினால் நோயுள்ளவர்களுக்காகச் செலவு செய்யப்படுகிறது.

பாடசாலைப் பிள்ளைகளை இலக்கு வைத்து பல்வேறு விதமான காவு கொள்ளும் போதைப் பொருள்கள் நாட்டிற்குள் கொண்டுவரப்படுகின்றன. போதைப் பொருட் பாவனைகள் பல் வேறு எதிர்விளைவுகளை நெறி பிறழ் வுகளை ஏற்படுத்துவதனூடாகநாட்டின் அபிவிருத்தியில் நேரடித் தாக்கத்தை ஏற்படுத்தி அபிவிருத்தியில் பின்ன டைவு ஏற்படக் காரணமாகிறது. எனவே அபிவிருத்தி அடைந்து வரும் நாடுகள் போதைப் பொருள் பாவனை யினால் ஏற்படும் தீய விளைவுகளை இழிவளவாக்க சமூகப் பொறுப்புடைய எதிர்கால சந்ததியினரை உருவாக்கு வதற்காக பாடசாலை மட்டத்தில் செயற்பாடுகள் மேற்கொள்ளப்படு கின்றன.

புகைத்தல், மதுசாரம், போதைப் பொருள், சமூகப் பிரச்சினைகளை இழிவளவாக்குவதன் அவசியம் அதற் காகச் செய்ய வேண்டியவை தொடர் பான நிலையான நடத்தை மாற்றங் களுக்கான செயற்பாடுகளைத் திட்ட மிட்டுச் செயற்படுத்துதல் மூலம் போதைப் பொருள் பாவனைக்கெதி ரான எதிர்காலத் தலைவர்களாக மாற்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

றும்" வேலைத்திட்டக் குறிக்கோள் செயற்படுத்தப்படுகிறது.

"நோயற்ற வாழ்வு குறைவற்ற செல்வம்" என்பதற்கமைய மகிழ்ச்சியான வாழ்க்கைக்கு அடிப்படையாக அமைவது உடல், உள ஆரோக்கிய மாகும். தொற்றா நோய்கள் நோயாளரின் உடல், உளஆரோக்கியத்தைப் பாதிக்கும் அதேவேளையில் குடும்பங்கள் சார்ந்தும் பலபிரச்சினைகள் உருவாகக் காரணமாகின்றன. எமது நாட்டைப் பொறுத்தவரையில் அண்மைக் காலங்களில் அதிக தாக்கத்தை ஏற்படுத்திக் கொண்டிருக்கும் தொற்றா நோய் சிறுநீரக நோயாகும். பல்வேறுபட்ட சமூக, வயது மட்டங்கள், பால்நிலை வேறுபாடு எதுவுமின்றி இத்தொற்றா நோய் தாக்கத்தினை ஏற்படுத்தியுள்ளது.

- ✡ மாறிவரும் நுகர்வுச் செயற்பாடு
- ✡ தொழிநுட்ப முன்னேற்றத்துடன் இணைந்து சமூகத்தில் ஏற்பட்டுள்ள நடத்தை மாற்றங்கள்
- ✡ தவறான சுகாதாரப் பழக்க வழக்கங்கள் என்பன இதற்கு காரணமாக அமைந்துள்ளன.

மாணவர்களான எதிர்கால சந்ததியினரை மீட்கப்பட வேண்டுமாயின் பாடசாலை நிகழ்ச்சித்திட்டதின் கீழ் சிறந்த வாழ்க்கைமுறைக்கு பழக்கப்படுத்துவது அவசியமானதாகும். இதற்காக

- ✡ பாடசாலை ரீதியான விழிப்பூட்டல் நிகழ்ச்சித் திட்டங்களை நடாத்துதல்.
- ✡ மாணவர்கள் அனைவருக்கும் பருகுவதற்குப் பொருத்தமான நீர்வசதி, வழங்குதல்.
- ✡ இனங்காணப்பட்ட சுகாதார மேம்பாட்டு வசதிகளை வழங்குதல்

**போன்ற செயற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.**

இன்றைய சிறுவர்கள் நாளைய தலைவர்கள் என்பதற்கமைய கூருணர்வுடைய, ஆளுமையுடன், சமூகத்தை நேசிக்கும் பிரஜையாக வேண்டியுள்ளது. அதனை அடைவதற்காக ஐ.நாவின் சிறுவர் நிதியம், சர்வதேச தொழிலாளர் அமைப்பு என்பன பல்வேறு நாட்டு சிறுவர்களினை இலக்காகக் கொண்டு.

- ✡ சமூகரீதியில் சிறுவர்கள் எதிர்நோக்கும் சிக்கல்கள், பிரச்சினைகளைக் குறைத்தல்.
- ✡ அவர்களின் பாதுகாப்புத் தன்மை, அடிப்படை உரிமைகள், பாதுகாப்பு என்பவற்றை உறுதி செய்தல்

ஆகியவற்றை அடையக்கூடிய வகையில் செயற்றிட்டங்களை செயற்படுத்துகிறார்கள். எனினும் அண்மைக்கால இலங்கையின் சமூகத்தினால்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- ✡ பிள்ளைகளை பல்வகையான அழுத்தங்களுக்குட்படுத்தல்.
- ✡ அநீதிகள், துஸ்பிரயோகங்கள் மேற்கொள்ளப்படுதல்

என்பவை அவர்கள் அடிப்படை சமூக பொருளாதாரப் பிரச்சினைகளை எதிர்கொள்ளக் காரணமாகின்றன. அவற்றிலிருந்து அவர்களை விடுவிக்க அரசாங்கம் மீண்டெழும் செலவீனங்களாக கணிசமான நிதியீட்டத்தை வழங்கி

- ✡ இலவச் கல்வி
- ✡ இலவச சுகாதார சேவை
- ✡ சமூகப் பாதுகாப்பு நிகழ்ச்சித் திட்டங்கள்

என்பவற்றைச் செயற்படுத்தினாலும்

- ✡ வீட்டு வன்முறைகள்
- ✡ பாலியல் ரீதியான துஸ்பிரயோகங்கள்
- ✡ போசணை, சுகாதாரப் பிரச்சினைகள்
- ✡ போதைப் பொருட் பாவனை
- ✡ பல்வேறு வகையான குற்றங்களிலீடுபடுதல்
- ✡ நன்னடத்தைக்குட்படுத்துதல்.
- ✡ குடும்பப் பிரச்சினைகளால் நிர்க்கதிக்குள்ளாகுதல்
- ✡ அங்கவீன குறைபாடு



போன்றவற்றினால் அழுத்தங்களுக்குள்ளாக்கக் கூடியவகையில் சந்தர்ப்பங்கள் ஏற்படுகின்றன. இவற்றிலிருந்து மாணவர்களை மீட்டெடுத்து ஆரோக்கியமான உடலில் ஆரோக்கியமான சிந்தனைகள் அதனோடிணைந்த ஆளுமை விருத்தி கொண்டவர்களாக அவர்களை உருவாக்க "பிள்ளைகளைப் பாதுகாப்போம்" நிகழ்ச்சித்திட்டத்தினூடாக மாணவர்களிடத்தில் பாதுகாப்பான பௌதீகச் சூழல் உளரீதியான அபிவிருத்தியை ஏற்படுத்தும் வகையில் நேயமிக்க சுற்றாடலொன்றை கட்டியெழுப்பி அதனூடாக

- ✡ விபத்துக்கள் அனர்த்தங்களற்ற பாடசாலை ஒன்றை உருவாக்குதல்.
- ✡ மாணவர்களுக்கான உளவள சேவைகளை விதிமுறைப்படுத்துதல்.
- ✡ வாசிப்பில் விருப்பை ஏற்படுத்துல்.
- ✡ ஆளுமை விருத்திகளை ஏற்படுத்துதல்.

போன்றவற்றை அடையும் வகையில் நிகழ்ச்சித் திட்டமிட்டு நடாத்த எதிர்பார்க்கப்படுகின்றன. இவ்வனைத்துச் செயற்பாடுகளும் வெற்றிகரமாக்கி ஒன்றிணைக்கும் போது "அனைத்து உயிரினங்கள், பௌதீகத்துடன் வாழ்ந்து நிகழ்காலத்தில் ஏற்பட்டுக் கொண்டிருக்கும் சமநிலையான சுற்றாடல் அபிவிருத்திச் சவால்களை வெற்றி கொண்டு எதிர்கால சவால்களை எதிர்கொள்பவர்களான மாணவர்கள் உருவாகிக் கொள்வார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# RAS ENTERPRISES
## PRINTING & BOOKSHOP

சகல விதமான பாடசாலை உபகரணங்கள், அப்பியாசக் கொப்பிகள், பயிற்சிப் புத்தகங்கள், மாதிரி வினாத்தாள்கள், கடந்த கால வினாவிடைப் புத்தகங்கள் என்பவற்றை குறைந்த விலையில் பெற்றுக்கொள்ளலாம்.



Sub Post Office, Uruthirapuram Road,
Karadipokku, Kilinochchi.

உப தபால் அலுவலகம், உருத்திரபுரம் வீதி,
கரடிபோக்கு, கிளிநொச்சி.

077 670 5927

# AKSHAYA
## MEDICAL CENTER
SPECIALITY MEDICAL CENTER



YOUR HEALTH
**IS OUR PRIORITY**

We offer best healthcare for you and your family

KANDY ROAD,
ANANTHAPURAM,
KILINOCHCHI.

CALL US
021 228 4545

- PHARMACY & GROCERY
- CLINIC
- CHANNELING
- LABORATARY
- DENTAL
- SCAN & ECG
- EYE CARE
- EAR CARE
- MOTHER & BABY NEEDS
- MEDICAL AID GOODS
- MOBILE MEDICAL SERVICE
- HOME DELIVERY


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அகரன் புத்தகசாலை
# AGARAN BOOKSHOP

சகல விதமான பாடசாலை உபகரணங்கள், அப்பியாசக் கொப்பிகள், பயிற்சிப் புத்தகங்கள், மாதிரி வினாத்தாள்கள், கடந்த கால வினாவிடைப் புத்தகங்கள் என்பவற்றை அதிகூடிய விலைக்கழிவில் பெற்றுக்கொள்ளலாம்.

- ரட்ணாவின் மெகா வாடிக்கையாளர்.
- லைன் நிறுவனத்தின் வடமாகாண விநியோகஸ்தர்.
- தென்னிலங்கையின் மும்மொழி பத்திரிகைகளுக்கான முகவர்.
- லேக்கவுஸ் பத்திரிகையின் விளம்பர முகவர்.

சந்திரக்குமார் ஆசிரியர் வெளியீடுகளின் கிளிநொச்சி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார் ஆகிய மாவட்டங்களுக்கான விநியோகஸ்தர்.



ஏ9 வீதி, கிளிநொச்சி, **Tel : 021 228 3967 | 077 303 3965** A9 Road, Kilinochchi.

ஆளுமை மிக்க மனித சமூகத்தின் பலம் புத்தகங்களும்! வாசிப்புக்களுமே!!

# BOOK LAB புத்தகக் கூடம்

தேர்ந்த நூல்களின் விற்பனையாளர், வெளியீட்டாளர்.



இல.204, ஸ்ரேலன் இராமநாதன் வீதி,திருநெல்வேலி.

Tel : 021 222 7290 | 077 128 5749 | E-mail : booklab@gmail.com

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாடசாலை நினைவுகள்

*ஆக்கம்,*
*ப.சுகுணதாஸ்*
*(2020 Bio....)*

**மத்திய கல்லூரியை மகிழ்வுடனே நினைக்கையிலே மனதிலே தோன்றிய சிலவரிகள்.......**

சின்னஞ் சிறுவனாய்
துள்ளித் திரிந்து விட்டு
பள்ளி எனும் சாலையிலே
படிப்பதற்குச் சேர்ந்து விட்டேன்

அன்னை மடியிலே அன்று
அமர்ந்து இருந்து விட்டு
ஆரம்பக் கல்வியிலே கற்க என
அடியெடுத்து வைத்துவிட்டேன்

ஆடிப்பாடி வீட்டினிலே நேர ஒழுங்கின்றி
கலகலப்பாய் கற்றுவிட்டு
நேர ஒழுங்கினிலே வகுப்பறையில்
நேர்மையாய் சேர்ந்து விட்டேன்

அதிபர் ஆசானின் அரவணைப்பில்
அன்புடனே கலந்து விட்டு
சக குழுக்களுடன் படிப்பதற்கு
சந்தோசமாக சேர்ந்து விட்டேன்

ஆரம்பக் கல்வியினை ஒன்று முதல் ஐந்து வரை
ஆணித்தரமாகக் கற்று விட்டு
அடி எடுத்து அடுத்த நிலைப்பள்ளிக்கு
அமைதியாய் சேர்ந்து விட்டேன்

தரம் ஆறுமுதல் பதினொன்று வரை
தரமான ஆசான்களைப் பெற்று
தவறாது சித்தி எய்தி உயர் நிலைக்கு
தகுதியுடன் சேர்ந்து விட்டேன்

நல்வழிப்படுத்திய ஆசான்கள் இன்னும்
அகலவில்லை என் மனதை விட்டு
பெற்றோரின் கருத்துரையையும் கேட்க
பெருமனதாய் ஏற்று விட்டேன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுயமாகக் கற்பதற்கு வழிதேடி
சுதந்திரமாய் இருந்து விட்டு
சிந்தித்தேன் நெறிதவறவில்லை
சிந்தனையுடன் கற்று விட்டேன்

பாடசாலை சேர்ந்த நாள் முதலாய்
பரீட்சை பரீட்சை என எழுதிவிட்டு
பதிலுக்காய் காத்து நின்று அடிவாங்கி
படித்த நாளை நான் மறவேன்

வீட்டினிலும் பாடசாலையிலும்
வீறுநடை போட்டு விட்டு
பட்டம் பதவி எனும் ஒழுங்கை
பதித்திடத் துணிந்து விட்டேன்

மாணவர் தலைவனாயும் இருந்து
மன்றங்களிலும் செயற்பட்டு
வழிநடத்திச் செல்ல வாய்ப்பு தந்த
வருடங்களை நான் மறவேன்



பசித்திருந்து தனித்திருந்து விழித்திருந்து
படிபடியென்று படிக்க வழிசமைத்த
மத்திய மகா வித்தியாலயத்தை
மறந்திடவே நான் மாட்டேன்............





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நல்ல நட்பின் வலிமை

*ஆக்கம்,*
*தோ.டிலக்சிகா (தரம் 11 A)*

பச்சை பசேலெனப் புற்கள் நிறைந்ததும் எங்கு பார்த்தாலும் அழகிய பூக்கள் பூத்துக்குலுங்கி காணப்படுவதுமான ஒருகிராமம். அதன் பெயர் காந்தி என்பதாகும். அங்கே யாழ்/காந்தி வித்தியாசாலை எனும் பெயரில் பாடசாலை ஒன்று இருந்தது. அந்தப் பாடசாலையில் குமரன் எனும் மாணவன் படிப்பில் சிறந்து விளங்கினான். அவனை அவனது அம்மாவே கற்பித்து உயர் நிலைக்கு கொண்டு சென்றார். குமரன் மிகவும் நல்ல பிள்ளையாக அனைவரும் பாராட்டும் படி நடந்து கொள்வான். பாடசாலையிலுள்ள அனைத்து ஆசிரியர்களுக்கும் மாணவர்களுக்கும் அவனை மிகவும் பிடிக்கும். ஆனால் ஏனோ தெரியவில்லை அவனது அப்பாவிற்கு மாத்திரம் குமரனைப் பிடிக்காது. அடிப்பார் அல்லது பேசுவார். அதனால் குமரன் அவனுடைய தந்தையுடன் கதைப்பதில்லை. அவனுடைய அப்பா வேலைக்குச் செல்வதால் பகல் வேளையில் வீட்டில் நிற்பதில்லை.

திடிரென ஒரு நாள் வாகன விபத்தில் குமரன் தன்னுடைய தாயை இழந்துவிட்டான். இதனால் குமரன் தனது உலகம் இருண்டுவிட்டதைப் போன்ற உணர்வைப் பெற்றான். அதனால் அவன் மூன்று நாட்களுக்கு மேல் தனது அறையினுள் இருந்து அழுதான். அவன் அந்த மூன்று நாட்கள் உண்ணவில்லை. அவனது தாயின் பிரிவானது அவனைப் பாதாளத்தில் தள்ளியது போன்று இருந்தான். அவ்வேளையில் அவன் தனிமையை உணர்ந்தான். பின்பு வகுப்பு ஆசிரியர் அவனைப் பாடசாலைக்கு வருமாறு அழைத்தார். அவனும் பாடசாலைக் குச்சென்றான்.

குமரன் பாடசாலைக்கு ஒழுங்காகச் செல்வதில்லை. மாணவர்களுடன் கதைக்கமாட்டான். படிப்பில் அக்கறையின்றியும் வகுப்பில் ஆசிரியர்கள் கற்பிக்கும் போது பாடத்தில் கவனமின்றியும் ஆசிரியர்கள் கொடுக்கும் வீட்டு வேலைகளைச் செய்யாமல் வருவதும் பாடசாலைக்கு நேரம் தாமதமாகி வருவதும் பாடக் கொப்பிகளை பாடசாலைக்கு கொண்டு செல்லாமல் இருப்பதும் வகுப்பில் கடைசி வரிசையில் அமர்வதும் போன்ற செயல்களால் பல நாட்களைக் கழித்தான். இவ்வாறான செயற்பாடுகளால் ஆசிரியர்களின் தண்டனைக்கு உட்பட்டான்.

ஒரு நாள் குமரனின் வகுப்பில் வதனன் எனும் மாணவன் புதிதாகச் சேர்ந்தான். அவன் நன்றாகப்படிப்பான். அனைத்து மாணவர்களுடனும் பழகுவான். வதனன் குமரனோடு கதைத்தான். ஆனால் குமரனோ வதனனோடு கதைப் பதில்லை. குமரனின் செயற்பாடுகளை அவதானித்த பின்பு வதனன் இவ்வாறு செயற்படுவதற்கான காரணத்தைக் கண்டறிய முற்பட்டான். குமரன் தனது தாயை இழந்ததே அவனது செயற்பாடுகளுக்கு காரணம் உள்ளது என்பதைக் கண்டறிந் தான். குமரனின் வீட்டின் அருகே வதனனின் வீடு இருந்தது. வதனன் மாலை வேளைகளில் குமரனின் வீட்டிற்குச் சென்று அவனது தனிமையை நீக்கினான். ஆனால் ஏனைய மாணவர்கள் வதனனை குமரனுடன் சேர வேண்டாம் எனக் கூறினார்கள். ஆனால் வதனன் அதையெல்லாம் பொருட்படுத்தவில்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வதனன் மாலைவேளைகளில் குமரனின் வீட்டிற்குச் சென்று அவனை வீட்டு வேலைகளை செய்யச்சொல்லி தொந்தரவு கொடுப்பான். வதனனின் தொல்லைகளைத் தாங்காது குமரனும் அவற்றைச் செய்வான். வதனன் பாடசாலை களில் குமரனுக்கு அருகில் சென்று அமர்ந்து கொள்வான். அவனுக்கு விளங்காத வற்றை விளங்கப்படுத்துவான். படிப்படியாக வதனன் குமரனுக்கு படிக்கும் ஆர்வத்தை ஏற்படுத்தினான். வதனன் பின்பு குமரனுக்கு தேவையான உதவிகளை எல்லாம் செய்தான். பாடசாலையில் நடாத்தப்பட்ட பரீட்சையில் குமரனும் வதனனும் முதலாம் மாணவர்களாகத் திகழ்ந்தனர். குமரனிற்கு இதனை நம்ப முடியவில்லை. கனவா? நனவா? என யோசித்தான். பின்பு கனவு அல்ல இது நனவு என புரிந்து கொண்டான்.

வதனனும் குமரனும் உயிர்த்தோழர்களாக மாறினர். குமரன் தனக்கு மீண்டும் தனது தாயாக வதனன் கிடைத்துள்ளான் என நினைத்தான். இருவரும் அந்த அழகான பூக்கள், புற்கள் நிறைந்த கிராமத்திலே நல்ல மாணவர்களாகத் திகழ்ந்தனர். ஒரு நட்பின் வலிமையானது அனைவரையும் மாற்றக்கூடியது. ஆகவே நாமும் பிறருக்கு நல்ல நண்பர்களாக இருக்க வேண்டும்.







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# KUMUTHINI MEMORIAL
## MEDI & EYE CARE



திருநகர் வீதி,
இராணுவ முகாம் முன்பாக
Tel : 021 228 3343
077 645 9443

DR.R.K.Lingam M.D
077 230 4532

# இஷாரா நியூ டிறெஸ் மார்ட்

கிளிநொச்சி மத்திய கல்லூரி முன்பாக

புதிய ஆடைத் தெரிவுகளுடன்...




இல 23, A9 வீதி,
ஆனந்தபுரம், கிளிநொச்சி.
தொ.பே. 021 228 2125

கனகபுரம்,கிளிநொச்சி.

புகையிரதகடவை அருகாமை,
கிளிநொச்சி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org










Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கற்கையின் போது எவ்வாறு கவனம் செலுத்துதல் வேண்டும்

*ஆக்கம்,*
*தி.தீபிகா, (2022-BIO)*

**கற்கைக்கான இடத்தை உருவாக்குதல்**

ஒரு ஆய்வு இடம் என்பது நீங்கள் படிப்பு அல்லது வேலைக்காக மட்டுமே அர்ப்பணிக்கும் ஒரு பகுதி. நீங்கள் உங்களுக்கு ஏற்ற வகையில் சரியான படிப்பு இடத்தை உருவாக்க வேண்டும். இப்போது இது விலை உயர்ந்ததாக இருக்க வேண்டியதில்லை. உங்களுக்குச் சரியான மேசைகூட தேவையில்லை. இயற்கை யான நல்ல சுத்தமான காற்றோட்டம் உள்ள இடமாக இருந்தால் சாலச் சிறந்தது. ஏனென்றால் நாம் இருக்கும் இடம் கூட எம்மை தூய்மையாக்கும். நல்ல சுவாசிக்கும் சூழல் நம் உடலையும் உள்ளத்தையும் ஒரு சீர்நிலைப் படுத்தும். உங்கள் படுக்கையில் படிப்பதைத் தவிர்க்க முயற்சிக்கவும்.

**ஒரு முறையான இலட்சியத்தை உருவாக்குதல்.**

சரியான இலட்சியத்தை அடைவதற்கு பொழுதுபோக்கு சம்பந்தமான பொருட்களை நீங்கள் படிக்கும் இடத்தில் வைத்திருக்கக்கூடாது. மாற்றாக உங்கள் படிப்பு இடத்திற்கு அருகில் படிப்புடன் தொடர்புடைய உயர் நோக்கங்களை உடைய புத்தகங்களை வைத்துக்கொள்ள வேண்டும்.

**"எத்தனை உயரத்தில் இருந்தாலும் தன் இரை மீது குறியாய் இருக்கும் பருந்தைப் போல இரு"**

**வலைத்தளங்களில் செலவிடும் நேரத்தை நிறுத்திக் கொள்ள வேண்டும்**

கவனத்தை சிதறடிக்கும் தொலைபேசிப் பாவனையை படிக்கும் இடத்தில் முற்றாகத் தவிர்த்துக் கொள்ள வேண்டும்.

**கஷ்டமான வேலையை முதலில் ஆரம்பிக்கவும்**

நீண்ட காலத்துக்குச் செய்யக்கூடிய வேலையை ஆரம்பிப்பதற்கு இது ஒரு பொன்னான வழியாகும். நீங்கள் மிகவும் கடினமான வேலையை ஆரம்பித்தால் அந்த வேலையில் ஆழ்ந்து மூழ்கி விடும் போது படிப்படியாக அவ் வேலை இல்லாதது போல் தோன்றும். அப்போது மனதில் இருந்த சுமைகள் குறையும். அப்போது மனதில் புதிய சிந்தனைகள் தோன்றும்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**கற்பது எப்படி ?**

உங்களது நிறைய நேரத்தை மிச்சப்படுத்தக்கூடிய 6 இலகுவான ஆலோசனைகள்.

1) **ஒரு நேரத்தில் 30 நிமிடங்கள் கற்பதில் ஈடுபடுங்கள்**

எமது மூளை "கற்பதின்" முதலிலிருந்து கடைசி 15 நிமிடங்கள் மட்டுமே தகவலை நன்முறையில் கிரகிக்கின்றது.

இதன் அர்த்தம் இடையிடையே உள்ள ஒவ்வொன்றும் விரைவில் மறந்து விடப்படலாம் எனத்தோன்றும். (அவை எமது நீண்ட கால ஞாபகத்திற்கு நிலைக்காது போகும்.)

மீதி 15 நிமிடத்தை நினைவு படுத்திக் கொள்ளுங்கள்.

2) **அதைப் பிரித்துக் கொள்ளுங்கள்**

முழுப்பகுதியையும் சமாளிப்பதை விட அதனைப் பிரித்துப் படிப்பது இலகுவானதாகும்.

அதாவது, ஒரு பெரும் கடமைப் பொறுப்பினை சிறு கடமைப் பொறுப்புகளாகப் பிரித்துக் கொள்வது, அப் பொறுப்பை நிறையவே செய்யக்கூடியதாகவும், நிர்வகிக்க கூடியதாகவும் ஆக்கும்.

3) **ஒரு நேரத்தை ஒதுக்கி(30 நிமிடங்கள்)தனித்து ஒரு விடயத்தில் கவனத்தைத் குவிமையப்படுத்துங்கள்.**

நீங்களாகவே ஆரம்பித்துக் கொள்ளமுடியாது என்ற அந்த விடயத்தை அறிவீர்களா? தாமதப்படுத்தாமல் அவ்வேளையே அதற்குள் பிரவேசியுங்கள்.

4) **ஓர் ஒய்வை எடுங்கள்**

இதன் போது படிப்பை விடுத்து உங்களுக்குப் பிடித்த வேறேதும் விடயத்தை நோக்குங்கள். உதாரணமாக, பாடல் கேட்பது, விளையாடுவது, ஏதேனும் பயனுள்ள விடயமாக இருப்பது நல்லது.

5) **மேசையில் அமருங்கள்**

படித்த விடயத்தை மீட்டிப் பாருங்கள்(Recall) பின்னர் இன்னும் 15 நிமிடங்கள் மற்றைய பகுதியைப் படியுங்கள்.

6) **நூல்களுடன் படியுங்கள்**

கணினி, தொலைபேசியினூடே படிப்பதை முடியுமானவரை தவிருங்கள். அதில் இருந்து வரும் கதிர்கள் மூளை, கண் என்பவற்றை சோர்வாக்கும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விவேகானந்தர் பொன்மொழிகள்

*ஆக்கம்,*
*சண்முகநாதன் சர்மினி (2022 Com)*

சுமைகளைக் கண்டு
நீ துவண்டு விடாதே
இந்த உலகத்தை சுமக்கும்
பூமியே உன்காலடியில் தான்.......

உனக்குள்ளேயே அளவற்ற ஆற்றலும் அளவற்ற அறிவும்
வெல்ல முடியாத சக்தியும் இருக்கிறது என்று
நீயும் நினைப்பாயானால் அந்த சக்தியை
உன்னால் வெளியே கொண்டு வர முடியுமானால் நீயும்
என்னைப்போல ஆக முடியும்.

"இல்லை என்று ஒருபோதும் சொல்லாதே"
"என்னால் இயலாது" என்று ஒரு நாளும் சொல்லாதே"
நீ வரம்பில்லா வலிமை பெற்றவன்.

வாழ்க்கையே போர்க்களம் போல இருக்கிறது
அஞ்சாமல் போரிடும் வீரனைப் போல நின்று
வெற்றிக் கனியைப் பறியுங்கள்

பின்னோக்கிப் பார்க்காதே
எப்போதும் முன்னோக்கி
நீ எதைச்செய்ய விரும்புகிறாயோ
அதையே பார் நீ முன்னேறுவது உறுதி.

பூக்களாய் இருக்காதே உதிர்ந்து விடுவாய்
செடிகளாக இரு
அப்போது தான் பூத்துக் கொண்டே இருப்பாய்...

நீங்கள் மத உணர்வு பெற வேண்டுமானால்
எந்த மதத்தையும் சாராமல் தொடங்க வேண்டும்
பாடுபட்ட உண்மையை உணர வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கஷ்டத்தை நீ நன்கு கவனித்துப்பார்!
அதில் துணிச்சல் தென்படும்
அதைப் புரிந்து கொண்டால் துணிச்சல் என்பது
நீ அணியும் ஆடையாக உன்னை அலங்கரிக்கும்.

வெறும் புத்தகங்களைப் படிப்பதால் மனிதன் வறட்சி அடைகிறான்
படித்தவன் யார்? துளியாவது அன்பை உணர்பவனே படித்தவன்
கடவுளே அன்பு அன்பே கடவுள்
கடவுள் எங்கும் நிறைந்திருக்கின்றார்.

நான் அனுபவிக்கும் இந்த துன்பத்திற்கு
நானேதான் காரணம் ஆகவே இதற்கு
நானேதான் பரிகாரம் தேடிக்கொள்ள வேண்டும்.
ஆகவே எழுந்திருங்கள்.

விதிக்கு நீங்களே தான் காரணம்
என்பதை தெரிந்து கொள்ளுங்கள்
உங்கள் எதிர்காலத்தை நீங்களே
உருவாக்கிக் கொள்ளுங்கள்


நாம் காட்டும் பணிவிற்கும் மரியாதைக்கும்
பிரதிபலனாக ஏதேனும் ஒரு நன்மையைப் பெற வேண்டும்
என்று எதிர்பார்ப்போம் எனில் நம்மிடம்
உண்மையான அன்பு உருவாகாது...........









Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org











Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# NISHANTHA TRADERS
## நிசாந்த ரேடர்ஸ்

பிறவுன்ஸ் நிறுவனத்தின் அதிகாரம் பெற்ற முகவர்



ஏ9 வீதி, மத்திய கல்லூரி முன்பாக,
கிளிநொச்சி.

# HOTEL SELLA
## REST



CALL US
021 492 5665
021 228 5613

கனகபுரம் வீதி, கிளிநொச்சி.

# MUTHTHUMARY

- கேக், ஐசிங் கேக்
- ஐஸ்கிறீம் தயாரிப்பதற்கான பொருட்கள்
- இயற்கைப் பூக்களால் உருவான மாலைகள்
- றெஜிபோம் கட்டிங்ஸ்
- நிகழ்வுகளிற்கு தேவையான அலங்காரப் பொருட்கள்



ஏ9 வீதி, மத்திய கல்லூரி முன்பாக,
கிளிநொச்சி.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நூலின்பம் தரும் பேரின்பம்

ஆக்கம்,
ம.தரங்கினி (2022 BIO)

நூல்களெனும் நண்பர்களே!
உலகைக்காட்டும் நுட்பமிகும் ஆடிகளே!
காலத்தேரின் கால்வழிநற்
சுவடுகளைப் பாடமாய் ஆக்கிக்
கண்முன்னால் திரையிட்டுக் காட்டுகின்றீர்!
நால்வகைப் பூ இதழ்களுக்குள்
தேனீ மூழ்கி நாவினிக்கும்
'தேனடை' யைச் சமைத்தளிக்கும்!
வால் அறிவு பெற வேண்டின் நூல்களே!
உம் மடியினிலே நாங்களெல்லாம்
மூழ்க வேண்டும்.



மதுக்குவளை நரம்பினில் தான் முறுக்கை
ஏற்றும்!
மயக்குமிசை செவிகளுக்கே சுகத்தைச் சேர்க்கும்!
நதியோட்டம் பயிர்களுக்கே மகிழ்ச்சியூட்டும்!
நறுங்கனிகள் நாவுக்கே சுவையைக் கூட்டும்!
மதியின் உலா காதலர்க்கே இன்பம் காட்டும்!
மழலைமொழி தளிர்வயதில் எழிலாய்க் காணும்!
எதிரில்லாப் பனுவல்களே!
நீங்கள் நித்தம்
எடுத்து வைக்கும்
இன்பத்திற்கிணைதான் ஏது?





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உலக மாற்றத்தை தடுக்கின்ற உவகை அணிகள்

*ஆக்கம்,*
*செ.விதுர்சன், தமிழ் ஆசிரியர்.*

இயற்கையின் பொருத்தமான நிலவுகை என்பது உயிர்கள் தாம் கொண்டுள்ள தனித்துவ அம்சங்களினூடாக அல்லது தமக்குப் பொருத்தமாக அமையக் கூடிய இயல்புகளை உருவாக்கி ஜீவிப்பதனூடாகவே சாத்தியமாக அமைகின்றது. இந் நடைமுறையே மிகவும் பொருத்தமானதும் மாறுபாட்டு நிலைமைகளைப் புரிந்து அவற்றைக்கொண்டு தக்கனவாகப் பிழைத்துக்கொள்ளவும் உயிரிகள் தமது தனித்தனி இயல்புகளைக் கைக்கொண்டு சார்புகள், நகல்நிலை இயக்கங் களைத் தவிர்த்தும் இயங்குவதே உசிதமானதாகும்.

**சிந்தித்துப்பாருங்கள்................**

ஒரு வீட்டில் வளர்கின்ற சுவர்ப்பல்லி தன்வம்சாவழி மூப்பான முதலையின் இயல்பைப் போல வாழ சபதம் கொண்டால் அதன் நிலை என்ன வாகும்.......? மனிதர்களாகிய எம்முடைய நிலைப்பாடு பல்லியுடன் எவ்வாறு அமையும்.......? நாம் ஆசையாக வளர்க்கின்ற நாய்க்குட்டி ஓநாய் போல இயல்பு பொருத்தி வாழ முற்பட்டால் விளைவுகள் எப்படி இருக்கும்?...... வீடுகளிலும், ஊர்த்தெருக்களிலும் வியாபித்துப் பல்கிப்பெருகிகாணப்படும் நாய்கள் தம்மை தமது முன்னோர்களாகிய ஓநாய்களாக நினைத்து அவற்றின் குணப்பாங்குடனே. வாழ எத்தனித்தால் மனிதர்களுடன் அவற்றால் இணைந்து ஜீவிக்க முடியுமா.......?

ஒன்றில் மனித நெருக்கீட்டினால் நாய்களினம் அழியும். இல்லையேல் நாய்களிடம் கடிபட்டே மனிதஇனம் மடியும். இவற்றில் ஒன்று அல்லது இரண்டுமே சாத்தியமானவையாக மாறும் என்பதை நீங்கள் ஆமோதித்தே ஆகவேண்டும். ஆனால் மனிதர்களின் தேவைகளையும் இயல்புகளையும் அறிந்து அவர்களின் வாஞ்சைகளிற்கு ஏற்ப தம்மை மாற்றி தமது மூதாதையர் வழிச்சார்பை விடுத்து தமக்கென பிரத்தியேக இயல்புகளை உருவாக்கிக்கொள்ள மனதர்களுடன் மாறுதல் களை உள்வாங்கி நாய்கள் எவ்வளவு சாமர்த்தியமாக வாழப்பழகிக் கொண்டுள் ளன.

இவ்விடயம் ஐந்தறிவு ஜீவராசிகளுக்கு மட்டும் பொருந்தும் ஒன்றல்ல. மனிதர்களும் இவற்றைப்போல பொருத்தப்பாடடைய வேண்டும். குழந்தை ஒன்று பிறந்து நான்குவயதை அடைந்தவுடனே குழந்தையின் கல்வி தொடர்பான பேச்சுக் கள் குடும்பத்தில் கலகலக்க ஆரம்பிக்கும் அது ஒன்றும் தவறில்லை. ஆனால் நான்கு வயதுக் குழந்தைக்கு நாற்பது மூதாதையர்களின் உவமை காட்டி அக்குழந் தையின் சுய இயக்கத்திற்கு முட்டுக்கட்டை போடுவதே தவறாகும்.

பாட்டியார் பேரனை அணைக்கும் போதெல்லாம் "தாத்தாவைப் போல இவனை வாத்தியார் ஆக்கிவிடவேண்டும்." என்பதும். பெற்றதாய் "என் தம்பி போல இவனை பொறியியல் மேதை ஆக்க வேண்டும்" என்பதும் இவற்றை யெல்லாம் தாண்டி தந்தையின் மனதில் பல உவமை உருபுகளில் தொகுக்கப்பட்ட



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புகைவண்டிகள் கடகடக்கும் கடுகதியில் ஓடிக்கொண்டிருக்கும் அப்துல்கலாம் போல ஆக்கிவிடு ஆக்கிமிடிஸ் போல ஆக்கிவிடு அப்பப்பா......!

உருவே உருவாகாத பச்சிளம் சிசுவைச் சுற்றி இத்தனை வரையறை போடப்பட்ட உவமை அணிகளா! இவைதான் அப்பிள்ளையின் நிலையையும், நிலவுகையையும் தீர்மானிப்பவையா....? இவ் அணிகளிற்கு யார்? இந்த உரிமையைக் கொடுத்தது வேண்டாம். உங்கள் அடுத்த தலைமுறைக்காவது உவமை அணிகளை திணிக்காதீர். ஆணிவரம்பைத் தாண்டி அவர்கள் பயணப்பட வேண்டும்.

உலக மாற்றவாதிகளை உவமை அணிகளால் சிறைப்பிடிப்பதென்பது நியாயமில்லை. எதற்காக? ஒருவரின் நகலை ஒருவர் பின்பற்ற வேண்டும். அவரவர்க்கென்று தான் சுயஇயல்பு திறமைகள் உள்ளனவே. மூதாதையர்களின் அனுபவ அறிவை பிள்ளைகளிற்கு கொடுங்கள். அதில் தவறொன்றும் இல்லை. ஆனால் அவர்கள் போலவே இவர்களும் ஆக வேண்டுமென வழிப்படுத்துவது நாம் வாழும் கால கட்டத்திற்கு ஒவ்வாத செயற்பாடாகும். அவன் அவனாகவும் அவள் அவளாகவும் வளரட்டும்!

அப்துல்கலாமை உவமையணி பீடித்திருந்தால் அவர் இன்னொருவரின் நகலாகவே இருந்திருப்பாரே தவிர தனித்துவமானவராகக் கொண்டாடப்பட்டிருப் பாரா......? இக்கால உலகில் தனித்துவம் மாத்திரமே வெற்றி பெறுகின்றது. நகல்களோ சார்புகளோ அல்ல. தரம் பத்து மாணவன் ஒருவனை வகுப்பறையின் குழப்பவாதியாக அடையாளம் கண்டுவிட்டு அவதானித்தேன். கைகளில் சிறுசிறு மின்குமிழ்கள், மின்கடத்தும் உலோகங்கள் மின்கலங்கள் என்றவாறு அவனின் பரிவாரங்கள் இருந்தன.

"எமில்சன்" எப்போதும் இப்படித்தானென கூறி ஒரு கூட்டம் தம்மை நல்லவராகக் காட்டமுயன்றது. எரிச்சல் அதிகமாக, "ஏய் இரண்டாவது எடிசன் என்ற நினைப்பா" என்று கேட்டுவிட்டேன். நான் அதட்டலாக. இல்லை சேர், நான் முதலாவது எமில்சனாக நினைக்கிறேன்" என்றுவிட்டு சாவதானமாக இருந்தான். அவன் நான் கூறவிளைவதும் இதைத்தான். இந்த சம்பவத்தில் நான் பார்த்த மாணவன் உவமை வரையறை கடந்தவன். அவனிடம் யாரும் திணிப்பு களை மேற்கொள்ளவில்லை.

பிள்ளைகளை ஒருபோதும் உவமை காட்டி வளர்க்க வேண்டாம். அவர்கள் ஒப்பாரும் மிக்காரும் அற்றவராகவே வளரவேண்டும். ஒப்பிட்டு ஒப்பிட்டு அவர் களின் உயர்ச்சிக்கு நீங்களே வரம்பு கட்டிவிடாதீர்கள். நீங்கள் யாரை? ஒப்புமை காட்டி வளர்க்கிறீரோ அவர்கள் சென்ற வரையறையுடன் பிள்ளையும் தனது முயற்சியை நிறுத்தி திருப்பதிப்பட்டுவிடும். அதனால் மாற்றங்கள் ஏதும் நிகழாது. நாட்டின் எதிர்பார்ப்புகளும் ஈடேறாது. **"உவமை காட்டுவது என்பது மனித உயர்விற்கு இடையூறு" என்பதே எனது வாதமாகும்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உன்னத அன்பு

*ஆக்கம்,*
*சி.ஹோசாயினி,*
*(2021 Bio)*

குகன் சிறிய வயதில் தனது தந்தையை இழந்த ஒரு ஏழைக் குடும்பத்தின் மூத்த புதல்வன் ஆவான். அவனின் தாய் ஒரு சாதாரண குடும்பத்தலைவி ஆவார். அவனுக்கு இரண்டு தம்பிகளும் ஒரு தங்கையும் இருக்கின்றனர். தந்தை இருக்கும் வரை வறுமை என்ற சொல்லையே கேட்டிராத குடும்பத்தின் சூழ்நிலை குகனை வேலைக்கு செல்ல உத்தரவிட்டது. தனது தாயினதும் சகோதரர்களினதும் நலன் கருதி சிறு வயதிலேயே தனது படிப்புக்கு முற்றுப்புள்ளியிட்டு கூலி வேலைக்கு சென்றான் குகன்.

அப்போது குகனிற்கோ வயது பதினாறு படித்து விளையாடி நண்பர்களுடன் குதூகலமாக நாட்களை கழிக்க வேண்டிய வயது அது, ஆனால் அவன் கடும் வெயில், மழையை கூட சற்றும் பொருட்படுத்தாது தன் குடும்பத்திற்காக தன் உடம்பை வருத்தி உழைத்துக் கொண்டிருந்தான் குகன் ஒரு சிறுவன். அவனுக்கு எவ்வளவு சம்பளம் கிடைத்துவிடப்போகிறது? ஆனாலும் அந்த சிறு தொகைப் பணத்தை வைத்து குடும்பத்தை ஒருவாறு நடத்திக் கொண்டிருந்தாள் குகனின் தாய்.

குகனின் ஒரே லட்சியமாக இருந்தது தனது சகோதரர்களை ஒரு நல்ல நிலைக்கு கொண்டுவர வேண்டும் என்பது தான். குகன் படும் கஷ்டத்தையும் குடும்ப சூழ்நிலையையும் நன்கு உணர்ந்த சகோதரர்கள் தமது முழுக்கவனத் தையும் கல்வியிலே செலுத்தினார்கள். வருடங்கள் சில கழிந்து சென்றன. சகோதரர்கள் உயர்தர கல்வியிற்கு அடி எடுத்து வைத்தனர். அவர்களின் கல்வி சார்ந்த செலவிற்கே குகனின் சம்பளம்போதவில்லை. இந்த நிலமையை சமாளிக்க குகன் பகலில் கூலி வேலையும் இரவில் காவலாளி வேலையும் செய்தான்.

குகன் வேலை செய்யும் இடங்களில் இருந்த சில நண்பர்கள் " நீ இப்போது உன் சகோதரர்களுக்காக உழைக்கின்றாய். ஆனால் அவர்கள் நல்ல நிலமைக்கு வந்த பின்பு உன்னை கைவிட்டு விடுவார்கள்" என்று குகனிடம் கூறினார்கள். வேறு சிலர் "உன் சகோதரர்களுக்கு மனைவி, பிள்ளைகள் வந்த பின் நீ அவர்களின் வாழ்க்கையில் இருந்து தூக்கி எறியப்படுவாய்" என்றனர். இவர்களுக்கெல்லாம் தன் புன்னகை மூலம் பதில் கொடுத்தான் குகன். நான் இப்போது எப்படி உழைக்கிறேனோ அதேபோல் கடினமாக என்றும் உழைக்க வேண்டும் என மனதிற்குள் நினைத்துக் கொண்டான். தனது தம்பிகள் மற்றும் தங்கை தன்னை ஒருபோதும் வெறுத்து ஒதுக்கமாட்டார்கள் என்பது அவன் மனதில் ஆழமாக பதிந்துவிட்டது.

குகனின் முதலாவது தம்பி சரண் மருத்துவத் துறைக்கு தெரிவானான். குகனுக்கு தலைகால் புரியாத அளவிற்கு சந்தோசம். ஏதோ தானே மருத்துவர் ஆனது போல் இருந்தது அவனுக்கு. குகன் வேலை செய்யும் இடத்திற்கு அருகில் கடை வைத்திருந்த "தங்கராசா" எனும் குகனின் உயிர்த்தோழன் குகனின் நல்ல



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உள்ளத்தையும் உழைப்பையும் கண்டு வியந்தான். அவன் குகனுக்கு ஏதாவது செய்ய விரும்பினான். ஒரு நாள் குகனை அழைத்து சுமார் இரண்டு இலட்சம் பெறுமதியான பணத்தை கொடுத்து சுயமாக தொழில் ஒன்றை தொடங்கும்படியும் உன்னால் எப்போது முடியுமோ அப்போது இந்தப் பணத்தை திருப்பிக்கொடு என்றும் கூறினான்.

முதலில் மறுத்த குகன், தங்கராசாவின் வற்புறுத்தலின் பேரில் வாங்கச் சம்மதித்தான். தன் இரு கையையும் கூப்பி அவனுக்கு நன்றியும் தெரிவித்தான். குகன் அந்த பணத்தை வைத்து படிப்படியாக தொழிலில் முன்னேற்றமடைந்து விட்டான். அவனது குடும்பம் வறுமைப் பிணியில் இருந்து மீண்டது. குகனின் இவ்வளர்ச்சியைப் பார்த்து ஊர் மக்கள் வியந்து பாராட்டினர். குகன் தனது அன்புத் தங்கைக்கு வெகு விமர்சையாக திருமணம் செய்து வைத்தான். குகனின் இரண்டாவது தம்பி அருண் பொறியியலாளர் ஆனான். குகனின் இலட்சியம் இனிதே நிறைவேறியது.பின்னர் அவன் தனது நண்பன் தங்கராசாவிடம் வாங்கிய பணத்தையும் அவனுக்கு தேவையான எல்லா உதவிகளையும் அளித் ் ான். ஊர் மக்களுக்கும் தேவையான உதவிகள் பலவற்றை செய்தான்.

வருடங்கள் பல உருண்டோடின. நண்பர்கள் சொன்னது போல் சகோதரர் களுக்கென குடும்பங்கள் வந்தன. ஆனால் அவர்கள் கூறியது போல அண்ணன் மேல் உள்ள அன்பு சிறிதளவும் தம்பிகளுக்கு குறையவில்லை. குகனின் தொழி லில் வரும் இலாப நட்டங்களை தம்பிகளும் பகிர்ந்து கொண்டு அவனுக்கு உதவி செய்தனர். குகனின் சகோதரர்கள் குகனை தம் தெய்வமாக மதித்து, அவனுடன் நேர்மையாக, சந்தோசமாக வாழ்ந்து வந்தனர்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாடசாலையில் கழியும் எமது உன்னதமான காலம்

*ஆக்கம்,*
*க.அபிநயன், (தரம்-11)*

இறைவன் அருள் பெற்று இப்புவிதனில் எம் தாய் தந்தையர் மூலம் சிறு பூவாய் வந்துதித்தோம். முதல் வருடம் தாய் தந்தையர் உறவினர் கரங்களில் விளையாடித் திரிந்தோம். இரண்டாம் வருடம் இல்லம் எனும் எமது முதல் பாடசாலையில் சிறிது சிறிதாய் நடை பழகினோம். பின்னர் மெதுவாக எமது திருவாய் திறந்து எம்மால் முடிந்ததை சொல்லப்பழகினோம். நாம் சிறிது சிறிதாய் கற்றவற்றை கண்டு மகிழ்ந்தவர் எம் தாய் தந்தையைப் போல் பலர். இவ்வாறான கற்றல் எமது கருவிலேயே தாய் மூலம் கிடைக்கப் பெற்றது என்றால் அது என்றும் மிகையாகாது. இவ்வாறாக காலம் கடந்தோடியது. நாம் மூன்று வயதை எட்டியதும் பாடசாலையின் தொடக்கமான முன்பள்ளி எனும் ஆலயம் அன்போடு அழைத்தது.

முதன் முதல் முன்பள்ளி எனும் பாடசாலை சென்றபோது எமது கண்களி லும் எமது தாயின் கண்களிலும் நீர் ததும்பியதற்கு காரணம் இருவரிடத்திலும் வேறுபடுகிறது. எவ்வாறு எனின், தாயின் கண்ணீருக்கான காரணம் இன்று முன்பள்ளியில் கால் பதிக்கும் தன் மகன் என்றோ ஒரு நாள் இந்த சமுதாயம் போற்றுகின்ற மாமனிதனாய் வெளிவருவான் என்று எண்ணியதன் மூலம் உருவான ஆனந்தக்கண்ணீர் அது. "ஈன்ற பொழுதில் பெரிதுவக்கும் தன் மகனை சான்றோன் எனக்கேட்ட தாய்" என்கின்ற கூற்று இதற்கு பொருத்தமானதே ஆகும். ஆனால் எமது கண்ணீருக்கான காரணம் புதுமையானது. அன்று என்ன அறியும் அந்தப்பிஞ்சு நெஞ்சு. தாய் தந்தையை பிரியாது இத்தனை காலமும் வாழ்ந்து விட்டு திடீர் என்று பிரிய வேண்டும் என்றதும், தான் செல்லும் இடம் தனக்கு எவ்வாறு அமையப்போகிறது என்றும் பயத்தினால் வெதும்பிய நெஞ்சை ஆற்ற வடித்தது அன்று எம் கண்கள் கண்ணீர்.

முன்பள்ளிக்குள்ளும் அதனை தொடர்ந்து பாடசாலைக்குள்ளும் சென்றதும் என்றும் கண்டிராத முகங்கள் எம் எதிரே நின்று எம் தாயைப் போன்று அரவணைத்து அன்பு செலுத்தியது ஆசிரியர் எனும் இனிதான உறவு. அன்று அவர் பாடசாலையிலும் எமக்கு தாய் தந்தை உண்டு என எமக்கு உணர்த்தினார்.

புதிதாக கிடைத்தது இந்த உலகில் கிடைப்பதற்கு அரிதான உறவான நட்பு. அந்த உறவு எம்மிடத்தே உருவாக்கிய உணர்வுகள் புதிதானதும் அற்புத மானதாகவும் தோன்றியதால் அந்த உறவுக்காகவே தினமும் பாடசாலை சென்றோம்.

பாடசாலையில் எமக்கு தாய் தந்தை கிடைத்ததை போலவே பல சகோதரர் களையும் தந்தது பாடசாலை. அத்துடன் நண்பர்களையும் தந்தது. அதன் அடிப்ப டையில் பாடசாலை என்பது ஓர் கூட்டுக்குடும்பமாகும். இதுவரை இத்தகைய குடும்பத்திற்கு நிகரான வேறு ஒரு குடும்பம் இவ் உலகில் இல்லை என்று தான்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கூறமுடியும். அக்குடும்பம் அன்பையும் அரவணைப்பையும் நாம் நல்வழியில் செல்வதற்கு வாரி வழங்கியது. அத்துடன் பாடசாலை நாம் தவறான வழியில் செல்லும்போது அலைபாயும் எம் மனதிற்கு கண்டிப்பு என்னும் அங்குசம் கொண்டு நிறுத்தவும் தவறவில்லை. நட்பு எனும் உன்னதமான உறவை பெற்று தந்ததும் பாடசாலையே. பல்வேறு தனித்துவமான சிறந்த மனிதர்களைக் கொண்டது எம் பாடசாலை. அந்த வகையில் ஒவ்வொருவரதும் தனித்துவத்தையும் உணர்ந்து கொள்வது எமது தலையாய கடமை எனலாம்.

பாடசாலைக்கு நாம் செல்வது பல புத்தகம் படித்து பண்டிதர் ஆவதற்கு அல்ல. எம்மை நாம் கற்பதற்காகவே ஆகும். நாம் யார் என்று எமக்கு போதிக்கும் இடமே பாடசாலை ஆகும். எந்த ஒரு மாணவன் தன்னையும் வாழ்க்கையையும் கற்று அறிகிறானோ அவனே வாழ்க்கையில் உயர்வைப் பெறுகிறான். இவ்வாறாக எமக்கு வாழ்வழித்த ஆலயம் பாடசாலை என்று போற்றப்படுகிறது. எமது வாழ்வில் பாடசாலையில் கழிந்த காலமே என்றும் அழியாமல் எம்முடன் நிலைத்திருக்கும்.

பாடசாலை உறவுகளே வாழ்வனைத்தும் எம்முடன் பயணிக்கும். இதனை எவரும் பாடசாலையில் கற்கும் காலங்களில் புரிந்து கொள்வதில்லை. பாடசா லையை விட்டு வெளியே சென்றபின்பே உணர்ந்து கொள்கிறோம். ஆனால் இன்று பாடசாலை செல்லும் எமக்கு காலம் அழித்த வரப்பிரசாதமே இந்த வைரஸ் தொற்று நோய் என்பேன். இத் தொற்று நோய் பட்டியில் அடைக்கப்பட்ட மந்தைகளாய் வீட்டினுள் முடங்கிக் கிடக்கையிலேயே புரிகிறது பாடசாலையின் உன்னதம். இதை இன்றே எமக்கு புரியவைத்த அக் கொடிய நோய்க்கு நாம் என்றும் நன்றிக் கடன்பட்டவர்களே. இதனை தான் ஆன்றோர் கூறினார்களோ **"நிழலின் அருமை வெய்யிலில் தெரியும்"** என்று.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இன்றைய இளைஞர்களும் எதிர்காலமும்

*ஆக்கம்,*
*த.கஜேந்திரன்,*
*(2020 Arts)*

இளமைப் பருவத்தை நம் முதியோர்கள்" ஓடுகின்ற பாம்பை கையில் பிடிக்கும் பருவம்" என்று வர்ணிக்கிறார்கள். இளங்கன்று பயமறியாது. "இன்றைய இளைஞர்கள் நாளைய தலைவர்கள்" என்றெல்லாம் பலர் சொல்லக் கேட்டிருக் கிறோம். ஆனால் இன்றைய நிலமையைப் பார்க்கும் போது நாம் கற்றுணர்ந்தவை எல்லாம் உண்மையா இல்லையா என்ற ஐயம் நம்மனதில் பெருக்கெடுத்து ஓடுகிறது. தற்கால இளைஞர்கள் சுதந்திரமாகவும் எவ்வித கட்டுப்பாடுகளும் இல்லாமல் இருப்பதை விரும்புகின்றனர்.

அவர்கள் தங்களின் இலக்குகளை அடைய உரிய வழிகாட்டுதல்களை எதிர்நோக்கிக் காத்திருக்கின்றனர். அதே நேரத்தில் தங்கள் சொந்த அனுபவங்கள் செயற்பாடுகள் மூலம் பாடம் கற்க விரும்புகின்றனர். அவர்களுக்கான பாதை கரடுமுரடாகக் காணப்படுகிறது. இன்றைய நிலையில் மூத்தோரிடம் காணப்படும் கடின உழைப்பும் தன்னம்பிக்கையும் இளைஞர்களிடத்தில் இல்லை. பொதுவாக இக்கால இளைஞர்கள் அறிவுத்திறன் மிக்கவர்களாக உள்ளனர். பொறுப்புணர்வு மிகுந்தவர்களாக தங்களை மாற்றிக்கொள்ள வேண்டும். பொறுமை சகிப்புத் தன்மையைக் கடைப்பிடிக்க வேண்டும்.



**"அரிது அரிது மானிடராய்ப் பிறத்தல் அரிது**
**அதனிலும் கூன், குருடு, செவிடு, நீங்கிப் பிறத்தல் அரிது"**

என்றார் ஔவை மூதாட்டி.

எந்தக் குறையுமின்றி இந்த அரிய பிறவியைப் பெற்றிருக்கும் இளையவர்க ளிடம் இளமைப்பருவத்திலேயே தன்னம்பிக்கையும் கடின உழைப்பும் குறைந்து காணப்படுவது வருத்தத்திற்குரியதாக உள்ளது. இன்றைய சூழலில் அறிவியல் ஞானமும் அதனால் விழைந்த தொழில்நுட்பங்களும் நாகரீக வளர்ச்சியும் வாழ்க்கை முன்னேற்றத்துக்கு தேவையான அத்தனை வசதிகளையும் பல்வேறு பரிமாணங் களில் வழங்கிக்கொண்டிருக்கின்றன. இன்றைய இளைஞர்களோ வெற்றிக்காகப் போட்டி போட்டுக் கொண்டிருக்கும் பலரோடு முயற்சியுடனும் தன்னம்பிக்கையுடனும் போராடாமல் "எப்படியும் தோற்கத்தான் போகிறோம்" என்று சோர்வடைகிறார்களே தவிர வெற்றியை அடைய வேண்டுமென கடினமாக உழைப்பதில் நாட்டம் காட்டுவதில்லை. இன்றைய இளைஞர்கள் சிலர் தன்னை ஒரு "ஹீரோவாக" சித்திரித்து வாழ்கின்றனர். மொபைல் போன், இன்ரநெட், பேஸ்புக் உலகிலேயே வாழ்கின்றனர்.

வாழ்க்கையை அவர்கள் எதிர்கொள்வதில் நான்கு பிரதான சவால்கள் உள்ளன. வேலைவாய்ப்புக்கு உத்தரவாதம், பிறரோடு ஒப்பிட வேண்டாம், உடல் பருமன், பிறரின் அனுபவம் போன்று இவ்வாறான சவால்கள் இளைஞர்களின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கண்முன்னே உள்ளன. வாழ்க்கை என்பது ஒரு விளையாட்டுப் பொருளாகக் கருதுவோமானால், வாழ்நாள் முழுவதும் நாம் விளையாடிக்கொண்டுதான் இருக்க வேண்டும். இன்றைய பெருவாரியான இளைஞர்கள் பலவீனமாக இருப்பதற்கு தைரியம் இன்மையே காரணம். நன்கு படித்து நன்மதிப்பெண் பெற்றிருக்கும் வாழ்க்கைச் சிக்கல்களுக்கு தீர்வு காண முடியாமல் பலர் திணறுகின்றனர். இந்த நூற்றாண்டை நோக்கும் போது தவறு செய்பவர் பட்டியலில் அதிகம் இடம் பெறு பவர்கள் படித்தவர்களாகவே இருக்கின்றார்கள்.

இந்த நிலை மாற கடும் உழைப்பு, சரியான சிந்தனை மூலம் வெற்றிகரமான தொழில்முனைவோராக மாறிய இளைஞர்களின் அனுபவ வரலாற்றைப் படிக்க வேண்டும். அதிலிருந்து பல விடயங்களைக் கற்றுக்கொள்ள முடியும். கல்வி கற்கும் போது, சாதிக்க வேண்டும் என்ற எண்ணம் இருந்தாலும் நாட்கள் செல்லச் செல்ல பலரிடமும் அது காணமல் அவர் சாதிக்க விரும்பியதை, அவர் சிந்தைக்குள் புகுத்தி, மனதில் இருத்தி அதை அடையத் தேவையான முயற்சியையும் உழைப்பையும் மூலதனமாகப் போட வேண்டும்.

"கடலலை கரையைத் தன்னுள் விழுங்கிவிட வேண்டும் என்று எண்ணு வதால் தான் அது ஓயாமல் கரையை நோக்கி வந்து கொண்டிருக்கிறது" அதைப் போல இன்றைய இளைஞனும் தான் சாதிக்க எண்ணியதை அடைய விடாது முயற்சி செய்ய வேண்டும். நினைத்ததை அடைய, கடலலை குமுறுவதைப் போல், இளைஞர்களும் தங்களுக்குள் குமுறிக் கொண்டே இருக்க வேண்டும். அப்போது தான் அவர்களுக்கு தன்னம்பிக்கை பிறந்து சாதிக்க வேண்டும் என்ற எண்ணம் தோன்றி நினைத்ததைச் சாதிக்க முடியும்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மனிதம்

*ஆக்கம்,*
*ச.லக்சிகா,*
*(2021 BIO)*
***உதவி சிரேஷ்டமாணவ தலைவி.***




இன்றைய நவீன உலகில் மனிதனின் வாழ்க்கை பல சவால்களை எதிர்கொண்டு முன்னேறிச் செல்ல வேண்டியுள்ளது. போட்டி நிறைந்த சிக்கலான வாழ்க்கை நீரோட்டம் பல தடைகளைத் தாண்டிப் பயணிக்கின்றது. நாமும் நம் குடும்பமும் என்பதைத்தாண்டி நம்வீடு நம் நாடு என்பதையும் கடந்து நம் உலகம் என வாழவேண்டியுள்ளது. நம் வாழ்க்கைப் பயணத்தில் நாம் கடந்துசென்ற சில ஆண்டுகளை மீட்டினால், வன்னி நிலப்பரப்பை போர் மேகம் சூழ்ந்து எறிகணை மழை பெய்த யுத்தகாலம் அது. உயிர்காக்க ஊர் விட்டு ஊரோடி உயிர் வாழ இடமின்றி கூடாரங்களை காதலித்த காலம் அது.

பசுமையாக வளர வேண்டிய மரங்கள் எல்லாம் வாடிக்கிடந்தது நம் நாட்டில். மரங்கள் மட்டுமா? மனங்களும் தான். சிறகு விரித்து பறக்க வேண்டிய சிட்டுக்குருவிகள் நாம் சிறகொடிந்து வீழ்ந்தோம். புத்தகங்களை சுமக்கும் நேரத்தில் யுத்தக் காயங்களை சுமந்தோம். தாயின் தாலாட்டில் உறங்க வேண்டிய நாம் வெடிபொருளின் சத்தத்தில் விழித்திருந்தோம். காகிதமில்லாத ஓவியமானது வறுமை. எம் இரு பாதங்கள் மண் மீது நடந்தே புண்ணாகின. சொத்துக்களை இழந்தோம். சுகத்தை மறந்தோம். நிம்மதி இழந்தோம். நித்திரை கலைந்தோம். உன்னத உறவுகளை இழந்தோம். இதில் குழந்தைகளாகிய எம் தவறென்ன?

எங்கு பார்த்தாலும் ஏற்றத்தாழ்வு. சமத்துவம் மறந்த உலகம். நீதியும் இல்லை. நியாயமும் இல்லை. மனிதத்தைத் தேடி வர மனிதமும் இருக்கவில்லை. தந்தியறுந்த வீணையாய் இருந்த எம் வாழ்க்கை இராகங்களை மீட்ட துணை புரிந்தது பள்ளிக்கல்வி. நூலறிந்த பட்டம் போலான எம் வாழ்வின் வடுக்களை மறைய வைத்த மருத்துவர்கள் எம் அன்புமிகு ஆசான்கள். கண்ணுக்கு புலப்படும் வெடிபொருளுக்கு அஞ்சி வீட்டைவிட்டு ஓடினோம் அன்று. கண்ணுக்கு புலப்படாத கொரோனா வைரசுக்கு அஞ்சி வீட்டினுள் முடங்கினோம் இன்று. காலங்கள் மாறலாம். காட்சிகளும் மாறலாம். மனித இனத்தின் அழிவு மட்டும் மாறவில்லை.

விதிக்கு ஏற்றாற் போல் நம்மை மாற்றிக் கொள்ளத்தான் முடியுமே தவிர விதியை மாற்ற யாராலும் முடியாது. இப்புவி நமக்கு மட்டும் சொந்தம் என்ற கர்வத்தில் மண்ணாசை பொன்னாசை கொண்டீர்கள் காடுகளை அழித்தீர்கள். இங்கு வாழ்ந்த விலங்கினங்களை விரட்டியடித்தீர்கள். மனிதம் கொண்ட யாராவது கேட்டால் வலிமையள்ளவைதான் வாழமுடியும் எனக்கூறி வாயை அடைத்தீர்கள். மாந்தர்கள் நாம் சமத்துவம் மறந்தாலும் நம்மைப் படைத்த இறைவன் அதை நினைவுபடுத்த மறந்துபோகவில்லை. சமத்துவம் கற்றுத்தர கொடூரமாய் வந்துதித்த





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொரோனா. இப்போதும் உறவுகளை இழந்தோம். இதில் குழந்தைகளாகிய எம் தவறென்ன??

ஜாதி மத வேறுபாடு பார்க்கவில்லை. ஆண்டான் அடிமை எனப் பிரிக்கவில்லை. ஏழையா, பணக்காரனா என கேட்கவில்லை. படித்தவன், பிடித்தவன், பாமரன் என சிந்திக்கவும் இல்லை. அனைவர் உயிரையும் கவர்வதில் சமநீதி பேணியது கொரோனா. ஆனாலும் சுத்தமற்ற மனிதனை சுத்தம் செய்ய வைத்தாய். ஊடகம், நாடகம் சொல்லி கேட்காதவன் முன்னால் ஒழுக்கத்தை கற்றுக்கொண்டான். மதுக்கடை இன்றி வாழமுடியும். சினிமா இன்றி வாழஇயலும் வழிபாட்டுத் தலமின்றி கடவுளை வழிபட முடியும். ஜாதிபேதமின்றி ஒற்றுமையாக வாழ முடியும். ஆனால் மருத்துவமும் விவசாயமும் இன்றி வாழமுடியாது எனப் புரிய வைத்தாய்.

"சிறுவர்களாய் இருக்கும் போது பென்சில் உபயோகித்தோம் பெரியவரான பிறகு பேனா உபயோகிக்கின்றோம். ஏன் தெரியுமா? சிறு வயதில் செய்யும் தவறுகளை அழிக்கமுடியும். வயதானபின் செய்யும் தவறுகளை அழிக்க முடியாது" இதை சொல்லித் தந்தது நம் பள்ளிக் கல்வி. என் இனிய உறவுகளே சுட்டு விரலில் சுற்றும் உலகிலே சுழன்று கொண்டிருக்கும் நீங்கள் இனியும் தவறிழைப்பதை தவிர்த்து, ஒரு கணம் நின்று சிந்தியுங்கள். தங்கத்தையும் பூட்டி வைத்தீர்கள். வைரத்தையும் பூட்டி வைத்தீர்கள். உயிரைப்பூட்டி வைக்க பூட்டு ஏது? இந்தப் பூமி சமம் நமக்கு நம் தெருவுக்குள் மதச்சண்டை, ஜாதிச்சண்டை வம்பெதற்கு?

முடிவெட்டும் தொழில் செய்யும் தோழன் இல்லையேல் நமக்கெல்லாம் ஏது அழகு? நதி நீரில் நின்று துணிதுவைக்கும் தோழன் இல்லையேல் மறையுமா உடை அழுக்கு? எத்தொழில் செய்தால் என்ன? செய்யும் தொழில் தெய்வம் என நினைப்பவனே மனிதன். தாய், தந்தையைத் தேர்ந்தெடுக்கும் உரிமை எம்மிடம் இல்லை. முகத்தை, நிறத்தை தேர்ந்தெடுக்கும் உரிமை எம்மிடம் இல்லை. பிறப்பு, இறப்பு தேர்ந்தெடுக்கும் உரிமை எம்மிடம் இல்லை. எம் வாழ்க்கை எம் கையில் அதை நாமே வென்றெடுக்க முனைவோம்.

அடிமைத்தனம் ஒன்று இல்லையேல் பாவச்செயல் என்பது இருக்காது. மேகம் மிதந்தாலும் காகம் பறந்தாலும் ஆகாயம் அழுக்காவதில்லை நண்பா. அன்பையும் அறிவையும் இனியும் நமக்குள் முடக்கி வைக்காமல் பிறருக்கு உதவி புரிய முன்வருவோம். உயிர்களை இழந்தது போதும். உறவுகளை இழந்தது போதும். அன்பு ஒன்றே மெய்யாகும் என உணர்வோம்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# VERY IMPORTANT RESOURCE UNDER SIEGE
# COMPUTER VIRUS

*Ganeshwaranathan Araniyan*
*E-TECH (2020)*

## கணினி வைரஸ்

கணினிக்கு பாதிப்பை ஏற்படுத்தும் நோக்குடன் ஒரு தனிநபர் அல்லது ஒரு நிறுவனத்தினால் உருவாக்கப் படும் மென்பொருட்கள் கணினிவைரஸ் என அழைக்கப் படும்.



## கணினி வைரஸ் இன் தாக்கங்கள்

* கணனியிலுள்ள தரவுகளை மாற்றக்கூடிய இதனால் தரவுகளின் செம்மை பாதிக்கப்படலாம்.
* சில வைரஸ்கள் கணினியை முற்றாக செயலிழக்க செய்யும்.
* சில வைரஸ்கள் பெரிய அளவில் பாதிப்பை ஏற்படுத்தாது பெறக்கூடியன.
* வேறு சில கணினி வைரஸ்கள் கணினியில் உள்ள program file இனை அழித்து விடக்கூடியன.





முதலாவது கணினி வைரஸ் பாகிஸ்தானைச் சேர்ந்த இரட்டையர்கள் 1986ஆம் ஆண்டு உருவாக்கப்பட்டது





## கணினி வைரஸ் இன் தாக்கங்கள்

- குறும்பு
- மென்பொருட்கள் பிரதி செய்யப்படுவதை தடுத்தல்
- பழிவாங்கும் நோக்கம்
- அரசியல் பயங்கரவாத நோக்கங்கள்
- மென்பொருட்களை உருவாக்கும் நிறுவனங்களுக்கு இடையிலான போட்டி.

## கணினி வைரஸ் பரப்பப்படும் வழிமுறைகள்

1) Floppy Diskkette,Flash Memory
2) Tape Backups
3) Internet
4) Internet/Net Works
5) Softwares



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கணினி ஒன்றின் வைரஸ் பாதிப்பிற்கான அறிகுறிகள்

- program செய்யப்படுவதற்கு அதிக நேரம் எடுத்தல்
- floppy Diskette drive, hard disk, drive, flash என்பன பயன்படுத்தப்படாத போதும் அவை இயங்கிக் கொண்டிருத்தல்.
- எங்கிருந்து பெறப்பட்டன என அறியாத சில புதிய files கணினியில் காணப்படுதல்.
- கணினி அல்லது keyboard இருந்து புதிய சத்தங்கள்/ ஒலிகள் தோன்றுதல்
- Program களின் size மாறுபடுதல்

## கணினி வைரஸ்களின் வகைகள்

1. Boot Virus
2. File Virus
3. Macro Virus

## Boot Virus

Boot virus ஆனது hard disk இன் bootsector தாக்கம் கணினி On செய்யப்படும் ஒவ்வொரு தடவையும் அது செயற்படுகின்றது. இவ்வாறு boot virus ஆனால் கணினி பிடிக்கப்படும் கணினி சீராக start ஆவது கடினமாகிறது. பெரும்பாலும் boot virus கள் floppy diskette இலுள்ள boot sector இலிருந்து hard disk இன் boot sector இற்கு பரவுகின்றது. இதன்போது boot virus கணினியின் main memory இல் தங்கியிருக்கும்.

## File virus

இவ்வகையான File virusகள் executable file களுடன் இணைந்து காணப்படு கின்றது. ஒவ்வொரு தடவையும் program wxecute செய்யப்படும் போது அவை செயற்படுகின்றன.

## Macro virus

Macro virus எனப்படுவது ஒன்றோடொன்று தொடர்பான application instruction தொகுதியாகும்.

Eg=> word ஆவணத்தை format செய்வதற்கான bold, underline,alignment போன்ற கட்டளைகளின் சேர்மானம் இதன் மூலம் பரவும் virus ஆகும்.

## Macro virus களின் பாதிப்புக்கள்

- வழமை அற்ற செய்திகள் (unusual message)
- தரவுகளின் இழப்பு (lost data)
- இனங்காணப்படாத macro கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## TROJANS

- இவை குறித்த காலம் வரை காத்திருந்து பாதிப்பை உண்டாக்க வல்லன.

## WORMS

- இவை பெருகக் கூடியன இதனால் hard disk விரைவாக பாதிக்கப்படுவதுடன் hard disk இல் உள்ள தரவுகளும் செய்திகளும் அழிந்து விடக்கூடியன. இவற்றின் பாதிப்புகள் பெரிய அளவில் காணப்படுகின்றன.

## இன்னும் சில கணினி virusகளும் அவற்றின் பாதிப்புகளும்

## SCOLDA

இது எளிமையான e-mail செய்திகளை அனுப்புகிறது.

## CAP

எல்லா ஆவணங்களும் word doc format இல் save செய்வதே இதன் தாக்கம் ஆகும் நீங்கள் எந்த வகையான format தெரிவு செய்யலாம். அவை doc வடிவிலேயே உள்ளார்ந்த ரீதியாக save செய்யப்படும்.

## NIMDA



இது சிக்கலான வைரஸ் ஆகும். இது README EXE என்ற ATTACHMENT உடன் பரவுகின்றது

## BLASTER

இதன் வைரஸ் C,D,E,F போன்ற driveகளில் காணப்படும் தரவுகளை அளிக்கக் கூடியது. மாதத்தின் ஒவ்வொரு 17ஆம் திகதியும் இது minny, Log என்ற file C drive இல் உள்ளதா என பரிசோதித்து அவ்வாறு இல்லாவிடில் autoexec, Bat file இன் இறுதியில் பல கட்டளைகளை சேர்க்கின்றது. இக் கட்டளைகள் கணனி restart ஆகும்போது C,D,E,F இல் உள்ள தரவுகளை அழிக்கக்கூடியது.

## JERUSALEM

இது மிகவும் பழமையானதும் பொதுவானதுமான வைரஸ் ஆகும். இது exe,com வகையான file களைத் தாக்குகின்றது

## ARAB

ARAB VIRUS கணினியில் Program execute செய்யப்படும் தடவைகள் கணக்கிட்டு அந்த எண்ணிக்கை 256 ஐ விட அதிகரிக்கும் போது hard disk ஐ "unbootable" ஆக்குகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## BIN LADEN

இதனால் பெரியஅளவுக்கு பாதிப்பு இல்லாவிடினும் இது சில செய்திகளை display செய்கின்றது.

## வைரஸ் தாக்கத்தில் இருந்து கணினியை எவ்வாறு பாதுகாக்கலாம்.

- anti virus ஐ பயன்படுத்துதல்
- சோதனை செய்யப்படாத வெளியில் இருந்து பெறப்பட்ட floppy diskette,flash memory களை பயன்படுத்துவதைத் தவிர்த்து அல்லது virus scan செய்த பின் பயன்படுத்துதல்.
- unauthorized அல்லது unchecked software கள் பயன்படுத்தல்
- இணையத்தில் இருந்து பதிவிறக்கம் செய்யப்பட்ட தகவல்களை virus scanக்கு உட்படுத்திய பின்னர் பயன்படுத்துதல்.
- காலத்திற்குக்காலம் Anti virus ஐ update செய்தல்.
- fair wall கள் பயன்படுத்துதல்.

## Anti Virus Software

Anti virus எனப்படுவது கணினியை virus தாக்கத்திலிருந்து தடுப்பதற்காக உருவாக்கப்பட்ட மென்பொருள் இது பொதுவாக இருவகைப்படும்.

01. ON ACCESS SCANNERS

02. ON DEMAND SCANNERS

## ON ACCESS SCANNERS

ஒவ்வொரு தடவையும் கணினி Start ஆகும் போது இது hard disk, diskette போன்றவற்றை சோதனை செய்கின்றது.

## ON DEMAND SCANNERS

இது பயன்பாட்டாளர்களின் வேண்டுகோளுக்கிணங்க அல்லது ஒரு குறிப்பிட்ட கால இடைவெளியில் கணினியை சோதனை செய்கின்றது.

## Anti virus மென் பொருட்களுக்கான உதாரணங்கள்

- MACAFEE ANTI VIRUS
- AVG ANTI VIRUS
- NORTON ANTI VIRUS
- PC-CILIN
- DR.SOLAMAN ANTI VIRUS



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஏழையின் ஆசை

*ஆக்கம்,*
*ஜெ.யதுஸா,*
*(11 B)*

ஒரு ஏழையின் சிரிப்பைக்காண விரும்பிய கடவுள் அவன்முன் தோன்றி உனக்கு என்ன வேண்டும் எனக்கேட்டார். ஆசையோடு பணம், செல்வம், தங்கம், வைரம்... என்றான் ஏழை. கடவுள் வலது கையின் சுட்டு விரலை நீட்டினார் அங்கிருந்த பீரோ தங்கமானது ஆனால் ஏழை பேசாமல் இருந்தான். கடவுள் மறுபடியும் விரலை நீட்ட அங்கிருந்த மேடை தங்கமானது. அவன் பேசாமல் இருந்தான். கடவுள் வேக வேகமாக அந்த அறையில் உள்ள பொருட்களை எல்லாம் தங்கமாக்கினார். அப்போதும் ஏழை சிரிக்கவில்லை சோர்ந்து போன கடவுள் ஏழையிடம் கேட்டார் இன்னும் உனக்கு என்ன வேண்டும் என்று எனக்கு அந்த விரல் வேண்டும் என்றான் ஏழை. கடவுள் மயங்கி விழுந்துவிட்டார்.







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விதி

போராடத்தான் வேணும் ஆனா நீ படிச்ச முட்டாள்களோட போராட வேண்டி இருக்கும். அதான் அனுபவத்தோட பள்ளிப்பாடத்தையும் சமூகத்திற்கும் உனக்கும் பயன்படுத்திற மாரி புரிஞ்சு படிக்கணும். நீ ஒரு லோயரா வந்து நிக்கேக்க தான் நான் பட்ட இத்தனை வேதனைகளும் காயங்களும் ஆறும். அதெல்லாத்தையும் மிஞ்சி என்ர பெயரை உன் மூலமா காலம் உச்சரிக்கணும். உன்ன மாரி அப்பாவ இழந்திட்டு தவிக்கிற எத்தனையோ குழந்தைகளுக்கு நீ ஒரு சாதனை முன்னோடியா இருக்கணும். பட்டினிகள் வாட்டி வதக்கினாலும் சாதிக்கலாம் என்டு உன் மூலமா அவை எல்லாம் அறியணும். என்ன மாரி கைம்பெண்ணா செக்கனுக்கு செக்கன் போராடி வாழ்ந்திட்டு இருக்கிறவங்கள நசுக்கிறவர்களுக்கும் வசைச் சொல்லால சீண்டிறவங்களுக்கும் ஏன் அடிமையாக்க என்டு நினைக்கிற மலினப்பட்ட மானுடங்களுக்கு எதிரா அந்த அநீதிகளுக்கு எதிரா குரலற்றவர்களாய் வலித்து ஆக்கப்பட்டவர்களின்ர குரலா நீ ஓங்கி ஒழிச்சி இனி அப்படி ஆக்கப்பட இருக்கிற ஒரு சமுதாயத்த இல்லாமப்பண்ணனும். என்ரஆசையை உன்ர அதே இலட்சியத்த நிறைவேற்றணும் என்டு நான் அவளுக்கு ஊக்கம் கொடுத்தாலும் அவளை அந்த சம்பவம் அந்த சொற்கணைகள் சுடு சாம்பலா தான் ஆக்கியிருக்கு இண்டு வரை.

கிரணங்கள் சுட்டெரிச்சதில நடு மத்தியானம் ஆகிப்போச்சு என்டு பிரமை தெளிஞ்சு எழும்பேக்க தான் அந்த தொட்டாவாடிகள் தைக்க மறந்து சோபை இழந்து தன் கைகளுக்கடியில் சிக்குண்டு கிடந்ததையும் கால்கை சிதைஞ்சு கிடந்த அந்த நாத்துகள் சிலதையும் கண்ணுற்றாள். இருப்பினும் சீண்டிவிட்டு சற்றும் சலனமற்று திரியிற எத்தனையாயிரம் தொட்டாவாடிகளைக் கடந்திருப்பின் வாழ்விலும் வயதிலும் வாய்க்கால் கரையில கைகால அலம்பிக் கொண்டு, முதல் முதலா பிள்ளைக்கு சீலை கட்டிற சந்தர்ப்பம் புதுச்சேலைதான் வாங்கணும். என்னோட சீலை கட்டிறத சமூகம் ஏற்காது நானும் அதுக்கு சம்மதிக்கமாட்டன் எண்டு தான் "நான் போகாம விடுறன் என்டாளோ?" அதான் அதே தான் அதால தான் அப்பிடி முடிவு எடுத்திருப்பாள்.

மற்றப்பிள்ளையள் எல்லாம் வளவி பூட்டி சிமிக்கி போட்டு மேனி மினுக்க என்டு பவுடரும் கிறீமும் போட்டு வாசத்துக்கு கண்டகண்ட ஸ்ப்பிரே எல்லாம் அடிச்சிட்டு வந்து பிரிஞ்சு போப்போற தருணமா இருந்தாலும் உவகைப் பொழுதுகளை மீட்டிப்பார்த்து கண்கள் பனித்து ஒருவரையொருவர் கட்டியணைத்து முத்தம் சிந்திப் பொழிஞ்சு புகைப்படங்கள் பிடிக்க பிடித்த ஆசிரியர்களையும் அதிபரோடை யும் தோழன் தோழிகளோடையும் என்று பரவச நிலைக்கு நிக்கிற நாளைலை அவளும் இதெல்லாம் பார்த்தவள் தான் அப்ப அவளுக்க எழில் முடிவை ஏத்துக்க முடியல, ஆனா நீ போ நான் காசுக்கு எப்படியும் இரண்டு நாளைக்குள்ள வழி பண்ணிடுவன் என்று வாக்கு கொடுக்கிறநிலையில அவள் இல்லை.நான் என்ர ஆத்தாட சீலைக்கு தான் புது ரவிக்கை தைச்சுத்தான் போட்டுட்டுப் போனான். அதைக்கூட என்ர பிள்ளைக்கு குடுத்து வைக்கல, எழில் எண்டு அந்த மனுஷன் பேர் வைச்சதுக்கு ஏத்தாப்பிள அவளும் குட்டி தேவதை தான். புடவைக்கு ஏற்பாடு பண்ணிற்றன்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எண்டா காணும் மிச்ச அலங்காரம் இல்லாமலே என்ர பிள்ளை பிரகாசிப்பாள். உண்மைதான் பிரியாவிடை கல்லூரிக்கு முற்றுப் புள்ளி தான்; சிலர் வாழ்க்கையில் அது தான் கண்ணீருக்கு முற்றுப் புள்ளி சிலர் வாழ்க்கையில் களிப்புக்கு முற்றுப் புள்ளி. **வாசல்ல உள்ள சாக்கில கால்வைச்சு துடைக்கேக்க**

**எழில்**

பாளையம் தன்மை செத்தும்
பாலனாம் தன்மை செத்தும்
காளையாம் தன்மை செத்தும்
காமுறும் இளமை செத்தும்
மீறும் இயல்பும் இன்னே
மேல் வரும் மூப்பும் ஆகி
நாளும் நான் சாகின்றாமல்
நமக்கு நாம் அழாதது என்னே!

எண்டு வியப்புக்கலந்த கேள்விக்குறியோடு தெளிவுரைக்கு நகர்கிறான்.......

**முற்றும்.**





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஆற்றல் கலை சமூக செயன்முனைப்புக் குழுமம்
## ஸ்கந்தபுரம், கிளிநொச்சி

AATTAI
1996

**சமூக வளர்ச்சிப்பாதையில் மீண்டும் புதுப்பொலிவுடன் 'ஆற்றல்' தனது கலை, சமூக பணிகளை செயன்முனைப்புடன் ஆரம்பித்துள்ளது.**

**'இளைய தலைமுறைக்கோர் இனிய வரம் ஆற்றல்'**

**ஆற்றல் குழுமத்தின்**
**பணி சிறக்க வாழ்த்துக்கள்**

கிளி / அக்கராயன் மகா வித்தியாலய
**ஐரோப்பிய பழைய மாணவர் ஒன்றியம்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொன்மொழிகள்

*ஆக்கம்,*
*J.திலக்சா,*
*(2021 Arts)*

- இலட்சியத்தை அடைய வேண்டுமானால் முதலில் ஆசையை விடவேண்டும். இல்லையென்றால் இலட்சியத்தை விட வேண்டும்.

- நேரம் வீணாகும் வரை உன் வாழ்க்கையும் வீணாகிக்கொண்டுதான் இருக்கும்.

- தடைகளால் தளர்ந்து போகின்றான் சாதாரண மனிதன் தடைகளை தகர்த்து போகிறான் சாதனை மனிதன்.

- எதிரிகளுக்கு எரிச்சல் வருகிறது என்றால் இலட்சியவாதிகளான நாம் சரியாக இருக்கிறோம் என்பதற்கான அடையாளம் அது.

- வருமானம் என்பது செருப்பு போன்றது அளவு குறைந்தால் கடிக்கும் அதிகரித்தால் நடக்க முடியாது.

- தெரியாத ஒன்றைத் தெரிந்து கொள்ளும் முயற்சியே கல்வி அது மகிழ்ச்சியாக வாழ்ந்துகாட்ட வேண்டும்.

- விளைந்து முடிந்த மரமொன்று தினம் தினம் பலன் கொடுத்தது கல்வியாக.

- ஆயிரம் சொந்தம் எம்மை தேடிவரும் ஆனால் தேடினாலும் கிடைக்காத ஒரே சொந்தம் நல்ல நண்பர்களே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முயற்சி

*ஆக்கம்,*
*பி.அமுதினி,*
*(2021 Bio)*

**முயற்சி என்பது ஒவ்வொரு உயிர்களின் வாழ்விலும் இருக்க வேண்டிய ஒன்றாகும்.**

"ஒவ்வொரு பறவை இனத்திற்கும் இறைவன் உணவை அளிக்கின்றார், ஆனால் அந்த உணவை அவர் அப்பறவையின் கூட்டிற்குள் கொண்டுபோய் வைப்பதில்லை" - ஹாலன்ட்"

ஆகவே அந்தப் பறவை தனது உணவைப் பெற்றுக்கொள்ள முயற்சி செய்ய வேண்டும். அவ்வாறு இல்லாது அந்தப்பறவை முயற்சியற்று கூட்டினுள் தங்குமாயின் பூமியின் மீதான அதன் வாழ்க்கை சாத்தியமற்றதாகும்.

இது போலவே ஒரு மனிதன் இப்பூமியில் ஜனனிக்கும் பொழுது அவனுடன் தேவைகளும் கூடவே உருவாகி விடுகின்றன. அம் மனிதன் தனது தேவைகளை நிறைவேற்றிக்கொள்ள இப்பரந்த பூமியில் தனக்குரியவற்றை பெற்றுக்கொள்ள தேடல் எனும் முயற்சியில் குதிக்க வேண்டும். உதாரணமாக, ஒரு குழந்தை தனக்கு பசி ஏற்படும் பொழுது தனது உணவை பெற்றுக்கொள்வதற்கு கதைக்க முடியாவிடினும் அழுகையின் மூலம் முயற்சி செய்கிறது. ஆகவே இப் பூமியில் வாழும் அனைத்து உயிர்களும் தமது பிறப்பை அர்த்தப்படுத்திக்கொள்ளவும், தமது வாழ்க்கையை முன்னெடுத்துச் செல்லவும் முயற்சி என்பது அவசியமாகிறது.

ஒருவன் எத்தனை வெற்றிகளை பெறுகின்றான் என்பதில் மட்டும் அல்ல முயற்சி. அவன் எத்தனை தோல்விகளை தாண்டி அந்த வெற்றிகளை பெறுகின்றான் என்பதிலேயே அந்த முயற்சியின் வலிமையை அறிய முடியும்.

**"ஒருவன் தனது வாழ்வில் எந்தப் பிழைகளையும் செய்யவில்லை என்றால் அவன் தனது வாழ்வில் எந்த முயற்சியையும் செய்யவில்லை" – அல்பேட் ஜன்ஸ்டீன்**

ஒரு முயற்சியை மேற்கொள்ளும் போது பலதடைகள், அவமானங்கள், தோல்விகள் என்பவற்றிற்கு முகம் கொடுக்க நேரிடலாம் எனினும் இவையே எமது வாழ்க்கையை சரியான பாதையில் கொண்டுசெல்வதற்குரிய வழிகாட்டிகளாகும். தடைகளை தகர்த்து அவமானங்களை தோற்கடித்து தோல்விகளை படிக்கல்லாக்கி முயற்சி எனும் ஆயுதத்தை கைக்கொண்டு வாழ்வை வெற்ற பெறுவதே சாதனை மனிதர்களின் வாழ்க்கைத் தத்துவமாகும். எனவே நாமும் சாதனை மனிதர்களாக உருவெடுக்க முயற்சியை கைக்கொண்டு முன்னேறுதல் அவசியமாகும்.

**"முயற்சி செய் முடியாவிட்டால் பயிற்சி செய் மீண்டும் முயற்சி செய் வெற்றி பெறுவாய்"**

**"முயற்சியே திருவினையாக்கும்"**




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org










Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நன்றியும் நிறைவும்

*ஆக்கம்,*
*சிவகுமார் சங்கவி,*
*சிரேஷ்டமாணவ தலைவி.*
*2020(கலைப்பிரிவு)*



**பிறந்து சிறந்த மொழிகளுக்கு மத்தியில் சிறந்தே பிறந்த எம் தாய்மொழியாம்**
**தமிழுக்கு தலை வணங்கி,**

**"காலத்தினாற் செய்த உதவி சிறிதெனினும் ஞாலத்தின் மாணப்பெரிது"**

என்றும் வள்ளுவரின் வாய்மொழிக்கேற்ப எமது வித்தியாலயத்தின் மாணவத்தலைவர்களின் தலைமையில் உருவாக்கப்பட்ட "குரிசில்" எனும் நூலினை வெளியிடுவதற்கு அனுமதி வழங்கிய எமது கல்லூரியின் முதல்வர் அவர்கட்கு முதற்கண் நன்றிகளைக் தெரிவித்துக்கொள்கின்றோம்.

அத்துடன் எமது சகலவிதமான செயற்பாடுகளிலும் பக்க பலமாக இருந்த பொறுப்பாசிரியர்களுக்கும் எமது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக்கொள் கிறோம். மேலும், தமது ஆக்கங்களையும், விளம்பரங்களையும் தந்துவிய மாணவர்கள் அனைவருக்கும் நன்றிகளை தெரிவித்துக்கொள்கிறோம். இந்நூலினை வெளியிடுவதற்கான பதிப்புக்கள் மற்றும் **"குரிசில்"** எனும் மலரினை உரிய காலத்தில் அழகுற அச்சிட்டு உதவிய "மாறன் மல்ரிகலர்" அச்சகத்தினருக்கும், சிறப்பான முறையில் எழுத்துக்களைக் கோர்வையாக்கிப் பக்க வடிவமைப்பினைச் செய்த திருமதி.ஜீ.தசாயினி அவர்களுக்கும் எமது நன்றிகள் அத்துடன் இந்நூலின் வெளியீட்டு விழா சிறப்புற நடைபெற சகலவழிகளிலும் உதவிய அனைத்து அன்புள்ளங்களுக்கும் எமது மனமார்ந்த நன்றிகளை தெரிவித்துக்கொள்கின்றோம்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org